# அதிகாரத்தைப் பங்கிடல்

## நமதுகாலச்சவால்

நிலைமை அறிக்கையும், பகுப்பாய்வும், செய்தியும்




இலங்கையில்

நீதிக்கும், சமாதானத்திற்குமான

உலக ஒத்துழைப்பு மன்றம்

இலங்கைக் குழு (உ.ஒ.ம/இ.கு)



04, ஆகஸ்ட், 2000

கிட்டிய எதிர்காலம் எவற்றை கொண்டுவரினும் இலங்கையின் பழைய அமைப்பு, அதன்மேல் அமிழ்த்தப்பட்ட பாரத்தை இலக்குவாக்காது என்பது தெளிவு.

இலங்கையில் கட்டி எழுப்பப்பட்ட அமைப்பு ஏற்கனவே நிறைவு செய்தவை, மாறும் உலகின் சூழ்நிலையிலும் நாட்டின் மக்களின் சித்தத்திலுமே தங்கியுள்ளது. இறுதியில் இலங்கையின் மக்கள் தமது எதிர்பார்ப்புக்கள், விருப்புக்களை உள்ளடக்கிய ஒரு அமைப்பை கட்டுவதற்கு தமது சொந்த விடா முயற்சியிலேயே நிலைத்திருத்தல் வேண்டும்."

**ஈ. எப். சி. லுடுவிக் இலங்கை நவீன வரலாறு 1966**

## "சாதாரண மக்களே உண்மையான பிரஜைகள் சர்வதேச மனுக்குல வரலாற்றின் முன் இனப் பெருக்காளர்கள்"
## கிம் சி ஹா - கொரிய புலவன்

### "ஒவ்வொருவரின் புகலிடத்தில் மக்கள் வாழ்வர்."
### அயலார்ந்து பாரம்பரிய வாசகம்

ஐக்கியம், இறைமை பிராந்திய முழுமை என்பவற்றிற்கு உதவும் சக்திகளை வலுப்படுத்துவதன் அவசியத்தை உணர்த்தும், சகல பிரஜைகளுக்கும் சமத்துவமாக, பாதுகாப்பாக, அமைதியாக வாழ்ந்து சுபீட்சமடையும் விதத்திலும், தங்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்திலும் பல்லின பன்மொழி, பல்வித சமுதாயமாக வாழ்வதில், அதன் சிறப்பியல்புகள் பேணப்பட வேண்டும்.

**இந்தியா - இலங்கை உடன்படிக்கை, 29 ஜூலை 1987.**

முடிவில்லா ஆயுதப் போரை,
முடிவில்லா இந்த வன்முறையை நிறுத்த
மக்கள் ஒன்று கூடி ஒரணி திரள வேண்டும்.
ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்காக
நாம் ஆதரவு திரட்ட வேண்டும்.
ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும்.
உண்ணாவிரதம் இருக்கவேண்டும்.
எங்களிடமுள்ள சகல வளங்களையும்
நாம் இதற்காக ஒன்று திரட்ட வேண்டும்.
இருபகுதியிலுமுள்ள மக்களின் சக்தியைத்
தலைவர்கள் தங்கள் சுயநல இலட்சியங்களையடையப் பாவிக்கும்
மக்கள் சக்தியை,
நாம் ஒன்று திரட்ட வேண்டும்.
உண்மைத் தர்மத்தின் வளங்களை
நாம் அணிதிரட்ட வேண்டும்.
விகாரை, கோயில், தேவாலயம், பள்ளிவாசல்
என்பவற்றின் சத்திய தர்மங்களை
நீதிக்காகவும் விடுதலைக்காகவும் குரல் எழுப்பும்
ஒரு நவீன எதிர்பார்ப்புச் சூழலில் புதுப்பித்து, ஒருங்கிணைந்து!
அச் சக்தி
அன்பாக, புரிந்துணர்வாக,
செயலில் பரிணமிக்கும்படிச் செய்ய வேண்டும்
காலம் கடந்துவிடுவதற்கு முன்.
துணிவோடும், துரிதமாகவும்
நாம் ப்கிரங்கமாகக் குரலெழுப்ப வேண்டும்,
செயல் புரிய வேண்டும்
அதன் மூலம்
பீதியும் பதற்றமும் மூட்டும்
இக்கோரத் தீயினின்று விடுபட்டு
சன்மார்க்கமும், சமாதானமுமான பாதைக்கு நாம்
வழி அமைக்க வேண்டும்.

**மக்களுக்கு உண்மை கூறுங்கள்! ஒரு கூட்டு வேண்டுகோள்**

# அதிகாரத்தைப் பங்கிடல்
# நமதுகாலச்சவால்
# இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான
# (உ. ஒ. ம/ இ. கு) விடுக்கும் நிலைமை
# அறிக்கையும் பகுப்பாய்வும் செய்தியும்

ஒரு சிரேஷ்ட அமைச்சரினதும் அவரினது துணைவியாரினதும் ஏனைய இருபது பேரினதும் மரணத்துக்கும் மேலும் அறுபது பேர் காயங்களுக்குள்ளாவதற்கும் காரணமாய் ஜூன் 7, 2000 அன்று இரத்மலானையில் இடம்பெற்ற மற்றுமொரு குண்டுவெடிப்பின் விளைவான கொடிய துன்பியல் சம்பவத்தைத் தொடர்ந்து, இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக்குழு, இச் செய்தியை முதலில் அதன் சொந்த உறுப்பினர்களுக்கும், இரண்டாவதாக இன முரண்பாட்டு விவகாரத்தில் சம்பந்தப்பட்டதும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்குப் பொறுப்புடையதுமான இரு தரப்பினரையும் உள்ளடக்கிய மூன்றாவதாகப் பொறுப்புடையதும் பங்களிப்பு செய்வதற்கு கடப்பாடுடையதுமான சர்வதேச சமுதாயத்திற்கும் நான்காவதாக அனைத்திற்கும் மேலாக இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் நீதி கிடைக்க வேண்டியதன் அடிப்படையில் சமாதானத்தைக் கொண்டு வருவதில் தீர்க்கமான பங்கேற்கும் இறுதி பொறுப்புடைய இலங்கை மக்களிற்கும் விடுக்கின்றது.

நமது நாட்டில் நிலைமை எந்த அளவிற்கு கூடுதலாக மோசமடைகின்றதோ அந்த அளவிற்கு மேலாக நீதியையும் , சமாதானத்தையும் நிலைநாட்ட நாடும் மக்களுக்கு நாம் பக்கபலமாக இருக்க வேண்டியதன் அவசியத்தையிட்டு நாம் முதலில் நமது உறுப்பினர்களுக்கு நினைவூட்டவேண்டியுள்ளது. தற்போது உள்ள கஷ்டமான அபாயகரமான நிலைமை காரணமாக நாம் நமது சமாதான செயற்பாடுகளில் இருந்து விலகி வாள ாவிருப்போமாயின் அதன் மூலம் போர் நாடுவோர் தங்கள் இஷ்டப்படி பயங்கரச் செயல்களில் ஈடுபட்டு நாட்டை அழிவுக்கு இட்டுச் சென்றுவிட நாம் வழியமைத்துவிட்ட பழிக்கு ஆளாகிவிடுவோம். சட்டமும் ஒழுங்கும் செயலற்றுப்போன ஒரு நிலைமையிலும் தொடரும் சிவில் யுத்தம் காரணமாகவும் நாட்டைப் பாதுகாப்பதற்கும் சமாதானத்தை மீட்டு நிலைநாட்டுவதற்கும் அரசு பாரிய கடமை பொறுப்பை கொண்டுள்ளது என்பது உண்மையே.

ஆனாலும் அது எதிர்விளைவுகளைத் தோற்றுவித்து அதன் மூலம் இருதரப்பிலும் மேன்மேலும் வன்செயல்கள் இடம்பெறுவதற்கு இட்டுச் செல்வதற்கும், சட்டமும் ஒழுங்கும் அதிகமதிகமான அளவில் சீர் குலைவதற்கு இடமளித்து சமாதானத்திற்கான நம்பிக்கைகள் என்றுமில்லாதவாறு மங்கி மங்கிப்பின்னணிக்குத் தள்ளப்பட்டு விடக்கூடிய ஒரு நிலைமைக்கு உள்ளாகாத விதத்தில் அது இடம்பெறவேண்டியதற்குமாக, முழுமையான முக்கியத்துவமுடையதாய் அமைவதற்கு வழி செய்ய வேண்டும். பாதுகாப்புப் படைகள் நாட்டைப்பாதுகாப்பதிலும், அவசியமான எதிர்தாக்குதல் எதனையும் மேற்கொள்ளுவதிலும் ஈடுபட்டிருக்கும் அதேசமயம், அரசாங்கம் அதற்குத் தேவையான சகல வளங்களையும் வழங்கும் நிலையிலும் , மக்கள் அதற்கு அவசியமான தார்மீக ஆதரவினைத்தரும் வேளையிலும், அரசாங்கமும் இந்நாட்டின் அனைத்து மக்களும், சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக பிரச்சனைக்கு ஒரு நியாயமான தீர்வைக் மரணத்துக்கும் கண்டறிவதில் தங்களாலான இப்பண்பு என்பதையும் அதன் மூலம் சமாதானம் நிலைபெற உதவுவது, அதி முக்கியமானதாகும்.

1990 ம் ஆண்டு நமது அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. முதல் கடந்த 10 ஆண்டுகளில், நாம் நம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சகல இன மதங்களையும் சார்ந்த மக்களுக்கிடையே அடிமட்ட நிலையில் இடையறாது, முழுமையான ஈடுபாட்டுடன் செயலாற்றி வந்திருக்கிறோம், என்பதையும் நாம் நமது உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேம். இந்நாட்டிலுள்ள மக்களில் மிகப்பெரும்பாலானோர் சமாதானத்தில் நாட்டங் கொண்டு அதனை அடைவதற்காகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நியாயமாக, விட்டுக் கொடுத்து நீதியாகவும் நிதானமாகவும் நடந்து கொள்வதற்கும் ஆயத்தமாகவேயுள்ளனர் என்பதை நாம் கண்டறிந்துள்ளோம். சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றியும் தீர்வுக்கு அவசியமான பரந்த அடிப்படை பற்றியும் நாம் அவர்களோடு அளவளாவியிருக்கிறோம். இதற்கு ஏதோ விதத்தில் அதிகாரமாற்றம் அல்லது அதிகாரப் பங்கீடு அவசியமாக இருக்கும் என்பதையும் நாம் நீண்டகாலமாக உணர்ந்துள்ளோம். சிறுபான்மையினர் , பெரும்பான்மையினர் ஆகிய இரு தரப்பினருக்கும் நியாயமானதாக அமையும் விதத்தில் அதிகாரப்பங்கீட்டுக்கு அவசியமான பல்வேறு தேவைகளைப்பற்றிக் கலந்துரையாடி இணக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். இவ் அடிப்படையில், அரசாங்கத்திற்கும் எதிர்கட்சிக்கும், சமயசார்பற்ற சமயசார்புடைய இரு தரப்பினரையும் உள்ளடக்கிய பல்வேறு அதிகாரிகளுக்கும் கடந்த பத்து ஆண்டுகளில் பல்வேறு ஆவணங்களையும் அனுப்பி வைத்துள்ளோம்.

அனேக மக்களால் ஒப்பம்மிடப்பட்டுள்ள இவற்றில் சில அதிகாரப் பங்கீடு உட்பட உறுதியான சமாதான யோசனைகளை உள்ளடக்கியதாகும். ஏனைய சமாதான அமைப்புகளும் மனித உரிமைகள் அமைப்புகளும் அக்கறையுள்ள பல்வேறு குழுக்களும்கூட இதே மாதிரியான சமாதான யோசனைகளை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்றன. எனவே 1995 ஆவணி மாதத்தில் அரசாங்கம் முன்வைத்த யோசனைகளில், ஏற்கனவே தெரிவிக்கப்பட்டவற்றில் ஒரு சில, ஆதாரமாக அமைந்திருப்பதும் உண்மையில் அதிகாரப்பங்கீடு தொடர்பான யோசனைகளை நுணுக்கமாக வரையும் முழுப்படிமுறையிலும் ஏனைய சனநாயக சக்திகளுடன் இணைந்ததாக இலங்கையில் மட்டுமல்ல உலகிலுங்கூட பாரிய இயக்கத்தில் அடிப்படையில் நீண்ட போரட்ட வரலாறும் வளர்ச்சியும் தொடர்புபட்டிருக்கின்றன என்பதும் இவ்வனைத்தையும் கருத்திற்கொண்டு , நாம் ஒரு அமைப்பாக மக்கள் மத்தியில் இடம்பெறும் கலந்துரையாடல்களை இடையறாது தொடர்ந்து, அதிலும் குறிப்பாக மேலும் பரந்த அளவில், அதிகாரப்பகிர்வின் அர்த்தத்தையும் சம்பந்தப்பட்ட விவகாரங்களையும் விளக்கியும் தீவிரப்பிரச்சாரம் செய்ய வேண்டியுமிருக்கும். இவற்றை நாம் இச்செய்தியின் போது விளக்குவோம்.

### அதிர்ச்சியும் பயங்கரவாதம் மீதான கண்டனமும்

சமீபத்தில் இரத்மலானையில் இடம்பெற்றது போன்ற வன் - செயல்களின் விளைவான அதிர்ச்சியும் அவற்றைக் கண்டிப்பதற்கான உந்துதல் தோன்றுவதும் இயற்கையான பிரதிபலிப்புகளே !, அவை, உண்மையில் விளங்கிக் கொள்ளத்தக்கவையுமேயாகும். தற்கொலைக்குண்டுத் தாக்குதல் நிலக்கண்ணிவெடி வான்வெளியில்லிருந்து கண்மூடித்தனமான குண்டு வீச்சு பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் அப்பாவி பொது மக்களைக் கொல்லுதல். தனிப்பட்டோருக்கு பரந்தளவில் தொல்லை கொடுத்தல். காணமல் போதல், சித்திரைவதை , இனச்சுத்திகரிப்பு, திட்டமிட்ட படுகொலை, மதவழிப்பாட்டு யாத்திரை தலங்களை நாசம் செய்தல் போன்ற சம்பவங்கள் அடிக்கடி அதிகளவில் இடம்பெற்று வருவதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்த வன்செயல்களில் அனேகமானவை அரசாங்கம் எல். ரி. ரி. ஈ ஆகிய இரு தரப்பினராலுமே புரியப்பட்டவையாகும். நாகரீகமான நடத்தை சார்ந்த இயல்பான தரங்களின் அடிப்படையில் கணிப்பிடு செய்யும் போது அவை நிச்சயமாகவே அதிர்ச்சி தருபனவே. யுத்தவேளைகளின் போதும் கூட குடிமக்களை மதிப்பது கைதிகளை மனிதாபிமானத்துடன் நடத்துவது போன்றவற்றில் சில ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்கள் பின்பற்றப்படுகின்றன. இத்தரங்கள இருதரப்பினராலுமே அடிக்கடி மீறப்பட்டு வருவதோடு காலப்போக்கில் தொடர்ந்து சுற்றிச் செல்லுகின்ற இவ்வன்முறைச் சம்பவங்கள் மேன்மேலும் மோசமடைந்து வருகின்றன என்பதும் நோக்கத்தக்கது.

நமது அமைப்பு, ஒரு தரப்பு, மற்றையதன் கருத்துக்கு மதிப்பளித்து உண்மைகளை விளக்கிக் கொள்வதற்கு ஆவன செய்ய முயன்று வருகிறது. வடக்கிலுள்ள மக்கள் யுத்தத்தில் பாதுகாப்புப்படைகளிடமிருந்து தங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையிட்டு மிகுந்த அளவில் கவலைப்படும் போக்கினைக் கொண்டுள்ளனர். உதாரணமாக, பீரங்கித் தாங்குதல் மற்றும் விமானத்தாக்குதல் காரணமாக கோயில்களுக்கும் தேவாலயங்களுக்கும் பெரிய அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இவை, வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டவல்லாதனவாகவும் இருக்கலாம். ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சியின் போது , இந்துக் கலாசார அமைச்சு, அவ்வாறு சேதமடைந்த *130* க்கும் கூடுதலான கோயில்கள் பற்றிய விவரங்களைக் கொண்டிருந்தது. *(சண்டேலீடர் 8, மாசி 1998)* பின்னர் ஒரு பெரிய அளவில், குடிமக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இறப்புகள் , காணமல் போனவை; அத்தோடு இலட்சக்கணக்கானோர் அகதிகளானவை . தொடர்பு சாதனங்களில் இது பற்றிய குறிப்பு, மிகச் சொற்ப அளவிலேயே இடம் பெற்றிருந்தது. ஆனாலும், தெற்கிலுள்ள மக்கள் நிகழ்வுகள் எல். ரி . ரி. ஈயின் பழிவாங்கும் செயற்பாடுகளாக தற்கொலைத் குண்டுத்தாக்குதல், தேசியத் தலைவர்களை கொலை செய்தமை, அதி முக்கிய பொருளாதார இலக்குகளைத் நாசப்படுத்தியமை போன்றவையாக எதிலும் குறிப்பாகத் குடிமக்களுக்கு ஏற்பட்ட அளப்பரிய பாதிப்புக்கள் அதனால் விளைந்த துன்பங்கள் பொதுவணக்க வழிபாடுகளுக்கான பெரிய தலங்களுக்கு ஏற்பட்ட பெருமளவு பாதிப்புகள் என்பன தொடர்பு சாதனங்களில், அதிகளவு விளம்ரங்களை, விளக்க வரைபடங்களுடன் தரப்படுவது தொடர்பில், அதிக நாட்டங்கொண்டிருந்தனர். நாம் அனைவரும், ஒருவர் மற்றவரின் கருத்தை உணரும் படிப்பினையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

எனினும், அதிர்ச்சியடைவதும் கண்டனம் செய்வதும் போதாது. அத்தகைய வன்முறைக்கான காரணத்தை அறிந்து கொள்ளுதல் அத்தியவசியமாகும். இன முரண்பாட்டைப் பொறுத்தவரை, பிரச்சினைக்கு சகல தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதான தீர்வுகள் காணப்படவில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படவுமில்லை. எனினும் அதிர்ச்சியடைவதும் கண்டனம்செய்வதும் போதாது அத்தகைய வன்முறைக்கான காரணத்தை அறிந்து கொள்ளுதல் அத்தியவசியமாகும். இன முரண்பாட்டைப் பொறுத்தவரை , தீர்வுகள் காணப்படவில்லை. என்பதில்தான் , அத்தகைய வன்செயல்கள் தொடர்கின்றன என்பதும் உணரப்பட வேண்டும்.அத்தோடு, அவசியமான தீர்வுகள் கொண்டுவருவதும் அத்தகைய முக்கியமாகும். இந்த நாட்டு மக்கள் அனைவருமே இதற்கான பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆனாலும் பிரதானமாக இத் தோல்வி, சமூக அமைப்புக்களிலிருந்தே தோன்றியது ஆகவே, அவற்றை விடாப்பிடியாகப் பின்பற்றி நிலைநாட்டுவதற்கும் அவசிய மாற்றங்களும் தீர்வுகளும் ஏற்படுவதில் முட்டுக்கட்டை போட்டுத்தடுத்துவரும் பொறுப்பானவர்களையும் பெரிதும் சாரும்.

சம்பந்தப்பட்டவர்கள், சமய சார்பற்ற சார்புடைய இரு பிரிவுகளையும் சேர்ந்தோரும் நிலைப்பதவிகளிலிருந்தோருமாவர். சமூக அமைப்புகளின் பின்னால், வெளிப்படையான, இரகசியமான இருவிதத்திலும் வன்முறைகள் நிகழ்ந்து வருகின்றன. அடிப்படையில், இததை அரச பயங்கரவதமாக தொகுத்துரைக்கலாம். இது முதனிலைப் பயங்கரவாதமாகும். தெற்கில் ஜனதாவிமுக்தி பெரமுன (ஜே. வி. பி) யின் பயங்கரவாதமும், வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் ஆகிய இரண்டுமே, அரச பயங்கரவாத எதிர்ச் செயற்பாடாகும். இதனைச் சுட்டிக்காட்டுவது, ஜே. வி. பியின் அல்லது எல். ரி. ரி. ஈயின் வன்முறையைப் பொறுத்ததாகாது; மாறாக ஆழமான காரணங்களைச் சுட்டிக்காட்டவும் இந்தக் காரணங்களை ஒதுக்கித் தள்ளுவதில் சகலரும் இணைந்து செயலபடுவதற்கும், தீர்வுக்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அவசரத் தேவையை முனைப்பாக வலியுறுத்துவதாயாகும்.

## தீர்வு தென்படவில்லை

அரசாங்க அமைச்சர்கள், போரின் முடிவு நெருக்கிவருவதாக அவ்வப்போது அறிவிக்கின்றனர். ஆனால், அது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. போர்ச்செலவினங்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. முதல் ஆண்டான. 1983ல் பண மதிப்பில், செலவு, 1 பில்லியனாக இருந்தது. இறுதியான புள்ளிவிபரங்கள், 1999ம் ஆண்டுக்கான செலவு 56 பில்லியன் ரூபா எனப்புலப்படுத்துகின்றன. ( ஸ்ரீ லங்கா மொனிற்றர், மாசி 2000) 2000ம் ஆம் ஆண்டில் செலவு, குறைந்தது 65 பில்லியன் ரூபாவாகவும் இருக்கலாம் எனத் தெரிகிறது. உடமைகளுக்கான சேதமும், இழப்பும் , பொருளாதார மதிப்பில் மிகவும் கூடுதலானது; கணிப்பிட முடியாதது. உயிரிழப்புக் கணிப்பின்படி, இதுவரை 50, 000த்திற்கும் கூடுதலானோர் மாண்டுள்ளனர். மேலும் 30,000 பேர் காணாமல் போயுள்ளனர் (நீ யூஸ்வீக் சஞ்சிகையில் ரோனி கிரிபற்றன் தெரிவித்ததை ஸ்ரீ லங்கா மொனிற்றர், மே 1999 மேற்கோள் காட்டியிருக்கிறது.) அகதிகளின் எண்ணிக்கை மதிப்பீட்டில் அனந்தம்; சொந்தத் தொடர்புகள் விவகாரமும் உணர்வதிர்ச்சிப்பாதிப்பும் உயர்தகவுகள் தேய்ந்த வழிவதற்கும் சமுதாய மனைத்தையும் பாதிக்கும் வன்முறைக்கலாச்சாரம் வளர்வதற்கும் வழிகோரியிருக்கின்றன.

மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள இராணுவ நிபுணர்கள் உட்படச்சிலர், இது வெற்றிகொள்ள முடியாத யுத்தம் ஒன்று எனக் கூறுகின்றனர். ஆதரவு தேடுவோர், இதுவோர் துரோகச் செயல் எனக்கூறிக் கடுமையாக எதிர்க்கின்றனர். அவர்கள் சொல்வதெல்லாம், போரை வெல்வதற்கு அரசாங்கம் திடசந்தர்ப்பம் பூண்டு, மக்கள் , மற்றும் அவசியமான வளங்கள் ஆகிய இரண்டையும் ஒன்று திரட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுதான் என்பதே. அத்தோடு அவர்கள், பயங்கரவாதத்தை நசுக்குவதற்கு மேலும் உறுதியான விதத்தில் சர்வதேச சமூகம் முயற்சிகளில் இணங்க வேண்டும் எனவும் கூறுகின்றனர். இங்கு கணிசமான அளவில் நல்விருப்பு நிலவினும், நிதர்சனங்களைக் கருத்திலெடுப்பதற்கு இயலாமை, வேதனைக்குரியதாகவேயுள்ளது. அரசாங்கம், சர்வதேச சமூகம் ஆகிய இரண்டுமே நீண்டகாலமாக, பல்வேறு சட்டங்களை இயற்றியும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் உட்பட வெவ்வேறு கோரிக்கைகளையும் விடுத்தே வந்திருக்கின்றன. ஆனாலும் போரின் முடிவோ அல்லது பயங்கரவாதத்தின் முடிவோ அண்மிக்கவில்லை. இன்று இச் சண்டைகள் நீடிப்பதற்குப் பல்வேறு காரணிகள் உள்ளன என்பதும், அவை விவகாரங்களைச் சிக்கலாக்குகின்றன என்பதுமாகும். இது, உள்நாட்டுச் சிவில் யுத்தம் தலையீடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அரசாங்கம் அனேக வளமிக்க நாடுகளிடமிருந்து மிகப்பெரியளவில் ஆதரவையும் உதவியையும் பெற்றுவருகிறது.

இதே மாதிரி, எல். ரி. ரி. ஈயும் வலுமிக்க சர்வதேசத் தொடர்புகளைக் கொண்டுள்ளது. அவர்கள், லண்டன், பரீஸ், ரொறன்ரோ, நியூஜேர்ஸி ஆகியவற்றில் முன்னணி அமைப்புகளையும் இந்தியா, கனடா, அமெரிக்கா, ஆகிய நாடுகளில் முறையாகத் தடை செய்யப்பட்டிருப்பினும் , சிட்னி , நோர்வே, ரெக்ஸாஸ் ஆகியவற்றில் பிரச்சாரப்பிரிவுகளையும் கொண்டுள்ளனர். அவர்களின் வலையமைவு, 38 நாடுகளிலிருந்து மாத மொன்றிற்கு 2 மில்லியன் டொலர்களுக்குக் கூடுதலான தொகையைத் திரட்டி வருகிறது. அவர்களிடம், கடற்பயணக்கப்பல்களும் உண்டு ( ஏசியாவீக் ஆசிரியர் தலையங்கம் ஜுன் 2, 2000) அரசாங்கம் எல். ரி. ரி. ஈ ஆகிய இரண்டுமே சர்வதேச ஆயுத உற்பத்தித் தொகுதியுடன் தங்குதடையற்ற தொடர்புகளைக் கொண்டுள்ளன. அடிக்கடி அவையிரண்டுமே அதே வட்டாரத்திலிருந்தே தங்களுக்குத் தேவையான ஆயுதங்களை வாங்கிக் கொள்ளுகின்றன. நாட்டினதும் மக்களினதும் நிலமை மிகவும் பாரதுரமான தொன்றாக உள்ள நிலைமையில், எவரும் அலட்சியமாக வாளாவிருந்து கொண்டு நல்லது நடக்குமென வெறும் நம்பிக்கையை எதிர்பார்த்தபோது துயர் நிறைந்ததோர் நிகழ்வாகும். சமாதானம் ஏற்படுவதற்கு, உருப்படியான சிந்தனையும் செயற்பாடும் திட்டவட்டமான, ஆக்க பூர்வமான யோசனைகளை உருவாக்கும் முயற்சியும் இன்றியமையாதானவாகும்.

இறுதியான செய்தி என்னவெனில், தேவைப்படும் பணம் அனைத்தும் எல். ரி. ரி. ஈ விரைவில் தோல்வியடைவதற்கு ஏதுவாக, மிகச் சிறந்த நவீன ஆயுதங்களை வாங்குவதற்குப் பயன்படுத்தப்படுமென ஜனாதிபதி சந்திரிக்கா பிரகடனப்படுத்தியிருப்பதாகும். அவற்றிற்கு ஈடாக, எல். ரி. ரி. ஈயும் ஆயுதங்களை வாங்க முடியுமாயின் நிலைமை என்ன ? அத்தோடு எல். ரி. ரி. ஈ, மனித சக்தியின் தேவையில் மிக மோசமானதொரு பற்றாக்குறையை எதிர் நோக்குவதாகவும் சொல்லப்படுகிறது. ஆனாலும் அவர்கள் ஏற்கனவே இந்தியாவிலிருந்து கூலிப்படையினரை வரவழைத்துள்ளனர் என அறிவிக்கப்பட்டிருப்பதால், எதிர்காலத்திலும் அவர்கள் மீண்டும் நல்லபடி செயற்படக்கூடும். எல். ரி. ரி. ஈ போராளிகள் அதிலும் குறிப்பாகத் தற்கொலைக் குண்டுதாரிகள் தங்களின் செயற்பாட்டில் அளப்பரிய ஈடுபாட்டினைக் கொண்டிருப்பது, நீண்ட காலமாகவே அவதானிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனாலும் போருக்குப் பலாத்தகாரமாக ஆட்களை அதிலும் குறிப்பாக மிக இளையோரைத் திரட்டிவருவதான தகவல்கள் அதிகரித்தே வருகின்றன. தற்கொலை படையாளிகளுக்கு அல்லது அவர்களின் குடும்பங்களுக்கு அல்லது அவர்களின் சிலருக்குக் கூடப்பணம் வழங்கப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது.

பொதுவாக , இதுவரை தெரியவந்திருப்பது என்னவெனில் , முதலில் ஒரு தரப்பினரின் பின்னர் மறுதரப்பு என்ற ரீதியில் கையோங்கி வந்திருப்பதாகும். ஆனையிறவின் வீழ்ச்சியுடன் எல். ரி. ரி. ஈ, யாழ்ப்பாணத்தைச் சூழ்ந்து நெருங்குவதாகத் தென்பட்டது. ஆனால் இஸ்ரவேலிடமிருந்து பெற்ற புதிய ஆயுத பலத்துடன் அவர்களை மடக்கி நிறுத்திவிட்டதால் தனது கை மேலோங்கியிருப்பதாக அரசாங்கம் வலியுறுத்திக் கூறுவருகிறது. இதே சமயம், எல். ரி. ரி. ஈ பொலனறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு எல்லைப் பகுதிகளில் பலம் பெற்ற நிலையில், இப்பகுதிமக்களைப்பெரிதும் துன்புறுத்தி வருவதாகத் தெரிகிறது.

## சமாதானப் பேச்சுக்களும் மத்தியாஸ்தமும்

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான அவசரமும் இதற்கான மத்தியத்திற்கான முக்கியத்துவமும் அடிக்கடி உரிய முறையில் வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆகவே பல்வேறு வட்டாரங்களிலிருந்தும் அமைப்புக்களிடமிருந்து பேச்சுவார்த்தைகள், மத்தியஸ்தம் என்பவற்றிக்கான அமைப்புக்கள் அடிக்கடி வந்தவண்ணமுள்ளன.

எனினும், சில ஆதார, அவசியத் தேவைகள் அலட்சியப்படுத்தப்படின் பேச்சுவார்த்தைகளோ அன்றி மத்தியஸ்தமோ எந்தவிதப் பிரயோசனத்தையும் தராது. சமாதானப்பணிக்கு இனப்பிரச்சனையின் இயக்கவியலினையும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளின் தன்மைகளையும் மத்தியிலான, சரி சம பணிக்கு அத்தியாவசியமாகும். இதில் சம்பந்தப்பட்ட சிக்கலான காரணிகள் எதுவும் அலட்சியப்படுத்தப்படின் அது, நடைமுறையினையே முற்றகச் சீர்குலைத்து விட முடியும்.

உதராணமாக இந்தக் கட்டத்தில் குறிப்பிடப்படுவது கூர்வுணர்வுடைய ஒரு விவகாரம் எனக் கொள்ளப்படுவதால், வடக்கையும் கிழக்கையும் இணைப்பதான பிரச்சனை முழுமையாகவே பின்னணிக்குத் தள்ளப்பட்டுள்ளது, ஆனால் இடர்பாடான பிரச்சினைகளைத் தவிர்ப்பது என்பது சிக்கலான விவகாரங்களைத் தவிர்ப்பதற்கு இதுபரிகாரமாகாது. இரு தரப்பினருக்கும் ஏற்றுக் கொள்ளக் கூடிய இப்பிரச்சினை நோக்கத்தக்க வழிமுறை யொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

மற்றொரு அம்சம் , ஒரு சமாதானத் திர்வுகள் அடிப்படைத் தேவைகள் விஷயத்தில், தெற்கிலுள்ள பிரதான கட்சிகளுக்கிடையே இணக்கப்பாடு ஏற்படுவதன் அவசியமாகும். எல். ரி. ரி. ஈ யும் அதன் தலைவர் பிரபாகரனும் நியாயமற்றவர்கள் என்றும் விடாப்பிடியானவர்கள்,விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அற்றவர்கள் என்றும் அடிக்கடி விமர்ச்சிக்கப்பட்டு வருகின்றனர். சகல சமமான முன் மொழிவுகளையும் அவர்கள் ஏற்கனவே நிராகரித்து விட்டனர் என்றும் அவர்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. ஆனால் இரு பிரதான கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான அடிப்படையில் இதுவரை சமாதான யோசனை எதுவும் முன் வைக்கப்படவில்லையே! அதிகாரத்திலுள்ள தரப்பு சமாதான யோசனை யொன்றைமுன்வைக்கும் போது, எதிர்க்கட்சி அதன் நிறைவேற்றத்தை தடுப்பது ஒரு மரபாகவே இருந்து வந்துள்ளது.

உண்மையில் சமாதான யோசனையை முன்வைத்த கட்சிக்குள்ளேயே பெரிய இணக்கமின்மை நிலவி இருந்திருக்கிறது. 1957ம் ஆண்டில் எஸ். டபிள். யு. ஆர். டி. பண்டாரநாயக்க, அவரது சொந்தக்கட்சிக்குள்ளேயே மகா சங்கவின் வலிமை வாய்ந்த பிரிவினர் தெரிவித்த நச்சுத்தன்மைமிக்க எதிர்ப்புகளின் காரணமாக, பண்டாரநாயக்கா செல்வநாயகமம் ஒப்பத்தத்தைக்கிழித்தெறிய வேண்டியதாயிற்று. பின்னர் 1983, 1987 ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சமாதான யோசனைகள் உயர்வாக மதிக்கப்படவுமில்லை. நிறைவேற்றப்படவுமில்லை, என்பது நன்கறியப்பட்டதும். 1995 முற்பகுதியில் ஜனாதிபதி சந்திரிக்கா, சமாதான விதிமுறையொன்றை உருவாக்குவதற்கு முன்னதாகவே, யாழ்ப்பாணத்திற்கும் சமாதானத்துதுக் குழுக்களை அனுப்பியிருந்தார். ஆனாலும், அவற்றில் எதிலாவது ஓர் அரசாங்க அமைச்சர் கூட ஏன் நாடாளுமன்ற உறுப்பினர் கூட இடம்பெற்றிருக்கவில்லை. 1995 ஆகஸ்டில் அரசாங்கம் நியாயமானதொரு சமாதான விதிமுறை யொன்றை முன்வைத்தது. அது முன்பேற்ற பாதையில் ஒரு பெரும் படியாகும். ஆனால் 1996 பெப்ரவரியில் அந்தச்சமாதான யோசனையின் முழுமையான தன்மையை அடிப்படையில் மாற்றியதாக வடக்கையும், கிழக்கையும் இணைப்பது தொடர்பாக ஒரு பெரிய மாற்றம் செய்யப்பட்டது. சுருக்கமாக சொல்வதாயின் தெற்கில் அரசாங்கம் சமாதானத்தை எற்படுத்துவது கடந்த ஆண்டுகளின்போது மிகவும் ஊக்கங்குறைந்த சான்றையே கொண்டிருக்கின்றது. எனவே குற்றம் சாட்டும் ரீதியில் ஒரு விரலால் வடக்கை சுட்டுவதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது. சிறு பான்மையினரின் நம்பிக்கைகள் மீண்டும் மீண்டும் சிதறடிக்கப்பட்டே வருகின்றன. உறுதிமொழிகள் மீறப்பட்டே வந்திருப்பது ஒரு வரலாறாகும்.

உறுதிமொழிகள் எதிர்காலத்தில் கௌரவிக்கப்படும் என்பதில் எல். ரி. ரி. ஈ. க்கோ அல்லது ஏனைய தமிழ் கட்சிகளுக்கோ என்ன உத்தரவாதம் இருக்கிறது? நம்பிக்கைக்கும் பரஸ்பர நம்பிக்கைக்கும் எந்த அடிப்படையுமே இல்லை. இது ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் அரசியலைமப்பு உட்பட எதிர்காலத்தில் முன்வைக்கப்படும் எதிர் சமாதான யோசனைகள் திட்டங்கள் என்பவை நம்பிக்கையும் பரஸ்பர நம்பிக்கையும் ஏற்படுத்துவதற்கு அவசியமான சில அத்தியாவதிய தனித்சிறப்புக்களை உள்ளடக்கி இருக்கவேண்டியது இன்றியமையாதது ஆகும். சில அடிப்படை உத்தரவாதங்களை வழங்கக் கூடியதாக சில அத்தியாவசிய அம்சங்கள் எந்தவொரு அரசியலமைப்பு முறைமையிலும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டியதும் அவசியமாகும். அத்தோடு, தெற்கில் இதற்கு சில கருத்தொற்றுமைகள் பக்கபலமாக இருக்க வேண்டியதன் அவசியம். தலைவர்களிடமிருந்து இந்த கருத்து ஒற்மை வராதிருந்து அல்லது போதுமானதாக வெளிவராது இருக்கும் ஒரு நிலையும் மக்கள் கிளர்ந்துதெழுந்து அதனை வற்புறுத்திக் கேட்க வேண்டும். மக்கள் செய்ய வேண்டிய பணி எதுவென கீழே விபரிக்கப்படும் ஆனால் அடிப்படைகளும் அத்தகைய தீர்வுகளுக்கான தேவையும் பரிசிலிக்கப்படவேண்டியதன் அவசியத்தை உற்படுத்தியதாகவும் இவ் அம்சங்கள் அல்லது ஆரம்பம் முதலே இடம் பெற்று வருவதாக, ஒன்றையொன்று இப்போது எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

### அதிகாரப் பகிர்வு

சிறுபான்மையினரின் பிரச்சனைகளை அதிகாரப்பங்கீடு அல்லது பகிர்வு ஓர் அடிப்படையாக அல்லது ஆதாரத்தேவையாக இருக்க வேண்டும் என்பது நீண்டகாலமாகவே அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது என்பது மேலே ஏற்கனவே காட்டப்பட்டுள்ளது. அத்தோடு சிறுபான்மையினரின் பிரச்சனைகளை தீர்க்கும் விவகாரத்தில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதான கூற்று நீண்ட வரலாற்றை கொண்டுள்ளது என்பதும் கருத்தில் கொள்ளப்படவேண்டிய தொன்றுமாகும். மேலும் இத்தகைய நிலமை இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல பகுதிகளிலும் நிலவிவந்திருக்கின்றது மக்களின் எண்ணத்தினது பிரதிபலிப்பாக இந்த அடிப்படை ஏற்கனவே ஜனநாயக செயற்பாடுகளாக ஓர் இயக்கமாக அல்லது போராட்டமாக இருந்தும் வந்திருக்கிறது. தற்போதைய அரசாங்கம் சமாதான யோசனைகள் அடங்கிய ஒரு பொதியாக 1995 ஆகஸ்டில் முன்வைத்தது முதல் அதிகாரப்பகிர்வு அல்லது பங்கீடு தொடர்பான விவகாரம் அனைத்தும் நாடு முழுவதிலுமே அன்றாடம் பேசப்படும் ஒரு விஷயமாக விரைவில் இடம்பெற்றுவிட்டது. இலங்கையின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் அது உறுதியாக இடம்பெற்றதாய் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது.

### பின்னடைவு

எனினும் வலுவான சுயநலன்களைக் கொண்ட ஒரு சிலரின் ஆதரவுடன் ஊடகத்தின் சில தரப்பினர் மக்களின் சில பிரிவினருக்கு மத்தியில் முன்னேற்றகரமான இந்த அலைவீச்சினை திசை திருப்பும் வகையில் குறுகிய நாட்டுப்பற்றினையும் இனத்துவேச உணர்வுகளையும் தட்டி எழுப்பி வந்துள்ளனர். அவ்வப் போது நிகழ்ந்து வரும் புனித தலங்கள் கட்டிடங்கள் மீதான குண்டுத் தாக்குதல்கள் மஹா சங்கம் அப்பாவி மக்கள் மீதான கொலைகள் என்பனவற்றைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு அவர்கள் சமாதான இயக்கத்திற்கெதிராக மக்களைத் தூண்டவும் செயற்படவும் முனைந்துள்ளனர்.

அதேசமயம் அரசாங்கத்தின் உண்மையை மறைக்கும் நிலை மக்கள் விரோத சக்திகள் முன்றேுவதற்கும் மக்கள் மனதில் குழப்ப நிலையை பரப்புவதற்கும் உதவியுள்ளது. போதுமான ஆக்க முறையான செயற்பாடற்ற விதத்தில் அதிகாரப்பகிர்வு பற்றிய முடிவில்லாத பேச்சுக்கள் அதிகாரப் பங்கீடு பற்றிய கோட்பாடு அனைத்திலுமே அநேக மக்களை நம்பிக்கை இழக்கச் செய்துள்ளனர். பேரழிவை ஏற்படுத்தும் தற்கொலைத் குண்டுத்தாக்குதல்கள் போன்ற செயற்பாடுகளை சமாதான அதிகாரபகிர்வு முயற்சிகளுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்டு வரும் வாதங்களே பிரச்சனைக்கான ஒரு துரித தீர்வுக்கு மிகவும் உகந்தவை என்பதை கற்பனைத் தலைத்துவமே வெளிக்காட்டி விட்டிருக்கின்றன எனக் கொள்ளலாம். உண்மையான நாட்டுப் பற்றுள்ளோரகாவும் இனத்தையும், மதத்தையும் அழிவில் இருந்து காப்பாற்றுபவர்களாகவும் தங்களை இனங் காட்டிக் கொள்பவர்களே நியாயமான ஒரு தீர்வில் தங்களின் எதிர்ப்பை காட்டுவதன் காரணமாக நமது நாட்டை வடக்கிலும், தெற்கிலும் சீரழிவிற்கும் , சீர்குலைவிக்கும் இட்டுச் செல்லும் கோரச் சம்பவங்களுக்கு பொறுப்புடையோராவர்.

## அதிகாரப் பங்கீட்டுக்கான தேவை

பத்திரிகை துறையின் சில பிரிவினரிடையே அதிகாரப்பங்கீட்டுக்கெதிராக இடைவிடாத பிரசாரம் நிலவுவதன் காரணமாகவும் குறுகிய மனப்பான்மையுடைய இனவாத மட்டுமீறிய தன் நாட்டுப்பற்றுடைய சக்திகளின் நிலையான எதிர்ப்புச் செயற்பாடு காரணமாகவும் அதிகாரப் பங்கீட்டுப் கோட்பாடு சம்பந்தமாகவும் அதற்கான சாத்தியம் தொடர்பாகவும் மக்கள் மனதில் சந்தேகங்களும் கலக்கமும் தோன்றியுள்ளன. தாக்காட்டின் காரணமாகவும், அரசாங்கம் செயற்பாட்டினைத் தொடர்ச்சியாக ஒத்தி வைப்பதில் ஈடுபட்டு வருவதாலும் இது வலியுறுத்தப்பட்டு வருகிறது. உண்மையில் பிரச்சினை எதுவும் இல்லையென்றும் தமிழர்களின் மனக்குறைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டுவிட்டன என்று சொல்லுமளவுக்கு ஒரு சிலர் பேசித்திரிகின்றனர். எவரும் அவ்வாறு நியாயமாக நடந்து கொள்வதை கற்பனை செய்யவும் முடியாமலுள்ளது. அத்தகையோர் தமிழுக்கு ஒரு தேசிய மொழி. அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது என்றும் பல்கலைக்கழக பிரவேசம், வேலை வாய்ப்பு என்பனவற்றிலட் ஒரு நியாயமான கிடைப்புப்பங்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் கூறுகிறார்கள். எனினும், இந்தப் பிரமாணங்களின் நிறைவேற்றம், பெரிதும் பின்னடைவுக்கு உள்ளாக்கியிருக்கின்றது. அடிப்படையில் சிறுபான்மையினா, இன்னுமே சிங்களப் பெரும்பான்மையினரின் தாராளமனப் பான்மையிலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது. இது மட்டும் போதுமானதல்ல . அவர்கள் மீண்டும் மீண்டும் கைவிடப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஓரளவு உறுதியான அதிகாரமும் உத்தரவாதங்களும் இருக்க வேண்டும்.

எனவே, அதிகாரப்பங்கீட்டின் தேவை இங்கு இயன்றளவு எளிதானதாயும் சுருக்கமாகவும் உருவரை செய்யப்பட வேண்டும். இலங்கையில் அரசாங்கங்கள் சிறுபான்மையினர்க்கு நீதி வழங்கப்படவேண்டியதன் தேவையைப்பகிரங்கமாகவே ஒப்புக் கொண்டிருக்கின்றன. மொழி, கல்வி, காணி, வேலைவாய்ப்பு என்பவற்றில் அவர்களுக்குக் கணிசமான மனக்குறைகள் இருப்பதாக அவை ஏற்றுக் கொண்டுள்ளன. (இது திட்டவட்டமாகவே குறிப்பிடப்பட்டுள்ளது .
உ+ம் : *1976*ம் ஆண்டின் யூ. என். பி தேர்தல் விஞ்ஞாபனம் )

## பெரும்பான்மையினரின் ஜனநாயகம்

ஒரு ஜனநாயக சமூகத்தில் எவ்வாறு அத்ததைய நிகழ்வுகள் ஏற்பட முடியும் என்ற வினா எழுகின்றது. இலங்கையில் ஜனநாயகம் ஒரு பெரும்பான்மையினரின் ஜனநாயகம் அல்லது பெரும்பான்மை சார்ந்த உயர்ந்தோர் குழாத்தினரினது என அழைக்கப்படக்கூடியதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சுதந்திரத்திற்கு பின்னதாக ஐந்து தசாப்தங்களில், நிலவி வருவது, பெரும்பான்மையினரின் ஜனநாயகத்துடன் கூடிய ஒற்றையாட்சி முறையாகும் என்பது சந்தேகத்திடமானவிதத்தில் தோற்றமளித்துள்ளது. பெரும்பான்மை சார்ந்த உயர்ந்தோர் குழாத்தினரின் இம் பெரும்பான்மையினர் ஜனநாயகத்தை ஆதரிப்பதாக அமைந்துள்ளது. இது எவ்வாறு செயல்படுகிறது என்பதை அடிக்கடி, கருத்தரங்குகளிலும் செயலமர்வுகளிலும் சொல்லப்பட்டுவரும் ஒரு சாதாரண கதைமூலம் விளக்கலாம். அது, ஐந்து மாணவர்கள் 3 சிங்களவர்கள், 1 தமிழர் ஒரு முஸ்லிம் ஆகியோர் தங்கியிருந்த கூட்டுவிடுதி அல்லது உணவு வசதியுடைய இல்லத்துடன் தொடர்புடையதாகும். ஒருநாள், அந்த சிங்கள மாணவர்கள் பன்றி இறைச்சி சமைக்க ஆயத்தமாயினர். முஸ்லிம் மாணவன் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தான் சிங்கள மாணவர்கள், பெரும்பான்மை வாக்குமூலம் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்மென வற்புறுத்தினர்; அதன்படி அவர்களின் தீர்மானமும் நிறைவேறியது.

பெரும்பான்மை வாக்குமூலம் தீர்மானம் எடுப்பது என்பது ஜனநாயக ரீதியானது ; ஆகவே அது நியாயமானது எனக் கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் ஓர் ஒற்றையாட்சி அமைப்பில், சிறுபான்மையினரைப் பொறுத்தவரை பெரும்பான்மை வாக்குமுறைமை மிகமேசமான அநீதியை ஏற்படுத்தலாம் என்பது அனுபவமூலம் புலனாகியிருக்கிறது.

சிறுபான்மையினர் மட்டுமல்ல; ஏழைச்சிங்களவர்களதும் கூட இதனால் பிரதிகூலமடைந்துள்ளனர் எனச் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்தகைய ஏற்றத்தாழ்வுகளை ஒரு சோஷலிசப் புரட்சி மூலமே ஒழிக்க முடியும் என அவர்கள் வாதிடுகின்றனர். சிறுபான்மையினரில் சில பிரிவினர் மிகவும் சிறப்புப்புரிமை பெற்ற நிலையிலுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இது சிந்தனையில் ஒரு குழப்ப நிலையாகும். சிங்கள தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் மூவரிடையேயும் மிகுந்த அனுகூலமுடையோரும் உள்ளனர் என்பது உண்மையே. இம் மூன்று சமூகத்தினருமிடையே ஒடுக்கப்பட்ட ஏழைகளும் இருக்கவே செய்கின்றனர். ஆனால் இந்தச் சிறுபான்மையினர், சிறுபான்மையினர் என்ற காரணத்தால், பேரம் பேசுவதில் குறைவான பலத்தைக் கொண்டிருப்பதால் மேலும் அனுகூலம்குன்றிய நிலையிலும் இழப்பின் பிடியிலுமுள்ளனர் என்பது நோக்கற்பாலது. சோஷலியப் புரட்சியைப் பொறுத்தவரை , நாங்கள் ஒரு திறந்த பிரச்சினை சமுதாய அமைப்பில் வாழ்ந்து வருவதால், புரட்சிகரமான மாற்ற மொன்றுக்கு உள்ளாவதற்கு உடனடி வாய்ப்பெதுவுமில்லை சிறுபான்மையினர் சோஷலிசப் பத்தாயிரம் ஆண்டு காலப்பகுதிக்கு காத்திருக்க முடியும் என எதிர்பார்க்க இயலாது. அதிகாரப்பகிர்வு என்ற நடைமுறையில் சிந்தனையில் உள்ளதெல்லாம் அதனைவிடச் சற்றுக் குறைவானதுதான். தற்போதைய சர்வதேச சுதேசப் பொருளாதாரக் கட்டமைப்புக்கள், ஒரு ஒப்பிட்ட அளவில் அதிகாரப்பங்கீட்டுக்கும், பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்பாக, வெவ்வேறு சமுதாய அமைப்புடைய குழுக்களுக்கிடையே பரஸ்பர இணக்கத்தின் மூலம், சில மாற்றங்களையும் தழுவல் இசைவுகளையும் ஏற்படுத்துவதற்கான முயற்சியே மேற்கொள்ளப்பட்டுவருகிறது. சமாதானம் திரும்பியதும், மக்களின் ஜனநாயக தெரிவுமூலம் எத்தகைய கொள்கைக்கு ஆதரவு பெருகிறதோ அதன் அடிப்படையில், மேலும் ஆழமான பொருளாதார இலட்சியங்களை நோக்கி நகர்வதற்கு இது அடுத்த வாய்ப்பினை அளிக்கும்.

இறுதியாக இத்தருணத்தில், அதிகாரப்பகிர்வு யோசனைகள் சிறுபான்மையினர்க்கு மட்டுமன்றி அனுகூலம் குறைந்த நிலையிலுள்ள பெருந்தொகையான சிங்கள மக்களுக்கும் நன்மை பயக்கும். இதுவரையில் அதிகாரப்பங்கீட்டின் வரைவு ஏழைமக்களின் குரலை ஒன்று சேர்ப்பதற்கு ஜே. வி. பியும், இடதுசாரிக் கட்சிகளும் சமீபத்தில் எந்த அளவுக்குக் குறிப்பிடத்தக்க விதத்தில் அரசியல் துறையில் ஆதரவைக் சம்பாதித்துக் கொண்டுள்ளன என்பதைக் உண்மையில் கண்டறிய முடிகிறது.

## அதிகாரப் பகிர்வு அது என்ன ?

சிறுபான்மையினரின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அதுவே அதிகாரப் பகிர்வாக ஆய்ந்துதேர்ந்தெடுக்கப்பட்டுப் பரீட்சிக்கப்பட்டிருக்கிறது. மேலே சுட்டிக்காட்டப்பட்டபடி, அதிகாரப்பகிர்வு முறைமை, இலங்கையில் மட்டுமல்ல ஏன் உலகத்தில் கூட நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கிறது.

அதிகாரப்பகிர்வு என்ன என்பதை உண்மையில் மக்கள் அறிந்திருப்பின் , அவர்கள் அனேகமாக அதற்கு எதிரானவர்களாக இருக்க மாட்டார்கள் அதற்கு எதிரானவர்களில் பெரும்பாலானோர், அதற்கு எதிராக இருப்பதற்கான காரணம் அவர்கள் எதனை விளங்கிக் கொள்ளவில்லை . மாறாக , ஊடகவியலின் சில பிரிவினரும் சமய அமைப்புக்களின் சக்திவாய்ந்த சில தலைவர்களும், கடந்த 50 ஆண்டுகளில் அதிகாரப்படுத்துவதாகும், சமஷ்டி அமைப்பும் நாட்டைப்பிளவுப்படுத்துவதாகும் எனக் கிளிப்பிள்ளை மாதிரி திரும்பத் திரும்பச் சொல்லிவருவதாகும். இப்பிரிவுகளும் இத்தலைவர்களும், எத்தகைய பாதிப்பு ஏற்படினும் சரியே, ஒற்றை ஆட்சியை பாதுகாப்பதிலேயே கண்ணுங்கருத்துமாகவுள்ளனர்.

அதிகாரப்பரவலாக்கத்தின் சாரமாவது, அதிகாரத்தைப் பங்கிடுவதாகும். அடிப்படையில் அது பரவாலக்கம், பங்கீடு செய்தல் எனப் பொருள்படும். உண்மையில், சிங்கள சொற்றொடர் அதற்குச் சமமான ஆங்கிலச் சொற்றொடரை விட சிறந்த கருத்தைத் தருகிறது. அதற்குப் பயன்படுத்தப்படும் 4 பிரயோகங்களிலும் கடைசியானதே மிகவும் திட்ப நுட்பமானதாகும் . அதாவது அதிகாரம் உயர் பீடத்திலிருந்து வழங்கப்படுவது என்பது மட்டுமல்ல. அது வழங்குவோர்க்கும், வழங்கப்படுவோருக்குமிடையே, பங்காளர் என்ற அடிப்படையில் பங்கிட்டுக் கொள்ளப்படுவதாகும். அது, ஒரு குடும்பத்தில் நடப்பது அல்லது நடக்க வேண்டியது போன்றதாகும். பெற்றோர்கள் அதிகாரத்தைப் பிள்ளைகளுடன் பங்கீட்டுக் கொள்ளும் போது குடும்பம் செழித்தோங்கியது. குடும்பத்தின் பணிமேலும் திருப்திகரமாக நிறைவேறுகிறது.

பிரச்சனைகளை எதிர்கொள்வதும் அவற்றைத்தீர்த்து வைப்பதும் இலகுவாகின்றன. பங்காளிகள் என்ற அடிப்படை மூலம், பரஸ்பர அக்கறையும் நம்பிக்கையும் கட்டிவளர்க்கப்படுகின்றன. குடும்பத்திலுள்ள வெவ்வேறு திறமைகளை ஒன்று குவிக்கின்றனர். பரஸ்பர கற்கையும் போதனையும் கொடுப்பும் ஏற்பும் நிகழ்கின்றன. எனவே, அதிகாரப்பகிர்வு பிரிவினைக்கும் வெவ்வோறவதற்கும் வழிவிடாது. பரஸ்பர அக்கறை நம்பிக்கை ஆகியவற்றில் உணர்வு பூர்வமான அபிவிருத்தி உள்ளவரை, அது, அதிக அளவிலான ஒற்றுமை, இசைவு, பலம் என்பவற்றிற்கே இட்டுச் செல்லும். இதுவே , பாடசாலை, வேலைத்தளம், அல்லது சமய ஒன்றுகூடல் தலம் (ஆலயம், கோவில், பள்ளிவாசல், தேவாலயம் போன்றவற்றில்) என்பனவற்றிலும் நிகழ வேண்டும்.

உண்மையான ஐக்கியத்திற்கும், அமைதிக்கும் , பலத்திற்கும் இதனைவிட வேறுவழியில்லை. பரந்த சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் இது எவ்வாறு பொருந்துகிறது என்பதை இப்போது பார்ப்போம். எமது நாட்டிலிருப்பதைப் போன்ற ஓர் ஒற்றையாட்சி முறையில் அரசாங்கத்தின் அதிகாரம் சட்டமியற்றல், நிறைவேற்றம், நீதி ஆகியவை ஒரு மத்திய அரசாங்கத்திலேயே குவிந்திருக்கின்றன. உள்ளூராட்சி சபைகள் நகராட்சிச் சபைகள், மாநகர சபைகள் என்பனவற்றின் மூலம், அதிகாரம் பங்கீடு செய்யப்பட்டுள்ளது; ஆனால் அடிப்படை அதிகாரப்பகிர்வும் என்பது இல்லை.

சமுதாயத்தின் இனக்ககூட்டு பன்மையாகவன்றி அடிப்படையில் ஒரே தன்மையினதாக இருக்கும் போது , அல்லது வகுப்பு வேறுபாடுகள் துல்லியமானதாக அடையாளங்களைப்பதியதிருக்கும் நிலையில் , வழமையான பெரும்பான்மை சார்ந்த உயர்ந்தோர் குழுவினரின் வழக்கமான அரசாங்க அங்கங்கள் மூலம் அரசாங்கத்தில் பெருமளவுக்குப் பங்குபற்ற வாய்ப்பேறப்படுகின்றது. இந்த நிலையில் , சமூகம், பெரிய முரண்பாடுகளெதுவுமின்றி நியாயமான அளவுக்குத் திருப்திகரமாக இயங்குகிறது; எனினும் , அனேக சமுதாயங்கள் பல்லின மற்றும் அடிப்டையில் பிரதானமாக ஒரே தன்மையினதாகவும் பெரியதும் சிறியமானவையாக உள்ளபோது, அத்தகைய அரசாங்க அமைப்பில் , மோசமான குறைபாடுகள் உள்ளதால் , அவை அடிப்படையில் அதிகாரப்பகிர்வின் அவசியத்தை உணர்ந்துள்ளன. இதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புமுறை இயல்பாகவே ஒரு சமஷ்டி முறை அரசாங்கம் சாந்ததாகும். இதில், ஒரு மத்திய அரசாங்கமும், மாநில அல்லது மாகாண அரசாங்கங்கமும் அமைந்திருக்கும் . மத்திய அரசாங்கம், அரசாங்கத்தின் அதிகாரங்களை சட்டமிமயற்றல் ,நிறைவேற்றல், நீதி மாநில அல்லது மாகாண அரசாங்கபங்குகளுடன் பகிர்ந்து கொள்கிறது. இணங்கப்பாடு காணப்பட்டுள்ள அட்டவணைகளின் அடிப்படையில் அதிகாரங்கள் பிரிக்கப்பகின்றன. மத்திய நிரல், பகிரங்கப்பட்ட நிரல் மற்றும் சில சமயங்களில் , சம்மதம் காணவேண்டிய நிரல் என்பன உள்ளன. ஆகவே, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா , சுவிற்லாந்து, இந்தியா ஆகியவற்றிலும் உலகெங்கிலும் மேலும் பல நாடுகளிலும் சமஷ்டி அரசாங்க முறைமை சிறியதும் பெரியதுமாக அமைந்திருக்கிறது. எனினும் , ஒற்றையாட்சி முறையோ அல்லது சமஷ்டி ஆட் முறையோ சிறந்தது என்பதை நிர்ணயிப்பதில் இடைஞ்சல் ஏதும் ஏற்படுவது தவிர்க்கப்படவேண்டும். நாட்டின் ஒருமைபாட்டைப் பாதுகாக்கும் அதேசமயம், இரு தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக ஒரு நியயமான தீர்வைக் கண்டறிவது என்பதுதான் முக்கியம். 1987 ஜீலை 29 செய்துக்கொள்ளப்பட்ட இலங்கை இந்தியா ஒப்பந்தத்தில் , ஒற்றையாட்சியோ அல்லது சமஷ்டி அரசாங்கமோ என்று எதுவும் குறிப்பிடப்படாமல், பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஐக்கியம் , இறைமை பிராந்திய முழுமை என்பனவற்றிற்கு உதவும் சக்திகளை வலுப்படுத்துவதன் அவசியத்தை உணர்த்தும் , சகல பிரஜைகளும் சமத்துவமாக, பாதுகாப்பாக, அமைதியாக வாழ்ந்து சுபீட்சமடையும் விதத்திலும், தங்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்திலும், பல்லின பன்மொழி, பல்வித சமுதாயமாக வாழ்வதில், அதன் சிறப்பியல்புகள் பேணப்பட வேண்டும். "

## இணைப்பா அல்லது பிரிப்பா ?

வடக்கையும் கிழக்கையும் இணைப்பதா அல்லது பிரிப்பதா என்ற விவகாரம் இப்போது நேர்மையாக எதிர்நோக்கப்பட வேண்டியுள்ளதாகும். அது ஓர் உணர்ச்சிபூர்வமான விவகாரம் என்பதால் இணைப்பதன் பிரச்சினை அனைத்துமே, பின்னணிக்குத்தள்ளப்பட்டுவிட்டதாக மேலே குறிப்பிடப்பட்டது. பொதியை முழுமையாகவே எதிர்க்கும் விதத்தில் மக்களைத் தூண்டிவிடக் கூடிய சாத்தியம் உள்ளதாக நம்பப்பட்டது இதற்கான காரணமாகும்.

இது தொடர்பாக இதுவரை நிகழ்ந்தது என்னவெனில், ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின் பின், இடம்பெறும் ஒரு வாக்குக்கணிப்பே இவ் விவகாரத்தை தீர்த்து வைக்கும் என்ற ஏற்பாட்டுடன், 1987ம் ஆண்டின் இலங்கை இந்திய உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதாகும். அதன்படி வட கிழக்கு மாகாணம் உருவானது! எனினும் இந்த அலகுக்கான அதிகாரப்பகிர்வு நிறைவேற்றப்படவில்லை. நிதி ஒதுக்கீடும் இடம்பெறவில்லை. மாகாண முதலமைச்சர்கள், இது தொடர்பாக தலைநகர் கொழும்புக்கு அனேகமாக தொண்ணூறு தடவைகள் சென்றிருக்கிறார். பலன் எதுவும்கிட்டவில்லை. இறுதியாக அவர் நம்பிக்கை இழந்த நிலையில் ஒரு தலைப்பட்சமாக சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தவே, நாடு கடத்தப்பட்டார்.

1995 ஆகஸ்டில் முன் வைக்கப்பட்ட ஜனாதிபதி சந்திரிக்காவின் சமாதான யோசனைப் பொதி ஓர் இணைந்த வட கிழக்குத் திட்டத்தை உள்ளடக்கியிருந்தது. இது ஓர் உயிர்ப்பூட்டும் முன்னேற்றச் செயற்பாடாகும். எனினும் இது 1996 பெப்ரவரியில் மரியாதையுள்ள விதத்தில் மாற்றப்பட்டது !. இணைப்பு, மீண்டெழாத அடிக்குள்ளாயிற்று. பொதியின் பிரதான கோட்பாட்டுத்திட்டமொன்று, எல். ரி. ரி ஈயை ஒரு புறம் விட்டாலும் , தமிழ்க்கட்சியுடன் ஆலோசனை எதுவும் கலக்கமாலேயே கடமைப்புறக்கணிப்புக்கு உள்ளாயிற்று.

1997 ல் அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கான அரசாங்கம் தெரிவித்த யோசனைகளில், வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பாக கடுஞ் சிக்கலான முறைமையொன்று இடம் பெற்றிருந்தது. பிரதான யோசனையாக இடம் பெற்றிருந்தது. கிழக்கு மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு என்பனவற்றில் அவை வடக்கு மாகாணங்களான யாழ்ப்பாணம் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு என்பவற்றோடு இணைக்கப்பட வேண்டும் அல்லது இணைக்கப்படக்கூடாதா என்பதனைத் தீர்மானித்த வாக்குகணிப்பொன்று நடைபெற வேண்டும் என்பதாகும். அத்தகைய யோசனைகள் யார் எத்தகைய கலந்தாலோசிப்பு முறைமூலம் தீர்மானித்தனர் என்பது தெரியவில்லை. சம்பந்தப்பட்ட கட்சிகள் அத்தகைய யோசனைகளை ஏற்றுக்கொள்வதற்குள்ளே வாய்ப்பு, அல்லது மெய்மைத்தன்மைகளை உணர்ந்தலே அல்லது போதுமான விளக்கம் என்பன இருந்தாகத் தெரியவில்லை.

ஜுன் 18, 2000 அன்று வெளியான சண்டே ரைம்ஸ் தெரிவுத்துள்ளபடி, மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்களின் விளைவானதும் இறுதியாக ஏற்படுத்தப்பட்டதுமான சீரமைப்புப் பொதி, வட கிழக்கு நிர்வாகத்தை மட்டுப்படுத்தப்பட்டதாக ஒரு மூன்றாண்டு காலப்பகுதிக்கு நடத்துவதற்கென ஓர் இடைக்கால சபையை அமைப்பதற்கும் அதன் பிறகு கருத்துக்கணிப்பை நடத்த வகை செய்கிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி, கிழக்கில் மட்டுமே இந்தக் கருத்துக் கணிப்பை நடத்த விரும்புகின்றதென்றும், ஆனால் ஐ. தே. கட்சியோ, வட கிழக்கு முழுவதிலுமே அதனை நடத்த விரும்புவதாகவும் தெரிகிறது. இந்தயோசனைகளை எல். ரி. ரி. ஈ உம் சமர்ப்பித்தால், நடைமுறை தாமதமாகலாம் என்பதால், பொ. ஐ. மு இச்சிரமைப்புக்களை நேரடியாகவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவே விரும்புகிறது. ஆனால் , ஐ. தே. கட்சியோ, எல். ரி. ரி. ஈ பிரச்சனையில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பு என்பதால், இவ் யோசனைகள் அதனிடம் சமர்க்கப்படவேண்டும்மெனக் கருதுகிறது. ஜுன் 19, 2000 திங்கட்கிழமை வெளியான டெய்லி நீயூஸ் பத்திரிகை அலறுங்குலையொத்த முறப்பக்கத்தலையங்கத்தில் எல். ரி. ரி. ஈ பயங்கரவாதிகளுடன், இடைக்காலச் சபையொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தயாராகவில்லை எனத் தெரிவித்துள்ளது. இடைக்காலச்சபையொன்றில், கொலைகாரப் பயங்கரவாதியான எல். ரி. ரி ஈ அமைப்பு பங்கேற்பதை ஜனாதிபதி மும்மரமாக நிராகரித்துள்ளார். சகல கொலைகாரப் பயங்கவாதச் செயற்பாடுகளையும் விட்டொழித்து , ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொண்ட பின்னரே எல். ரி. ரி. ஈ அதில் பங்குபற்றமுடியும்.

இதே சமயம் (சண்டேடைம்ஸ் ஜுன் 18) சகல அமைச்சரவை உறுப்பினர்களுக்கும், பிரதி அமைச்சர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிய நினைவுக்குறிப்பொன்றில் சகல அத்தியாவசியமற்ற பொது நிகழ்ச்சிகளையும் இரத்துச் செய்து விடும்படியும், அத்தியவசிய நிகழ்வுகளில் பங்குபற்றும் வேளைகளில் தங்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் செயற்பாடுகளை நெருக்கமாகக் கூட்டிணைத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளார். 3பேர் கொல்லப்பட்டதற்கும் மேலும் 7 பேர் காயமடைவதற்கும் காரணமான இரத்மலானைச் சம்பவம் நிகழ்ந்த ஒரு வாரத்தின் பின், வத்தளையில் இடம்பெற்ற மற்றெரு குண்டு வெடிப்பை நாடெங்கிலும், ஊடுபரவும் ஆற்றலுடைய பயங்கரவாத சக்தியாக விளக்குவதையே இது காட்டுகிறது. ஆனாலும் ஜனாதிபதி, சொற்பவேளைக்கு முன்னதாக, எல். ரி. ரி. ஈ விரைவில் தோற்கடிக்கப்பட்டுவிடும் என நாட்டுக்கு உறுதிகூறியிருந்தார். இவ்விவகாரம் முழுவதிலும் சம்பந்தப்பட்டதான காரணிகள் இப்போது, மூன்று தலைப்புக்களின் கீழ் விவாதிக்கலாம். முதலாவது, நடைமுறை சாத்தியமான ஒரு சமாதானத்தீர்வுக்கு, இணைப்பு இன்றியமையாத ஒரு மூல தத்துவமா ? இரண்டாவது, தெற்கிலுள்ள சிங்கள சக்திகள் அத்தகைய தீர்வொன்றை ஏற்குமா என்பது உண்மையில் நினைத்துக்கூடப்பார்க்க முடியாததா? மூன்றாவதாக உண்மையான காரணிகள் யாவை ?

அத்தோடு இரு தரப்பிலும் கடினமான நிலைகள் உள்ளதால் ஒரு புதிய அணுகுமுறைக்கும், ஒரு புதிய தகவு நோக்குக்கும், தடையைத்தாண்டி இலட்சியத்தை எய்தக்கூடிய ஓர் உருவாக்கமாற்றுக்குச் சாத்தியம் உள்ளதா என்பது ?

## இணைப்பு

இன முரண்பாட்டிற்கான எந்தவொரு நியாயமான நடைமுறை சாத்தியமான தீர்விலும் அறுதியானதும் இன்றியமையாததுமான வட கிழக்கு இணைப்பைப் பொறுத்தவரை பின்வருபவை தெட்டத்தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும்; அவை அலட்சியப்படுத்தப்படவுங் கூடாது.

தமிழ்க்குரலின் போதுமான பிரதிநிதித்துவம் அல்லது அளவளாவல் இன்றியே, இணைப்பு போன்ற விவகாரங்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்குமிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுத்த தீர்மானங்களும் எட்டப்பட்டுள்ளன. தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பிரதிகூலங்களும், அவர்கள் ஓரங்கட்டப்பட்டதும் எதிர்நோக்கப்பட்ட அடிக்குமேல் அடி விழுந்த நிலமைகளும் ஏற்கனவே சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்டது தொடர்பாகத் சிங்கள அடிப்படைத் தீவிரவாதிகளின் பிரதிவாதம், கடந்த காலங்களில் தமிழர்கள் கொண்ந்தவை எனக் கொள்ளப்பட்ட உரிமைகளைச் சமீபகாலத்தில் வழங்கப்பட்ட சில சலுகைகள் சரிசெய்துவிட்டன; ஒடுக்கப்பட்டிருக்கிறர்கள் என்பதேயாகும்! தமிழ் ஒரு தேசிய மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக் அனுமதிக்கும் வேலைவாய்ப்பபுக்களுக்குகென விசேட திணைக்களங்கள் உள்ளன. அவசியமாக இருப்பதெல்லாம், யுத்தம் நிறுத்தப்படவேண்டும்; அத்தோடு எல்லாமே சரியாகிவிடும் என்பதே. எனினும், இது போதுமானதெனச் சொல்லமுடியாது. சலுகைகளும் அவற்றின் நிறைவேற்றமும் நியாயமான எதிர்பார்ப்பையும் தேவைகளையும் விட மிகவும் பின்தங்கிய நிலையிலேயேயுள்ளன. சிங்களப்பெரும்பான்மையினரிடம்மிருந்து சிறுபான்மையினர்க்குக் கிடைக்கும் இலவச வழங்கல்கள் போதுமானவை அல்ல. சிறுபான்மையினர் மீண்டும், மீண்டும் கைவிடப்பட்டுள்ளனர். தமிழர்களுக்கு அவர்களின் சுயமரியாதைக்கு இசைவானதாகவும் திருப்திகரமானதாகவும் இருக்கக்கூடிய விதத்தில் ஒரு முறைமையும் அமைப்புக்களும் இருக்க வேண்டும், தமிழ்ச் சமூகத்திற்கு, தன்னாட்சியுடன் கூடிய, தொடரானதும் ஏற்புடையதுமான கூறு ஒன்று தேவைப்படும். அது, சக வாழ்வு, ஒன்றிலொன்று தங்கியிருப்பதான அமைப்பொன்றின் ஒரு தன்னாதிக்க கூறாக இருக்க வேண்டும். சிங்கள முஸ்லிம் சமூகங்கள் யதார்த்த நிலையில் இதனை அங்கீகரிக்க வேண்டும். சுதந்திரத்திற்குப் பின்னர்தான் ஐந்து தசாப்தங்களின் உறுதியானதோர் ஒற்றையாட்சி முறைமேயோ அல்லது *1957, 1965, 1983*ம் ஆண்டுகளில் (இணைப்பின்றியே), *9* கூறுகளாக்கும் அதிகாரத்தைப்பங்கிடுவதானது போன்றி ஒரு திட்டம் கூட, தமிழ்மக்களின் தேவைகளுக்கு இனிமேலும் வகை செய்யா.. தமிழர்கள் , அளப்பரிய இழப்புக்களுடனும் தியாகத்துடனும், சுய மரியாதையுடன் கூடியதான தனியான ஒரு நிலைப்பாட்டிற்குத் தங்களுக்குள்ள உரிமைக்காகப் போராடியுள்ளார்கள். வரலாறு புரட்டமுடியாதது. ஈட்டியுள்ள அனைத்தையும் அதாவது மெய்ந்தநடப்பில், ஓரளவுக்கு எய்தியுள்ள பிரிந்துபோகும் சாதனையையும், ஒரு நியாயமான அளவில் பேரம்பேசத்தக்க வலுவான நிலையையும் அவர்கள் கைவிடுவார்கள் என்றும், பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கேற்ப மீண்டும் ஒரு முறை சிறுபான்மையினர்க்கு கிடைக்கும் இலவச வழங்கல்களில் தங்கியிருப்பதற்கும் மீண்டும் அடங்கிப்போக்கூடிய ஒரு முறைமைக்கு உட்படுவார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது.

### திம்புக் கோட்பாடுகள்

ஆகவே, தமிழர்களுக்கு ஏற்புடையதான சமாதானத் தீர்வுக்கு அடிப்படையாகச் சில அடிப்படைக் கோட்பாடுகளைத் தெளிவுபட எடுத்துரைத்தனர். பேச்சுக்கள், பூட்டான், திம்புவில் 1985ம் ஆண்டு நடைபெற்றன. தமிழர்களை ஈ. என். எப் (இதில் பிரபாகரன், பத்மநாதன் சபாரட்ணம், பாலகுமார், ஆகியோர் இடம்பெற்றனர்) புளொட் ரி. யு எல் எப் ஆகியன பிரதிநிதித்துவப்படுத்தின் ஈ. என். எல். எப் நான்கு மூலக்கோட்பாடுகளைத் தெளிவுபட எடுத்துரைத்தது. அதனை புளொட்டும் ரி. யு. எல். எப்பும் ஆதரித்தன.

1. தமிழர்களை ஒரு தனி நாட்டினராக அங்கீகரித்தல்.
2. தமிழர்களுக்கு ஒரு தனித்தாயகம் உண்டு என்பதை அங்கீகரித்தல்
3. தமிழ்தேசத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தல்
4. தீவில் உள்ள சகல தமிழர்களுக்கும் பிராஜஉரிமைக்கும் அடிப்படை உரிமைக்குமுள்ள நியாயத்தின் அங்கீகரித்தல்.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதி ஜனாதிபதியின் சகோதரர் எச். டபிள்யு. ஜயவர்த்தன ஆவார். கொழும்பில் முன்னர் இடம்பெற்ற அனைத்துலக கட்சிப்பேச்சுக்களின் போது முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கப்பால் அரசாங்கத்தினால் செல்ல முடியாதிருக்கிறதென்றும், எனவே, இந்தக் கோட்பாடுகளை ஏற்க முடியாதுள்ளது என்றும் அவர் கூறினர். பேர்சுவார்ததைகளை வன்மையாக எதிர்த்தனர். எனினும் திம்புவில் வலியுறுத்தப்பட்ட நான்கு கோட்பாடுகளும் அடிப்படைத் தமிழ் அபிலாஷைகளைத் தெளிவாக எடுத்துரைப்பதற்கான ஒரு நல்ல அத்திவாரமாகவே இன்னுமிருந்து வருகின்றன.

திம்புப் பேச்சுக்கள் தோல்வியுற்றிருப்பினும், 1987ம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தம், இதே கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு நியாயமான சமரச இணக்கத்திற்கு அமைவானதாக இருப்பது போல் தெரிகிறது. எனினும் அது நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. அதன் பிறகு, மேலே விளக்கப்பட்டபடி பல்வேறு யோசனைகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. இறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவிருப்பதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. திம்புக் கோட்பாடுகளின் பின்னணியில் இவை தமிழர்களினால் பரிசீலிக்கப்படும்.

இரு தீவிரத் தரப்பிலும் கடினமான நிலைப்பாடுகள் இருப்பினும் கூட, முட்டுக்கட்டையை அகற்றுவதற்கான ஒருவகை முறைமையை வகுக்க முடியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எனினும் இரு தரப்பினர்க்கும் ஏற்புடையதான அத்தகைய ஒரு வகைமுறையை, ஓர் உருப்படியான மாற்றாக ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகவே இது அமையப்போகிறது எனக் கொள்ளலாம்.

## தெற்கில் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மை

இணைப்பை ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மைக்குத் தெற்கில் உள்ள வாய்ப்புப் பற்றிய விவகாரம், தொடர்பாக, முதலில் சில குறிப்புரை அவசியமாகிறது. தெற்கிலுள்ள மக்களுக்கு இந்த இணைப்பு ஏற்றுக் கொள்ள முடியாதது என அடிக்கடி கருதப்பட்டு வருகிறது; எனினும், சுய நலன்களைக் கொண்டுள்ளோரால், அது சம்பந்தமாகத் தவறான பல கருத்துக்கள் தரப்பட்டுள்ளதால் அனேகர், அதிகாரப்பங்கீடு பற்றிய முறைமையை முற்றாகவே எதிர்கின்றனர் என்பது காட்டுவது போலவே, இணைப்புக்கு எதிர்ப்புக் காட்டுவோர் ஏன் அதனை எதிர்க்கின்றனர், என்றால் அவர்களுக்குப் பல்வேறு விதமான தவறான கருத்துக்களும் ஊட்டப்பட்டிருக்கின்றன என்பதைப் பின்வருவன எடுத்துரைக்கும்.

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக்குழு (உ. ஒ. ம / இ. கு) இதனை நேரடியாகவே கண்டறிந்திருக்கிறது. அது, இலங்கையின் பல்வேறு பகுதிகளில் யுத்தம், சமாதானம், அதிகாரப் பங்கீடு என்பவை தொடர்பாக நானாவித நிகழ்ச்சிகளையும், கருத்தரங்குகளையும், பட்டறைகளையும் சமாதான யாத்திரைகளையும், நிகழ்ச்சிப் பரிமாற்றங்களையும் தெருவோர நாடகங்களையும் நடத்தியிருக்கின்றது. சரியான உண்மைத்தகவல்கள் உரிய பின்னணியில் முன் வைக்கப்பட்டால் மக்கள் அவற்றை ஏற்றுக்

கொள்கின்றனர் என்பது புலனாகியுள்ளது. சிங்களக் கிராமங்களிலும், கோயில்களிலும், தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் ஒரு சேர வாழும் பட்டணங்களிலும், பொலன்னறுவை, திருகோணமலை சார்ந்த எல்லைப் பகுதிகளிலும், மாணவர்கள், புத்திசீவிகள், மதகுருமார் என்போர் மத்தியிலும் இவ்வுண்மை புலனாகியிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் ஒரு நிகழ்ச்சியின் ஆரம்பத்திலேயே கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டும் வெளிக்காட்டப்பட்டும் இருந்திருக்கின்றன. ஆனால், பல்வேறு கருப்பொருட்கள் முன்வைக்கப்பட்டுப்பின்னர், அவை தொடர்பான வெளிப்படையான, நியாயமான வாதங்கள் நடந்தேறிய பிறகு குறிப்பான ஒழுங்குமுறையான ஒரு நாள் நிகழ்ச்சியின் இறுதியின்போது, பங்குபற்றியோர்க்கிடையே ஆரம்ப இணக்கப்பாடு ஏற்படுவது வழக்கமாகிவிட்டது. அதன் பிறகு ஆழமான ஆய்வு தொடர்கிறது. மக்கள் மத்தியில் பொதுவாகவே, நியாயமான தன்மையும், ஆர்வமும் விட்டுக் கொடுக்கும் பரந்த மனப்பான்மையும் உள்ளன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. உ. ஒ. ம / இ. கு இதில் போதுமான ஆதாரத்தைக்கண்டுள்ளது. எதிர்வரும் நாட்களில், பெருவாரியான இம் மக்கள், அதிகாரப் பங்கீடு தொடர்பான உண்மைகளை விளங்கிக் கொள்ளும் போது, அவர்கள் வீறுகொண்டெழுந்து தங்களின் தலைவர்களிடம், உண்மையில் அவர்கள் தங்களின் சொந்த தலைவர்களையே உருவாக்கி, நீதியின் அடிப்படையில் உண்மையான சமாதானம் வேண்டி வற்புறுத்திக் குரல் கொடுப்பார்கள்.

எனினும், சுயநலன்களோடு இறுக்கமாகப்பிணைக்கப்பட்டுள்ளதால், வெல்ல முடியாபடி கடினமான கருத்துடைய தீவிரவாத பிடிவாத குணமுள்ள சிங்களதரப்பொன்றும் உள்ளது என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். ''சிங்கள உரிமய'' என்ற புதியதோர் அரசியல் குழுவொன்றும் வழிமுறைகளிலிருந்தே நெறிப்படுத்திச் செயற்படுத்திவருவதும் நோக்கத்தக்க அதன் தலைவர்கள் சிலரின் சக்தி மிக்க பிற்போக்குவாத, மிகை வெறி கொண்ட நாட்டுப்பற்றுள்ள குழாம் செயல்பட்டு வருகிறது.

இவ்விஷயத்தில் பௌத்த பிக்குமாரின் நிலைப்பாடு மிகுந்த முக்கியத்துவமுடையதாகும். கடந்த காலத்தில், சில சந்தர்ப்பங்களில், பௌத்தபிக்குமார் சிலர் எதிர்மறைவான பாகந்தாங்கியுள்ளர் என்பதும், நோக்கற்பாலது. உதாரணமாக, 1957ம் ஆண்டு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க, தமிழ்மொழியின் நியாயமான பிரயோகம் பற்றிய பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் தொடர்பான, வசைப்பெயர்பெற்ற நிகழ்வினைக் குறிப்பிடலாம். வலுமிக்க பிக்குமார் குழுவொன்று றொஸ்மிட் பிளேஸ்சிலுள்ள அவரின் இல்லத்திற்குப்படையெடுத்து, அதனை விலக்கிக் கொள்ளுமாறு வற்புறுத்தியது பண்டாரநாயகா வீட்டுக்குள் சென்று அவ்வொப்பந்தத்துடன் திரும்பி வந்து, அவர்கள் முன்னிலேயே அதனைக் கிழித்தெறிந்தார்கள் இது, உண்மையில் மிக மோசமான சீர்கெட்டதோர் செயலாகும். வெளிநாட்டு படையெடுப்பாளர்களுக்கெதிராக பௌத்த மதத்தையும் பண்பாட்டையும் பாதுகாப்பதில் மிகவும் உறுதியான, வரலாற்றுமிக்க பங்களிப்பினைச் செய்துள்ளனர் என்பதும் நினைவு கூரத்தக்கது ஐக்கியப்பட்ட சுதந்திர இலங்கையொன்றை கட்டியெழுப்புவதற்குத் தாங்கள் ஒரு புதிய கூடுதல் ஆக்கபூர்வமான பங்களிப்பினைச் செய்ய வேண்டியுள்ளது என்பதை உணர அவர்களுக்குச் சொற்ப காலம் எடுத்தது. இதனிடையே, அது இச்சந்தர்ப்பத்தின் உட்படுத்திக்கொண்ட எதிர்மறைவான பங்கேற்புக் காரணமாக, சங்கத்தினர் பொதுவாகச் சிங்கள தீவிரவாதிகளின் பக்கமே உள்ளனர் என்று ஓரளவுக்குப் பரவலாக நம்பப்பட்டது. ஆனால், இது உண்மைக்குப் பெரிதும் புறம்பானாதாகும்.

இலங்கையில் சங்கத்தினர் மேலானதோர் வரலாற்றுப் பாரம்பரியத்தின் வழிவந்தோராவர். பின்னர், அவர்கள், சமீபகாலத்தில் இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியின் போது அநாகரிக தர்மபால சங். எஸ்., மஹிந்ததேரர் எந்தவொருக்கும் ஈடான உலகில் புத்திஜீவிகளாகவும் ஆன்மீக

பெருந்திறலாளர்களாகவும் உள்ளோரைக் கண்டனர். அவர்கள், பேரசு முறைமையும் அதனோட தொடர்புடைய அனைத்திலிருந்தும் அவர்களின் சொந்த இலங்கை மக்களை எண்ணிய உன்மத்த நிலையிலிருந்தும், மூழ்கியிருந்த அக்கறையில்லாத புறக்கணிப்பு போக்கிலிருந்தும் விடுவித்துக் தங்களின் உரிமைகளுக்காக வீறாந்த எழுச்சியுடன் அவர்களை நிற்க வைப்பதற்கும் இடையறாது பாடுபட்டனர். அவர்களின் எந்தவித குறுகிய மனப்பாங்கோ மட்டுமீறிய தன்னாட்டுப்பற்றில் எவ்வித குறையுமோ இருக்கவில்லை. அவர்களின் சொல்லாட்சித்திறன், குறிப்பாக நாட்டிலுள்ள ஏனைய இனங்களுக்கும், மதங்களுக்கும் மாறாக இருக்கவில்லை ஆனால் தங்களின் சொந்தத்தாய் நாட்டின் மீது விசுவாசமும் அர்ப்பணிப்பும் குன்றியிருந்தோர்மீதான அனைவர்க்கும் எதிரானதாகவே அது திருப்பட்டிருந்தது, உண்மையில் கிராமங்கள் கோயில்கள் எங்கிலும் சுற்றித்திரிந்த தர்மபால தங்களின் உரிமைகளையும் பொறுப்புக்களையும் கவனியாது கைவிட்டுவிட்ட தனது சொந்த சிங்கள பௌத்தர்கள், மதகுருமார்கள், பொதுமக்களை தமது வசைமாரிச் சொற்பொழிவில் மிகவும் கடுமையாகச்சாடினார். சங். மஹிந்த தேரோவின் ஒப்பிடப்படமுடியாத விடுதலைத் தியானம் (நிதஹாய தெஹென', தத்துவார்த்தம், ஆன்மீகம் விடுதலைப் போராட்டத்தில் நீடித்த பயிற்சி என்பன பற்றிய அனைத்துத் துறையையும் சூழ்ந்தே இருந்தது. அவரின் கவிதைத் துளிகள் சக்தியையும் ஒளியையும் பரப்பும் தீப்பொறிகளாகும். இலங்கையில் மக்களின் தலைமைத்துவதற்கான போராட்டத்தில் சமத்துவம், ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான அன்புணர்வுத் தியாகம் மக்கள் தலைமைத்துவத் துளிர்பிற்கான போராட்ட மீதான அர்ப்பணம் என்பனவற்றின் தரங்கள், எங்கும் எந்தமொழியிலும் காண முடியாத அளவுக்கு அவற்றில் மிகச் சிறந்தனவாய் உள்ளன எனத்துணிந்து கூறலாம். இலங்கையில் இன்று நீதியின் அடிப்படையில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு இத்தன்மைகளே அவசியமாக உள்ளன.

உயர்ந்த மலைகளை வீழத்தியும் பள்ளத்தாக்குகளை நிரப்பியும் உயர்ந்தவையையும் தாழ்ந்த அனைத்தையும் சமமாக்குவதே மிக உயர்ந்த கோட்பாடு அதுவே உண்மை என்பதை உங்கள் குரல்களை உயர்த்தி வெளிநாடு எங்கிலும் பரப்புவீராக.

இச்சை மேவிய கபடதாரிகளின் ஒடுக்குமுறை காரணமாய் அரைச்சாவுக்குட்பட்டு மிக மோசமான பேரழிவுகளை எதிர் கொள்ளும் ஒடுக்கப்பட்டோரின் பேரால் ஏழென்ன? அன்புதோய்ந்ததாய் ஆயிரக்கணக்கில் தூக்குமேடை அமைக்கவும் நான் தயார்.

தாக்குவோரின் தாக்குதல்களை சிங்கத்தின் வலிமையோடெதிர்த்து நின்று இவ்விலங்கைத் தீவுக்கு விடுதலைகிட்டும் வரை அழிப்போரை அழித்து நான் முன்னேறுவேன் அதுவே எனக்கு துறவினதும் அனைத்து மதங்களின் போதனைகளினதும் கூட்டு மொத்த வரவாய்மையும் தலைவர்கள் என அழைக்கப்படும் இவர்களின் உலோகாயத கட்சி அமைப்புக்கள் எமக்கு மகிழ்ச்சியை அல்ல, துன்பத்தையே தருவன எமதனைத்து உடமைகளை இழக்கநேரினுங்கூட அவற்றைப் பொருட்படுத்தாது முன்னேறுவோம், செய்ய வேண்டியுள்ளதை செய்து முடிக்க நாம் ஒருவரோடொருவர் இணைந்து ஒன்றுபட்டு முன்னேறுவோமாக.

உண்மையில் இது ஓர் ஆழ்ந்த ஆன்மீக நோக்காகும், உலோகாயுத யதார்த்தங்களை இறுகப்பற்றிக் கொள்வது உட்பட்டதோர் ஆன்மீக நோக்கே ஏனைய மதங்களில் கூட இதற்கு மிக நெருங்கியதாக இணையொத்த கருத்துக்கள் இருக்கவே செய்கின்றன. அது தெரியக்கூடிய, தெரியாத தீய சக்திகள் அனைத்திற்குமெதிரான போருக்கான ஆன்மீக இயல்பு என அழைக்கப்படுகிறது. ஹிந்து மரபு சார்ந்த பகவத் கீதையிலும், ஏசாயா, அமோஸ், ஆகியோரின் மற்றும் பழைய ஏற்பாடில் இடம்பெற்றுள்ள தீர்க்கதரிசிகளினதும் யேசுக்கிறிஸ்துநாதரின் போதனைகளில்கூட

இந்தப் போருக்கான ஆன்மீக இயல்பு மிக வலுவாகத் தெளிவாக இடம்பெற்றிருப்பதைக் காணலாம். இஸ்லாமிய மரபிலும்கூட அனேக உதாரணங்களை எடுத்துக் காட்டமுடியும்.

இருப்பினும், சுயநலன்களால் உருக்கோணலுக்கு உள்ளான மனங்கொண்ட குறுகிய நோக்கமும் முரட்டுத்தனமுடையோர், தவிர்க்கமுடியாதபடி, மகிந்ததேரரின் மேலானவார்த்தைகளை, சிறுபான்மையினர்க்கெதிரான வன்முறைக்கு ஒரு சாட்டாக சீர்குலைத்து தவறான முறையில் பயன்படுத்தியுள்ளனர். அநாகரிக தர்மபாலவின் இலட்சியங்களுக்கு கூட, நடுத்தர வகுப்பினராலும் கீழ் மட்ட நடுத்தர வகுப்பு வெறியர்களையும் தங்களின் கீழ்தரமான சொந்த வர்த்தக நலன்களுக்காக தவறான விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, ஒரு சிலரின் பார்வையில், தர்மபாலாவின் படிமம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதொன்றாகத் தோற்றமளிக்கிறது.

எனினும், ஊடகத்தின் சில சக்திமிக்க பிரிவுகளால் முக்கியத்துவம் குன்றிய கும்பலின் கண்டனங்களுக்குக் கொடுத்துள்ள பரவலான விளம்பரங்கள் தர்மபால, மஹிந்த தேரோ ஆகியோரின் மூலக்கருத்தை மருங்கடிக்கவோ அல்லது இன்றைய பின்னணியில் அதன் முக்கியத்துவத்தை நீக்கிவிடவோ முடியாது. அது செயலிழந்து விடவில்லை; அது மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்தேயுள்ளது. என்பதற்கான மிகுந்த உற்சாகமூட்டும் அறிகுறிகள் தெட்டத்தெளிவாகவே தெரிகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் வித்யோதயப் பல்கலைக்கழகத்தின் காலஞ்சென்ற சங். கொட்டகம வச்சிஷ்யார தேரோ, கல்யாணிவன்ஸ நிக்காயவின் மஹாநாயகதேரர், காலஞ்சென்ற சங். பட்டபொல அனோமதாஸ்லி ஆகியோர் வாழ்வாங்கு வாழ்ந்தனர். இவர்கள் இருவருமே, தர்மபால, மஹிந்ததேரர் ஆகியோர் காட்டிய உண்மையான பாதையில் அறிவுத்துறையிலும் ஆன்மீகத்துறையிலும், பலம்பொருந்திய தூண்களாக நிலைத்திருந்து சமூக மாற்றம், இன முரண்பாட்டு விவகாரம் என்பனவற்றில் பரந்த, தாராள, ஆக்கபூர்வமான தெரியநோக்கினைக் கொண்டிருந்தனர் என்பதும் வலியுறுத்தப்படவேண்டிய தொன்றாகும். உ. ஓ. ம / இ/. கு. வின் முன்னோடிகளான அனைத்திலங்கை உழவர் காங்கிரஸ் தேவசரண அபிவிருத்தி நிலையமும் இவ்விரு பெரும் குருமாரிடமிருந்தும் வழிகாட்டலைப் பெற்றுக் கொண்டது, அளப்பரிய பெறுபேறாகும். இதே அந்தஸ்துடன், போற்றப்பட்டமற்றிருப்பவர் திருகோணமலை அபயராமவின் சங்கநாயகதேரின் காலஞ்சென்ற சங்மொறகல்ல விமலதம்ம ஹிப்பிட்டிய சங்க நாயக்கத் தேரர் காலஞ்சென்ற சங். நவகமுவ தமமாலோக ஆவர். இவர்களின் கையொப்பங்கள், நூற்றுக்குமேற்பட்ட பிக்குகளினதும் (ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்களை உள்ளடக்கிய) வேறு சுமார் 60 மதகுருமாரினதும் கையொப்பங்களை இணைத்துக் கொண்ட 1000த்திற்கும் மேற்பட்ட கையொப்பங்கள் அடங்கிய அட்டவணையில் தன்மை வகித்தன என்பது குறிப்பிடத்தக்கது. இது உ. ஓ. ம / இ/ கு. அதிகாரப் பரவலாக்கல் சமாதான தீர்வு சம்பந்தமான சில உறுதியான யோசனைகளையும் உள்ளடக்கியிருந்தது என்பது நோக்கற்பாலது. இதற்கு முன்னால் 1992 ல் உ. ஓ. ம / இ/ கு, யுத்தத்தை நிறுத்தவும், அதிகாரத்தைப் பகிர்வதற்கும், ஒரு சமாதானதீர்வை ஏற்படுத்துவதற்கான சமாதானப் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்திய யோசனைகளை உள்ளடக்கியதாகவும் ஒரு கூட்டு இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டுமென்ற ரீதியில் அறைகூவல் விடுத்திருந்தது. இதனை ஆதரித்து 200 க்கு மேற்பட்ட கையெழுத்துக்களடங்கிய மகஜர் ஒன்றும் அதில் இணைக்கப்பட்டிருந்தது. நீதிக்கும் சமாதானத்திற்குமாக துணிவுடன் போராடியவரும் விமுக்தி தர்மகேந்திரவின் தலைவருமான காலஞ்சென்ற உடுவர சத்தாதிஸ்ஸ தேரர், உ. ஓ. ம / இ/ குவின் காலத்திற்கு முற்பட்டவர் எனினும், பெயர் குறிப்பிடப்படவேண்டியவர். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த மேலும் பலரும் இவ்வாறு பெயர்

குறிப்பிடத்தக்கவர்கள். ஆனாலும் விசேடமாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் சமாதான செயற்பாடுகளில் அதிலும் பிரதானமாக உ. ஓ. ம /இ/ குவின் பங்களிப்போடு இணைந்து கொண்டவர்கள் ஆவார் என்பது நோக்கற்பாலது.

21வது நூற்றாண்டின் உதயத்தோடு தோன்றிய உடனடித்தேவை, இலங்கையில் மக்களின் சகல பிரிவினருக்கும், நீதியின் அடிப்படையில் அமைந்த ஒரு சமாதானத் தீர்வை ஏற்படுத்துவதற்குத் தெற்கிலுள்ள மக்களை வழிநடத்திச் செல்லக்கூடிய சங்கவின் ஒரு தலைமையாகும், அத்தகையதொரு தலைமைத்துவம், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில் நிகழ்ந்த புரட்சி இயல்பு வாய்ந்த நிகழ்வுகள், பேச்சுவார்த்தைகள், ஆக்கத பூர்வமான செயற்பாடுகள் மூலம் தோற்றம் பெற்று வளர்ந்து, கனிந்து முதிர்ச்சியடைந்துள்ளதற்கான வலுவான அறிகுறிகள் தென்படுகின்றன. அலை எப்பக்கம் பாயத் திரும்புகிறது என்பதைக்காட்டுவதாக அமைந்த, சமூக வரலாற்று மாதிரியொன்றை இங்கு எடுத்துக் கூறுவது பொருத்தமாக அமையும். இது, பொலன்னறுவை மாவட்டத்தின் அதி சிரேஷ்ட நாயக்கத்தேரர் எனக் கொள்ளப்படும், அம்மாவட்டத்தின் பிரதம அதிகரண சங்க நாயக்கர், சங், கும்புறுக்வெல்ல திஸாந்த தேரரோடு பின்னிப்பிணைந்த நிகழ்வாகும். 1957ம் ஆண்டு. பிரதமரின் வாசல்தலத்திற்குப் படையெடுத்ததாக முன்னர் குறிப்பிட்ட சங்க உறுப்பினர்களில் ஒருவராக ஓர் இளம் பிக்குவாக கலந்து கொண்டவர், அவர் சமீபத்தில் அவர் பகிரங்கமாகவே, அவ்வொப்பந்தத்தைக் கிழித்தெறிவதற்கு முன்னதாக எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக, எத்தைகயதோர் அழிவு விளைவிக்கவல்ல (போரிடர் பயக்கவல்ல) எச்சரிக்கையை விடுத்தார் என்பதை எடுத்துக் கூறியிருந்தார். இப்போது ஒரு நியாய்மான தீர்வு காணப்படாவிட்டால், பிரச்சினை பின்னொரு சந்தர்ப்பத்தில் மோசமான நூறாயிரம் மடங்கு கூடுதலான பூதாகாரமாய் உருவெடுக்கும், என்றார். பிக்குகள் அசையவில்லை அவர் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார். அது ஒரு துன்பியல் சம்பவனம் ஆனால், பின்னர் தொடர்ந்துவந்த கொந்தளிப்பான நிகழ்வுகளுக்குக் காரணமாயிருந்து வளர்ச்சியுற்றுப்பயன் விளைந்த அந்த விதை அன்றுதான் முளைத்துவிட்டது. தொண்ணூறாம் ஆண்டு காலப்பகுதி முழுவதும், தீவிரவாத சிங்கள சக்திகள் பொலன்னறுவை மாவட்டத்திலும் அதற்கு அப்பாலும், தங்களின் நோக்கத்திற்காகவும் பிரச்சாரங்களுக்காகவும் அவரின் வலுமிக்க ஆதரவைப்பெறக் கடுமையாகப்பாடுபட்டனர். ஆனால் அவர் தமது நிலைப்பாடடில் உறுதியாவேயிருந்தார், நிலையத்தளர்த்திக் கொள்ளவில்லை. தான் படித்த பாடத்தை அவர் என்றுமே மறக்கவில்லை ஆனால் உ. ஓ. ம / இ/ கு, பொலன்னறுவை மாவட்டத்தில் மேற்கொண்டிருந்த பிரச்சாரப்பணிகளுக்கும், ஆக்கவேலைகளுக்குமாகத் தமது ஆதரவை தொடர்ந்து வழங்கியே வந்தார். 1992ம் ஆண்டு முதல் அவரின் பெயர், உ. ஓ. ம /இ/குவின் உயர்ந்த எட்டு அம்சமார்க்கம் என்ற பிரசுரத்தில் முதலாவதாக இடம்பெற்றிருக்கிறது. அது 1994ல் சமாதான ஆக்கமும் அரசியலமைப்புச் சீர்த்திருத்தமும் என்றதோர் நினைவுக்குறிப்பாக அமைந்திருந்தது. பின்னர் 1996ம் ஆண்டில், பண்டாரநாயக்க நினைவுச் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (பி. எம். ஐ. சி. எச்) இடம்பெற்ற மாபெரும் பிக்குமார் கூட்டமொன்றில் அவரது பகுதியின் சிரேஷ்டபிக்குவாகக் கலந்துகொண்டு தெற்கின் ஒரு சிரேஷ்ட பிக்குவான அதிகரண சங்க நாயக்கர் சங் அத்துரலிய இந்திரரத்ன தேரர் அரசாங்கத்தின் அதிகாரப்பகிர்வு யோசனையை ஆதரித்து முன்மொழிந்த பிரேரணையை. வழிமொழிந்தார். இம்மாபெரும் கூட்டம், அந்த யோசனைகளுக்கெதிராக ஆதரவு திரட்டும் விதத்தில், சிங்கத் தீவிரவாதிகளால் அதே இடத்தில் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த மற்றொரு மாபெருக்கூட்டத்திற்கு எதிரானதாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். எவ்வாறாயினும், ஆதரித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் பங்குபற்றியோரின் எண்ணிக்கை, எதிர்ப்புக் கூட்டத்தில் பங்குபற்றியோரின் எண்ணிக்கையை விட சுமார் இரண்டு மடங்கு அதிகமாகும். எனவே, மக்கள் தொலைவில் கணிசமான ஒரு பிரிவினர் ஐம்பது ஆண்டுகாலப் பகுதிமுதல் தொண்ணூறாம் ஆண்டுகாலப்பகுதிவரை ஏற்படுத்திய

பாதிப்பில், உண்மையில் புரட்சிகரமான ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்தது எனக்கொள்ளப்படாவிடினும், இதனை ஒரு திருப்பம் எனக் கூறலாம்.

அடுத்ததாக, இந்த நிலைமாற்றம் தொடர்பாகச் சமீபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றைக் குறிப்பிடலாம். அதிகாரப்பகிர்வு தொடர்பாகப் பொருத்தமானதோர் இணக்கத்தை எய்தும் முயற்சியாக அரசாங்கத்திற்கும் யு. என். பிக்கும்மிடையே சொற்பகாலமாகவே பேச்சுக்கள் நடந்துவந்திருக்கின்றன. நடைமுறையை எளிதாக்கி சமரஸம் செய்து வைப்பதானதோர் பாகந்தாங்க, நோர்வே அரசாங்கமும் முன்வந்துள்ளது. சிங்கள தீவிரவாதிகள் ஏப்ரலில், 6, 2000 அன்று நோர்வே தூதரகத்துக் முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். பிபிசியின் சந்தேச நிருபர் எரிக் பெர்ணாந்து, இவ் வார்ப்பாட்டத்தின்போது தாக்கப்பட்டார், நோர்வே கொடி எரிக்கப்பட்டது. எரிந்த கொடியை ஒரு பிக்கு ஆட்டி அசைப்பதை அடுத்த நாள் பத்திரிக்கைகள் முன்பக்கப்படமாகப் பிரசுரித்திருந்தன. சிங்கள தீவிரவாதிகளின் போராளிப்பிரிவான பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கமே (என். எம். ஏரி) அந்த வன்செயல்களுக்குப் பொறுப்பாகும். அதற்குச் சொற்ப நேரத்திற்கு முன்னதாக, அவர்கள் கொழும்பிலுள்ள பொதுநூலகக் கேட்போர் கூடத்துக்குள் திடீர்பிரவேசஞ் செய்து, .சமாதான அமைப்புக்கள் நடத்திகொண்டிருந்த கூட்டமொன்றையும் குழப்பினர். எனவே இதன் மூலம் பயங்கரவாதத்திற்கெதிரானதாக் காட்சியளிக்கும் என் . எம். ஏரியின் தாங்குகள் பயங்கரவாதத்தந்திரோபாயங்களில் ஈடுபடுவதில் விருப்பமற்றோர் அல்லர் என்பதை தெளிவாகவே காட்டியுள்ளனர்.

நோர்வே தூதரகத்துக்கு முன்னால் ஆர்பாட்டம் நடந்த மறுநாள், தேசிய ஒற்றுமைக்கான மதங்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த வலுமிக்க பிக்குகள் தூதுகோஷ்டியொன்று நோர்வே தூதரத்துக்குச் சென்று, மத்தியஸ்த முயற்சிகளுக்காக நோர்வே அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தும் அத்தகைய முயற்சிகளை தொடருமாறு வேண்டியும் ஒரு கடிதத்தை தூதரிடம் கையளித்தது. சங். தலல்ஆல தம்மதலேக அனுநாயக்கதேரர் பௌத்த பல்கலைக்கழகத்தின் பாளிபீட பேராசிரியர் கம்புறுகடவே வஜீரஞானதேரர் ஆகியோரின் தலைமையில் சென்ற இத்தூதுக்கோஷ்டியில் சங். வட்டிணப்பஹ சோமாநந்ததேரர், அத்துறாலிய இந்திரத்ன தேரர், சங். எகடஉயனஞானவிமலதேரர், சங். களுபஹான பியரத்தன தேரர், சங் கப்புகொல்லாவே இந்திரவிமலதேரர் சங். கோம்பிற்றிய ஸ்ரீ சுசில தேரர், சங். தொடம்பஹல ராஹுல தேரர் சங். புவக்பிட்டிய மெத்தனத்ததோர் ஆகியோர் இடம் பெற்றிருந்திருந்தனர். இது வெறும் கட்சி அரசியல் பிரச்சினைகள் மட்டுமன்றி மதிப்புமிக்க கிரேஷ்ட பிக்குகளை உள்ளடக்கியோர் போற்றுதலுக்குரிய தூதுக்கோஷ்டியாகும். இந்த அமைப்பில் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதப்பெரியார்களும் இடம்பெற்றிருப்பதும் கோடிகாட்டப்படவேண்டியதொன்றாகும். சமயங்களுக்கிடையே முற்போக்கான செயல்பாடுகளுக்கு குரல் கொடுத்து நன்கறியப்பட்டவர்களான சங். கலாநிதி பொல்லன்வில விமலரத்ன தேரர், சங். முறுத்தடடுவேகம ஆனந்ததேரர், சங். மடுலுவாவே சோமித்த தேரர் ஆகியோரும் நெருக்கடியான இக்கட்டத்தில் நியாயமானதோர் திர்வுக்குத் சமாதான யோசனைகளை நிச்சயம் ஆதரிப்போர் என நம்புவோமாக.

மக்களின் எழுச்சிகளை வழிநடத்திச் சென்ற இரு பிரபலமான மக்கள் தலைவர்களான தம்புல்ல ரங்கிரி ரஜமஹாவிஹாரையின் அதிபதி சங். இனமளுவே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரர், எப்பாவல, கல்கந்த புராண விஹாரையின் அதிபதி சங். மஹாமன்கடவல பியரத்ன நாயக தேரர் ஆகியோர் பற்றி விசேடமாகக் குறிப்பிடப்படவேண்டும். சங். சுமங்கல தேரோவின் போராட்டம், வேளாண்மக்களின் நிலத்தையும் சுற்றாடலையும், பல்நாட்டுக் கும்பல்களிடமிருந்தும் அவர்களின் ஹோட்டல் திட்டங்களிலிருந்தும் காப்பாற்றும் நோக்கங்கொண்டதாக இருந்தது; அவர் கந்தலமயில் தோற்றுவிட்டதாகச் சொல்லப்படலாம்; ஆனால் கந்தலம சத்யாக்கிரகம், அப்பகுதியில்

மேற்கொள்ளப்படவிருந்த சுமார் வேறு ஆறு ஹோட்டல் திட்டங்களை அச்சுறுத்தி ஓட்டிவிட்டது. சங். சுமங்கல உ. ஒ. ம/இ. குவின் இணைக்காப்பாளர் சங். மஹாகல்கடுவ புண்யசார தேரோவோடு சேர்ந்து, 2 ஆண்டுகளுக்குபின் பிக்குணிகளுக்கு ஒப்பசம்பதாவ (உயர்குருப் பட்டமளித்தல்) சடங்குகளை மீட்டமைத்தது மூலம் இரண்டு பிரதான பங்களிப்பினைச் செய்திருக்கிறார். முன்னர் குறிப்பிட்ட சமாதானவர்க்கம், அரசியல் சட்டச்சீரமைப்புத் தொடர்பாக 1994ம் ஆண்டின் உ. ஒ. ம / இ/குவின் வெளியீட்டில் அவரும் கையெழுத்திட்ட ஒருவர். சங். பியரத்ன தேரோ, இலங்கையின் விவசாய இதயப்பகுதியான ரஜரட்டயினை பாதுகாப்பதாகப் பொருள்படும் பொஸ்பேற்றுப்படிவங்களை பலம் பொருந்திய பல்நாட்டு ஆதிக்கவாளர்களிடமிருந்து காப்பாற்றுவதற்கான வீறார்ந்த மக்கள் போராட்டத்திற்குத் தலைமைதாங்கியவர், இப்பிரதேசத்தில் 14 புராதன கோயில்களும் உள்ளன. இலங்கையின் நீண்டகால வரலாற்றில், மக்களின் வாழ்க்கைக்கும், பாதுகாப்பிற்கும் உண்மையில் இதுவரை எதுவும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்துவந்தது. இப்போராட்டம், கோயிலிலிருந்து ஆரம்பித்து வீதிக்கும் நீதிமன்றத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டது என்பதும் மீ - உயர் நீதிமன்றம் அதற்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது என்பதும் குறிப்பிடத்தகக்கதாகும் போராட்டத்திலும் அதனுடன் தொடர்புடைய எழுச்சிச் செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதுபற்றி உ. ஒ. ம / இ/ கு பெருமை கொள்கிறது இலங்கையின் இன விவகாரத்தில், மக்கள் இயக்கமொன்றில் மாத்திரமே நீதியையும் சமாதானத்தையும் நிலைபெறச் செய்யமுடியுமென்பது, சங். பியரத்னவின் உறுதியான நிலைப்பாடாகும்.

இனப்பிரச்சினைக்கு நியாயமானதொரு தீர்வு கிடைப்பதில் தம்மை உறுதியாக ஈடுபடுத்திக் கொண்ட ஏனைய முன்னணி பிக்குகள் பலர் பற்றியும் இப்போது குறிப்பிடப்படவேண்டும். வெள்ளவத்தை சுவிசுத்தராமய விஹாராதிபதி ஞானபிவன்ச நாயக்க தேரர், திருகோணமலை அதிகரண சங்க நாயக தேரோ, சங். தெல்துவே தம்மாரத்தன, காங்கேசன்துறை திஸ்ஸ விஹாராதிபதி சங். தெல்கல்ல பதுமசிரி நாயக்க தேரோ, குருனாகலை எத்கந்த விஹாரையின் அதிபதி சங். கல்லஞ்சியே சந்தானந்த சங்க நாயகதேரோ, வவுனியா போதி நக்ஷினுாராமய விஹாராதிபதி சங். சியம்பலகஸ்வை விமலசார சங்கநாயக தேரோ, மாத்தளை பௌத்தசேவா மத்தியஸ்தானத்தின் நாயக்க தேரர் சங். ஆம்பிற்றியே தம்மகீர்த்தி, கொழும்பு கிராண்ட்பாஸ் இஸிபத்தானராமய விஹாராதிபதி சங். மாதம்பகம அஸசங்க நாயக்க தேரர்களனி அமரசேகராராமய விஹாராதிபதி சங். கலாநிதி பல்லேகந்த ரத்னசார நயபக்க தேரர், களுத்துறை வாளுக்காராமயவின் சங். தொடம்பஹல சிரிசுகுண தேரர், கங்கொடவில சுபத்ராமய விஹாராதிபதி சங். பல்லேவல தேவரக்கித நாயக்கதேரர், பட்டபொல சுபத்ராராமய விஹாராதிதபி சங். பட்டபொல நந்தநாயக தேதேரர், பத்தேகம துட்டுகெதினு விஹாரையைச் சேர்ந்தவரும் பிரதேச சபை உறுப்பினருமான சங். பத்தேகம சமித தேரர் ஆகியோரும் உ. ஒ. ம / இ. குவின் செயற்பாடுகளில் பங்குபற்றி, மேற்குறிப்பிட்ட உ. ஒ. ம / இ. குவின் ஆவணங்களில் கைச்சாத்திட்டடுள்ளனர். அவர்களில் கடைசியாக குறிப்பிடப்பட்ட மூவரும் 1990ம் ஆண்டு தாய்லாந்தில் நடைபெற்ற முதலாவது கருத்தரங்கில் உலக ஒத்துழைப்பு மன்றத்தின் தாபக உறுப்பினர்களாகப் பங்குபற்றினர் இறுதியாக குறிப்பிடத்தக்கதாகவும் , தெட்டத்தெளிவாகவும் ஈடுபாடு கொண்டோரும் தற்போது சிரேஷ்ட பிக்குகளாக இருப்போருமான நால்வரின் பெயர்கள் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியவை. உலக ஒத்துழைப்பு மன்றம் உருவாக்கப்பட்டதில் கடந்த 10 ஆண்டுகளின்போது, நாட்டின் பல பகுதிகளில் உ. ஒ. ம / இ. குவுடன் இணைந்து உறுதியாகவும் ஒழுங்கு நிறையாகவும் நீதி, சமாதான நோக்கங்களுக்காகவும் கடுமையாக உழைத்து வந்திருக்கின்றனர். இவர்கள் கொக்ஹெல்ல ரஜச்செந்தியா ராம விஹாராதிபதியும் ஹிரியால பௌத்த பல மண்டலயாவின் தலைவரும், உ. ஒ. ம /இ. குவின் இணைக்காப்பாளருமான சங். மஹகல்கடுவெல

புண்ணியசாரதேரோ, ஹிரிபட்டிய ஸ்ரீ தர்மசந்திரபிரிவெனவின் பரிவேனாதிபதியும் உ. ஓ. ம / இ. குவின் கூட்டு இணைப்பாளருமான சங். மொறகொல்லாகம ரத்தனசார தேரர் புத்தளம் மாவட்ட கறுவலகஸ்வெவ விஜேராஜ விஹாரையைச் சேர்ந்தவரும் உ. ஓ. ம / இ. குவின் செயற் குழு உறுப்பினரும், மொல்காவ, கலஹிற்றிய, மஹமெயுன விஹாரையைச் சேர்ந்தவரும், உ. ஓ. ம / இ;. குவின் செயற்குழு உறுப்பினருமான சங். கீரன்திடிய பஞ்ஞாசேகர தேரர் ஆகியோராவர். சங். புண்யசாரதேரோவும் சங். ரத்னசார தேரோவும் விசேடமாக நினைப்புடன் பணியாற்றியவர்கள் அவர்கள் வெளிநாட்டில் உ. ஓ. ம / இ. கு வைப் பிரதி நிதித்துவப்படுத்திருப்பதோடு, கட்டுரைகள், பேட்டிகள் என்பனவற்றையும் பிரசுரித்துள்ளனர்.

ஏனைய மதங்களைச் சேர்ந்த தலைவர்கள், தொழிற் சங்கங்கள், வேளாண் அமைப்புக்கள், சமாதான அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புகள், மாதர் குழுக்கள், நாடகக்குழுக்கள், புத்திஜீவிகள், அருங்கலைஞர்கள், நூலாசிரியர்கள், தொழில் வல்லுனர்கள் போன்றோரும் இலங்கையில் இன்று சமாதான இயக்கத்தினதும் பங்காளராக உள்ளனர். கவர்ச்சிகரமான நிலையில் அவர்கள் பேரணிகளிலும், ஆர்ப்பாட்டங்களிலும், ஊர்வலங்களிலும் பல தடவைகள் பங்குபற்றியுள்ளனர். எனினும் சமாதானத்தின் மீதான பௌத்தர்களின் ஈடுபாட்டு வலுவும், ஆழமும் பொதுவாக தெளிவாகத் தெரியவில்லை எனவே தான் சில திட்டவட்டமான உருவரைகள் சொற்ப விவரங்களுடன் தரபட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில் தளராத வீதத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த தீர்க்கமான சமாதானப்பணிகளுக்கு விளம்பரத்தர, ஊடகத்துறை பொதுவாக அக்கறை காட்டுவதில்லை ஆனால். எழுச்சிகள், அழுத்தங்கள், தாக்கங்களின் போது தங்களின் கெட்ட நோக்கங்களை அடைவதற்காக மக்களின் உணர்ச்சிகளை தட்டியெழுப்புவதற்கும், தூண்டுவதற்கும் திசைதிருப்பி நெறிப்படுத்துவதற்கும் தீவிரவாதிகளுக்கு வாய்ப்பாக விகித சமசீரற்ற முறையில் வலியுறுத்தும் கைங்கரியத்தில் அவை ஈடுபடுகின்றன. எனவேதான், யுத்தம் தொடர்கிறது. இதனால் மக்களே துன்பமடைகின்றனர். ஆனால் அவர்கள், பெரிய இழப்புக்களின் மத்தியில் பல பாடங்களைக் கற்றுள்ளனர். அவர்களை மீண்டும் மீண்டும் ஏய்க்கவோ தவறான வழியில் இட்டுச் செல்லவோ முடியாது சமய ஏற்புடைய, சமய சார்பற்றதான இரு கற்பனா தலைமைக்கும் திட்டவட்டமாகத்தலைசாய்க்க அவர்கள் தயாராகவேயுள்ளனர் உண்மையில் அவசியமேற்படின் அவர்கள் தங்களின் சொந்த நிலைமையையே உருவக்கிவிடுவர். முற்போக்கான சங்கவின் தலைமைத்துவம் எதிர்வரும் நாட்களில் தீர்க்கமானதாக அமையும். மக்கள் இய்கக விவகாரம், கீழே பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

## நடைமுறை விவரங்கள்

இப்போது வடக்கையும், கிழக்கையும் இணைப்பது அல்லது ஒன்று சேர்ப்பது பற்றிய பிரச்சினை முழுவதற்குமான நடைமுறைச் சாத்தியம் அல்லது யதார்த்தம் என்ற ரீதியில் இதனை நோக்குவோம்.

## உண்மைகளைப் பொய்யாக்குதல்

பொய்யான அல்லது தவறான தகவல் காரணமாகப் பலர் அதனை எதிர்க்கிறார்கள் என்பதை மேலே கண்டோம். எனவே, பிழையான தகவல் சிலவற்றை வெளிக்கொணர்வதுடன் அதனைத் தொடங்குவது நல்லது. இணைப்பை எதிர்ப்பவர்கள் ஏது, நிலப்பரப்பில் 75க்குக் கூடுதலானதையும், சதவிகித கரையோரப்பகுதியையும் மக்கள் தொகையில் 6 சதவிகிதமானோர்க்கு தாரைவார்த்து கொடுத்துவிடுவதாக அமையும் எனக் கூறுகிறார்கள். இலங்கைப் படத்தில் எல்ரிரிஈ கோரும்

ஈழம் பிரதேசமாக ஒருபகுதி நிழற்கறையிடப்பட்டதாகச் சிந்தித்து சில சமயம் மிகையான அளவில் ஆதரரமாகா காட்டப்படுகின்றது. தென் மக்களின் மனத்தில் பயங்கரவாதத்தை தோற்றுவிப்பதான திட்டமிடபட்ட செயற்பாடு இது. உண்மையில் அது மெய்நிகழ்வுகளை முற்றாகவே பொய்யாக்குவதாகும். வட கிழக்கு நிலபகுதி 28 சதவிகிதத்தையே , **33⅓%** அல்ல, கொண்டுள்ளது. அது பெரிதளவு வேறுபாடேயாகும். அத்தோடு அதிகமாக சிங்கவர்களை கொண்ட அம்பாறை மாவட்டத்தைப் பிரித்து, மற்றொரு மதத்தைச்சேர்ந்தோருக்குள்ள பகுதியுடன் இணைப்பது தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்திருக்கின்றன. அனேகமான தமிழ்கட்சிகள் இதற்கு சம்பந்தம் தெரிவித்துள்ளன; அது விகிதத்தினை சுமார் **26%** மாக்கும் நிலப்பரப்பில் சுமார் **3%** வனப்பாதுகாப்புகள் ஒதுக்கப்பட்டது. இது உண்மையில் மத்திய அரசாங்கத்தின் நிரலுக்குட்பட்டதாகும். ஆகவே அது **23%** ஆகிவிடுகிறது. எனவே, இணைப்பு தொடர்பான பேச்சுக்களை நடத்த முயல்வதற்கு அது ஒரு நியாயமான அளவு என எடுத்துக்கொள்ளப்படலாம்.

இவ்வேளையில் ஒரு விஷயத்தை நினைவுகூருவது பயனுள்ளதாகவிருக்கும் தமிழ் மக்கள் சமஷ்டியான தங்களின் கோரிக்கையை முன்வைத்தபோது அவர்களின் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிடத்தக்கதான அறிக்கையொன்றை வெளியிட்டார் (1.6.1960) பின்வருபவை 2ம் அதிலிருந்து பெறப்பட்ட மேற்கோள்களாகும்.

> ''சமஷ்டி அமைப்பின் கீழ்'' சமஷ்டிக்கட்சி எதிர்பார்ப்பது ஓர் ஐக்கிய இலங்கையாகும்; எனவே சமஷ்டிக்கட்சி, சிங்கள - தமிழ் பேசும் மக்களிடையே பூரண உறுதிப்பாட்டும் தோழமையும் ஐக்கியமும் ஏற்படுமென நம்புகிறது.''

> ''சமஷ்டிக்கட்சி கூறுவதன்னவென்றால், தங்களின் மரபார்ந்த தாயகத்திலிருந்து ஒரு நியாயமான பகுதி தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்பதுதான். இதிலும், இப்பகுதியின் முக்கிய தேவைகளாகவுள்ள கல்வி, சுகாதாரம், உள்ளுராட்சி, காணி அபிவிருத்தி நீர்ப்பாசனம் போன்றவற்றிற்காக மட்டுமே அது அவசியமாகிறது''

அதுவே, சமஷ்டிக்கட்சியின் திட்டமாகும். நோக்கு, ஓர் ஐக்கிய இலங்கையாகும். அது ஓர் உயர்ந்த நிலையான அரசியல் மேதகைப் பண்பாகும். ஆனால் சிங்களத் தலைமைத்துவத்தின் கீழ் இனவாத சக்திகளும், தேசிய செய்தித்துறையின் சில சக்திவாய்ந்த பிரிவுகளும் வர்த்தக நலன்காக்கும் சிலரும் தங்களின் சுயநலன்கள் பாதிக்கப்பட்டுவிடுமோ என அஞ்சி, அதனை பிரிப்பதற்கும் துண்டாடுவதற்குமானதொரு முயற்சி, எனத் தொடர்ந்து இடையுறாது வலியுறுத்தி வந்திருக்கின்றன. எனவே சமாதானத்தின்பால் முன்னேற்றமென்பதையும் எய்யமுடியவில்லை. சமஷ்டி என்ற சொல் சிங்கள மக்களிடையே ஒரு கெட்டவார்த்தையாக நோக்கப்படலாயிற்று. பின்னர், ஜே. ஆர். ஜயவர்த்தனவின் போர் அறைகூவலும் அவரது கும்பலின் செயற்பாடுகளும், சமஷ்டிக்கட்சி வளர உருவாக வழிவகுத்தன. தமிழ் இளைஞர்களின் அழுத்தத்தின் பேரில், 1976ம் ஆண்டின் ஈழத்தீர்மானம் இயற்றப்பட்டது. அதனை அவர்களின் சொந்த ஆதரவாளர்களின் சிலர், இன்னுமே அதனை அவர்களின் அறிவளர்ந்த பெரும்பிழை எனவே நோக்குகின்றனர். அதுமுதல் அதிகரித்துவரும் வன்செயலும், பின்னதான போரும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலைமையை இருதரப்புமே மென்மேலும் மோசமாக்கிக் கொண்டிருப்பது ஒரு வரலாறு. இப்போது கடைசியாக, அந்த நாட்களில் சமஷ்டிக்கட்சி கொண்டிருந்த இனிதான நியாயமான நோக்கம் நிறைவேறுவதற்கு நம்பிக்கையூட்டுவகையில் ஒரு கருத்தாளுமை ஏற்படுவதில் சில திட்டவட்டமான நிகழ்வுகள் இடம்பெற்றுவருவது நோக்கற்பாலது. எனவே, தெற்கிலுள்ளவர்கள், தங்களை நாடிவரும் நல்ல சந்தர்ப்பங்களை முன்னர் போன்று நழுவ விட்டுவிடாது, தற்போதுள்ள

சவால்களை முறியடிப்புக்கு ஏதுவாகத் திட்டவட்டமான கணிப்பீட்டினைச் செய்து இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஒரு இறைமையை முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எனினும் இதனையிட்டு மேற்கொண்டு பரிசீலிப்பதற்கு முன்னதாக, இன்னமும் இடம்பெற்றுவருவதான மேலே குறிப்பிட்டப்பட்ட பொய்யான தகவல்கள் சிலவற்றை அம்பலப்படுத்த வேண்டியுள்ளது. இணைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு ஆட்களுக்கு கரையோரப்பகுதியின் **75%** வழங்கப்படவுள்ளது என்பதாக குறிப்பிடப்படுவது முற்றாகவே பொய்யானது.

எடுத்த எடுப்பிலேயே 75 என்பது ஓர் உறுதியற்ற தொகை; தயாரிக்கப்பட்ட ஈழவரைபடங்களும் தவறாக இட்டுச் செல்பவையாக இருக்கின்றன. எப்படியிருப்பினும், கரையோரப்பகுதி அனைத்துமே, மத்திய அரசாங்கத்தின் பாவனைக்கென ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளதாகப் பதியப்பட்டிருக்கிறது. அடுத்து, வடக்கு கிழக்கு அங்கு வாழும் 6 விகிதமான தமிழர்களுக்கு வழங்கப்படவிருப்பதான கருத்தும் உண்மைக்கு மாறானது. அங்கு வாழும் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சமமான பிரஜா உரிமை இருக்கும், அவர்களின் உரிமைகள், கடமைப்பொறுப்புக்கள் தொடர்பான விவகாரங்கள் கீழே குறிப்பிடப்படும். தவறான விளக்கத்துடன் கூடிய மற்றொரு விவகாரம் தேச வழமைச் சட்டம் சம்பந்தமாகக் குறிப்பிடப்படுவதாகும். தமிழர்கள் நாட்டில் சுதந்திரமாக வாழமுடியுமென்றும் எங்கு விரும்பினும் காணிகளைக் கொண்டிருக்க முடியுமென்றும், ஆனால் சிங்களவர்களுக்கு வடக்கில் வாழவோ அல்லது காணிகளை கொண்டிருப்பதற்கோ முடியாது எனச் சொல்லப்படுகிறது. ஆனால் இது, மிகமட்டுப்படுத்தப்பட்ட ஓர் அளவிற்கே உண்மையானது. தமிழர்கள் அனேக எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து, அகதிகளாக வடக்கிலும், கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் வாழுகின்றனர். அவர்களில் அனேகர் அளப்பரிய கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். வடக்கில் சாதாரண மக்கள், கடுமையான யுத்த நிலைமையின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். கிழக்கில், நிலைமை, யுத்தத்திற்கும் சமாதானத்திற்குமிடைப்பட்டதொன்றாக உள்ளது. ஏன், தெற்கிலும் கூட, அனேகமான தமிழர்கள், அதிலும் குறிப்பாக இளைஞர்கள் பெருத்த பாதுகாப்பற்ற நிலைமையின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்; அத்தோடு அவர்களின் அனேகமானோர், சுற்றிவளைத்தல் தேடுதல் போன்ற பொலிஸ் நடவடிக்கைகளின்போது தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

சிங்கள மக்கள், வடக்கில் சுதந்திரமாக வாழ முடிந்தது 1984 பிற்பகுதிவரை கூட அவர்களில் அவ்வாறு தொடர்ந்து வாழ முடிந்துள்ளது. வடக்கில் அவர்கள் சொந்தத்தில் காணியைக் கொண்டிருக்க முடியாது என்பதாக தேச வழமைச் சட்டம்; பொதுவாகத் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இது அவ்வாறு அல்ல. தன்னளவில் பொருந்தும் சட்டமான அது, குடியியல் சட்டத்தில், மட்டுப்படுத்தப்பட்டதோர் அம்சமாகவே பொருந்துகிறது. அவ்வளவுதான் வடக்கில் சிங்கள மக்கள் வாழ்ந்துள்ளனர்; காணிகளைச் சொந்தமாகவும் வைத்திருந்துள்ளனர். ஆனால் காலப்போக்கில் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாத நிலையில் மோதலின் விளைவுகளும் அதிகரித்துக்கொண்டே போனது சிங்கள மக்கள் வடக்கில் இனியும் தொடர்ந்து வாழ முடியாத ஒரு நிலைமைக்கு இட்டுச் சென்றது.

அத்தனை பெரிய எண்ணிக்கையில் மக்களைக் குழப்பிய பிழையான கூற்றுக்களை அலசி ஆராய்ந்தபின்னர், வடக்கையும் கிழக்கையும் இணைப்பதான அல்லது ஒன்று சேர்ப்பதான முழு விவகாரத்திலும் பணயமாகவுள்ள பிரதான பிரச்சினைகளை ஆராய்வதில் இறங்குவது இப்போது சாத்தியமாகவிருக்கும்.

இரு தரப்பிலுமம ஒருசிலர் கடினமான நிலைப்பாடுகளை கொண்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இருதரப்பும், ஒன்று மற்றதன் நியாயமான தேவைகளையும் விளங்கிக்கொள்ளத்தக்க அச்சங்களையும் மதித்து, ஆக்கபூர்வமான ஒரு மாற்று வழியை அடைவதற்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் முயலவேண்டும். தமிழர்களுக்கே தங்களின் அபிவிருத்தியை எட்டுவதற்கு நியாயமானதொரு சுய அதிகார முறைமை தேவைப்படுகிறது. சிங்கள மக்களுக்கு நாட்டின் ஒருமைப்பாட்டையும் தங்களின் சொந்த உரிமைகளையும் பாதுகாப்பது அவசியமாகிறது. தமிழர்கள், சுயகௌரவத்துடன் தனியாக வாழ்வதற்கு ஏற்ற ஒரு சூழலை ஏற்படுத்துவதற்காகவே வேண்டியுள்ளனர் எனச் சொல்லப்படுகிறது. வரலாற்றை தலைகீழாக புரட்டிவிட முடியாது. மறுபுறத்தில் பிரிவினை இடம்பெற்றுள்ள இந்தியா பற்றிய விவகாரம், ஒரு சிறிய நாடான இலங்கைக்கு மிகவும் வேறுபட்டது, என்பதைத் தமிழர்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். இலங்கையைக் கூறுபோடுவதற்கு சிங்கள மக்கள் இணங்குவர் எனத் தமிழர்கள் எதிர்பார்க்கக்கூடாது இந்திய உப - கண்டத்தின் பூவியல் - அரசியல் யதார்த்தங்களும் இதற்குத் தடையாகவிருக்கும் மேலும் இத்தகையதொரு சிறிய நாட்டைப் பிரிப்பதால், தமிழர்களுக்கோ அல்லது சிங்களவர்களுக்கோ லாபம் ஏதும்கிட்டாது; மாறாக ஒன்றுபட்டமிருப்பதே மிகவும் சாதகமாகவிருக்கும்.

அடுத்ததாக, அதிகாரப்பரவலாக்கல், கூறுபோடுவதற்கோ அல்லது பிரிவினைக்கோ வழிகோலிவிடும் எனத் தெற்கின் மக்கள் கொண்டுள்ள பயங்கள், சரியான தகவு நோக்கில் அணுகப்படவேண்டும். அத்தகைய பயங்கள் தற்போது ஐக்கியம் உள்ளது என்பதாக ஊகித்துகொள்ள வைக்கின்றன. ஆனால் யுத்தம் காரணமாக, மிகவும் கூடுதலான ஓர் அளவில் பிரிவு என்பது மெய்நடப்பில் இருக்கவே செய்கிறது. பரஸ்பரம் நம்பிக்கை உணர்வோடு ஒரு நியாயமான அதிகாரப் பகிர்வினால் மட்டுமே சமாதானத்தையும் ஐக்கியத்தையும் மீண்டும் ஏற்படுத்த முடியும்; வேறுவழியேதும் இல்லை இந்நிலையே, எதிர்நோக்கப்படவேண்டியுள்ள யதார்த்தமாகும்.

## நம்பிக்கை

இங்கு நம்பிக்கை அல்லது அதன் உருவாக்கம் இல்லது அதனை கட்டியெழுப்புவது என்பது நிலையானதாகும். எங்கு நம்பிக்கை உள்ளதோ அங்கு பல காரியங்கள் கைகூடி கூடிவிடுகின்றன; எங்கு நம்பிக்கை இல்லையோ அங்கு மிகக் குறைந்த அளவில் அல்லது இதற்காகவே அதற்குச் சாத்தியமிருக்காது. அனேகர் படிப்பறிவுள்ள வகுப்பினர் பிரிவை சேர்ந்தோர் எனக் கொள்ளப்படினுங்கூட அதனை வெளிப்படையாகக் காட்டிக் கொள்வது, வடக்கு கிழக்கு ஒன்றுபடுத்தினால் அல்லது இணைத்தால், அது தவிர்க்க முடியாதப்படி பிரிவினைக்கே இட்டுச் சென்றுவிடும். என்பதாகவே பொருள்படலாம். ஆனால் அத்தகைய பயம், சம்பந்தப்பட்ட இருதரப்பினர்க்குமிடையே தற்போது நிகழும் அவநம்பிக்கையின்பாற்பட்டதாகும். ஆனால் முற்றும் புதியதானவோர் சூழ்நிலையில் உண்மையான தேவைகளை மதித்து அவைகளை பரஸ்பர அடிப்படையில் அங்கீகரித்தும் உரிமைகளை வழங்கியும் செயற்பட்டால் முன்னர் அசாத்தியம் எனக் கருதப்பட்ட பல விஷயங்கள் மாறிய சூழ்நிலையில், சாத்தியமாகிவிடும். உண்மையில், அத்தகைய நம்பிக்கையொன்று உருவாக்கப்படாதவரை, சமாதானம் என்பது முற்றிலும் சாத்தியப்படவே மாட்டாது.

## தொகுப்புக் கோட்பாடுகளும் நடைமுறைச் செயலாக்கமும்.

முன்னர் குறிப்பிட்ட திம்புக்கோட்பாடுகளை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் போது, "தமிழர்களின் தாயகம் அல்லது ஈழம்", "சுயநிர்ணயம்" என்பவை தொடர்பாக, இங்கு ஒரு வார்த்தை சொல்லிவைக்கப்பட வேண்டும். இது முன்னர் குறிப்பிட்டதுபோல் சில

சமயங்களில், ஓர் குறிப்பாக விவாதிக்கப்படுவதுடன் மிகைப்படுத்தப்பட்ட புள்ளி விவரங்களாகவும் தரப்படுகின்றன; இதனால் அனாவசியமான சர்ச்சைகள் தோன்றுகின்றன. தங்களின் எதிர்காலத்தைத் தாங்களாகவே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை தமிழர்களுக்கு இருக்கவேண்டுமென்பதில் எவ்வித ஐயப்பாடும் இருக்கமுடியாது; ஆனால், சிங்களவர்கள், தமிழர்கள் ஆகிய இருதரப்பினரோடும் சம்பந்தப்பட்ட விவகாரங்களுடன் அதிலும் நிலம் பற்றிய தொடர்பு படுத்தப்படும் போது அத்தகையவற்றை இரு தரப்பும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்மானிப்பது நியாயமானதாகவிருக்கும். இலங்கையின் வரலாறு ஒரு முழுமையான பின்னணியில் நோக்கப்படும்போது சரித்திரத்தின் சில காலப்பகுதிகளில் நிலைமை எவ்வாறு இருந்திருப்பினும், இலங்கை, அதில் வாழும் சகல மக்களுக்கும் சொந்தமானது என்பதைச் சகலரும் ஏற்றுக்கொள்வார்கள். முன்னர் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம், தமிழர்களுக்கு தேவைப்படுவது தங்களை முன்னேற்றிக் கொள்ள அவர்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளைத் தொடர்புபடுத்தியதாய் ஒரு சாத்தியமான, அதிகாரப் பரவலாக்களுடன் கூடிய ஓர் அலகேயாகும். இதற்கு ஒரு நியாயமான அளவு நிலப்பரப்பு தேவைப்படும் இதனைச் சக வாழ்வு, பின்னிய சார்பு அமைப்புக்குட்பட்டதாக, சிங்கள மக்களுடன் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். எனவே, "மரபார்ந்த தாயகம்" அல்லது "ஈழம்" அல்லது "சுயநிர்ணயம்" என்பவை தொடர்பாக பிரச்சினை எதுவும் இருக்க வேண்டியதில்லை. அதேசமயம், தமிழர்களை ஒரு இனமாக அங்கீகரிப்பதில் கஷ்டமெதுவும் இருக்க முடியாது. தங்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கும், தங்களின் விருபத்திற்கேற்ப அதனை அபிவிருத்தி செய்வதற்குமான அவர்களின் நோக்கம் விளங்கிக் கொள்ளப்படவேண்டியதொன்றாகும். இலங்கையின் ஐக்கியத்திற்கும் அல்லது இலங்கை தேசத்தை முழுமையாகப்பாதுகாப்பதற்கும் இது ஒரு தடையாக இருக்க வேண்டியதில்லை.

## ஆக்கபூர்வமான மாற்று

எனவே, சக - வாழ்வு, பின்னிச்சார்ந்திருக்கும் முறைமை என்பவற்றோடு, நியாயமான, திருப்திகரமான அதிகாரப்பங்கீட்டுத் தன்னாதிக்க அடிப்படையில் தீர்வு காண்பதே அவசியமாக உள்ளது. பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்ததான, ஆக்கபூர்வமான ஒரு மாற்று. ஒரு புதிய தகவு நோக்கு, ஒரு புதிய அணுகுமுறை என்பனவற்றில் முட்டுக்கட்டையை அகற்ற முடியும். வடக்கு - கிழக்கில் அதிகாரப்பகிர்வு அலகொன்று, வடக்கு - கிழக்கினதாக அல்லாமல் (அதாவது வடக்கு - கிழக்கு முழுவதுமல்லாமல்) அதன் அளவு, எல்லைகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள். முன்னேற்றத்திற்கு வழிகாட்ட முடியும். சுமார் 23% உள்ளடக்கியதான ஓர் அதிகாரப்பகிர்வு அலகு தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்துவதற்குள்ள சாத்தியம் மேலே உணர்த்தப்பட்டுள்ளது.

தமிழர்கள் பெரும்பான்மையினராக இருக்கப்போகும் வடக்கு கிழக்கிற்கான அதிகாரப்பகிர்வு அலகொன்றில், சிறுபான்மையினராக இருக்கப்போகும் சிங்கள முஸ்லிம் சமூகங்களின் உரிமைகளுக்கு வகைசெய்யப்பட்டிருக்க வேண்டும். அதிகாரப்பரவலை உள்ளடக்கும் விதத்திலான வலயச்சபைகள், சிறுபான்மையினர், தங்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும், அவர்களின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கும் வகைசெய்யவும் இந்த அலகில், சிறுபான்மையினர் ஒடுக்கப்பட்டிருப்பார்கள் என்றும், குழு அரசியலாக இது தொடரும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மையினர் என்றவகையில் தெற்கில், தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் அவர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டிருக்க வேண்டும். அதேமாதிரி அங்கு சிங்களவர்கள், முஸ்லிம்களின் உரிமைகளுக்கும் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்க வேண்டும். சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வினைச் சாத்தியப்படுத்தும் வகையில், பரஸ்பர நம்பிக்கை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை என்பவற்றை

வளர்க்கவும் இடமளிக்கபட்டிருக்கவேண்டும். இதற்கு பிரதேசசபைகளுக்கு உட்பட்டதான வலயச்சபைகளுக்கு திட்டவட்டமான உரிமைகளும் பொறுப்புக்களும் வழங்கப்படுவது இதற்கு வகைசெய்யும்.

தற்போதுள்ள மாகாண எல்லைகள், பிரித்தானியர் விருப்பப்படி வருக்கப்பட்டவையாகும்; எனவே அவை காலத்திற்கொவ்வாதவை, இன விவகாரத்தையும் கருத்திற்கொண்டு, மேலும் நியாயமான சமபங்கீடு, கரையோரபகுதி, நீர் மற்றும் வளங்களை யதார்த்தமானதாகப் பங்கீட்டுக் கொள்வதனால் வகை செய்யும் ஒருமுறைமையின் கீழ், எல்லைகள் புதியப்படி விருப்படியான விதத்தில் வரையறுத்துக்கொள்ளுவதற்கு இதுவொரு வாய்ப்பாக அமையும். அலகுகளின் ஒப்பேறு வாய்ப்புக்கள் மேலும் அதிக அளவில் உறுதி செய்யப்படுத்தவதற்கு ஏதுவாக, அலகுகளின் எண்ணிக்கையை ஒன்பதில்லிருந்து ஐந்தாக குறைக்க முடியும். தமிழர்கள் பெருந்தொகையாகயிருக்கும் கிழக்கிலுள்ள சில பகுதிகள் மீள்வரையறை செய்யப்பட்டதான வடக்கு - கிழக்கு அலகில் சேர்த்துக் கொள்ளப்படலாம். சிங்கள மக்கள் பெருந்தொகையாக வாழும் பகுதிகள் (அம்பாறை) ஏனைய அலகுகளில் ஒன்றிலோ அல்லது கூடுதலானவற்றிலோ சேர்த்துக் கொள்ளமுடியும். எனவே, இலங்கை பின்வருமாறு 5 பிராந்தியங்களாகப் பிரிக்கப்படலாம்.

1. மேற்கு பிராந்தியம் - தற்போதுள்ளபடி, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கேகாலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமையும்.

2. மத்திய பிராந்தியம் - கண்டி, நுவரெலியா, மாத்தளை, குருனாகலை, அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களை உள்ளடங்கும்.

3. ஊவா பிராந்தியம் - ரத்னபுரி, பதுளை, மொனராகலை மாவட்டங்களை கொண்டிருக்கும்.

4. தென்பிராந்தியம - காலி, மாத்தறை. ஹம்பாந்தோட்டை, மாவடடங்களை உள்ளடக்கும்

5 வட பிராந்தியம் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமையும்.

அம்பாறை மாவட்டம் (தநபோதைய கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியாக உள்ளது.) ஊவா அல்லது தென் பிராந்தியங்களில் ஏதாவதொன்றுடன் இணைக்கப்படலாம்.

## கருத்துக்கணிப்பு

வடக்கு கிழக்கில் இண்ணைந்தான ஓர் அலகே (அது முழுமையாக அல்லது ஒரு நியாயமான சமனான இணைக்கப்பாட்டுடன்) உண்மையின் பிரச்சினையின் திர்வுக்கான இன்றிமையாத அம்சம் பெருபான்மை ஜனநாயகத்தின் அடிப்படை பலவீனத்திற்க்கான விடை என்பது மிகத்தெளிவாகக்கிரகித்துக் கொள்ளபடவேண்டும். தமிழர்களுக்கு, அவர்கள் பெரும பான்மையினராக வாழும் பகுதியில், ஒரு நியாயமான அளவு நிலம் வெறுமனே வடக்கல்ல, ஆனால் ஒட்டியுள்ளதும் ஒப்பேறு வாய்ப்புடையதும் அதிகாரப்பங்கீடு செய்யப்பட்டதுமான ஒரு கூறு இருக்க வேண்டும். தெற்கிலுள்ள பிரதான கட்சிகளின் அரசியல் தலைவர்கள், இந்த அடிப்படைத் தேவையை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக உள்ளதாய்த் தெரிகிறது. 1987ல் இந்தியா அழுந்தக் கொடுத்தபோது, அது இங்கு வந்து அதனை இயற்றுவதை யு. என். பி அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆனால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதிலும்

வடக்கு கிழக்கை இணைப்பதிலும் அல்லது ஒன்று சேர்ப்பதிலும் அதிக முயற்சியும் ஈடுபாடுங்கொண்ட ஜே. ஆர். ஜயவர்த்தனவும், காமினி திஸாநாயக்கவும், பின்னர், காலப்போக்கில் கருத்துக்கணிப்பு நடத்தப்படும்போது தாங்கள் இணைப்பிற்கெதிராகச் செயற்படபோவதாய் பயங்கரமாகப் பிரகடனப்படுத்தியதன் மூலம் தங்களின் தடமற்றதன்மையை அல்லது கபடத்தன்மையை (அல்லது இரண்டையும்) வெளிக்காட்டி விட்டனர் இணைப்பு, முறையாக நிறைவேற்றப்படவில்லை என்பது மேலே தென்பட்டது. உண்மையில் பின்னர் ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சியின் போது, தமக்குமட்டுமே நேரடியாக பதில் சொல்லும் பொறுப்பை ஒப்படைத்து, நாடெங்கிலும் மாவட்டச் செயலாளர்களை நியமித்து,அதிகாரப் பரவலாக்கல் முறைமையை முற்றாகவே தலைகீழாக்கும் ஒரு முயற்சியாகவே இருந்துள்ளது.

இப்போது, நோர்வேயின் ஊக்குவிப்பு உதவியோடு புதிய முயற்சியாக அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கூட்டாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருப்பதுஅப்பிணைப்பின் நிறைறேற்றம் நிகழ்ச்சி நிரலில் மீண்டும் தலைகாட்ட இடமளித்துள்ளது. அனேகமாக இந்தியா, அமெரிக்கா ஊடான சர்வதேச அழுத்தம் இதற்குப் பங்களிப்புச் செய்திருக்ககூடும். எனினும், துரிதகதியில் மோசமடைந்துவரும் யுத்தநிலைமை இதற்குப் பெரிதொரு காரணமாகும், அரசாங்கமும் எதிர்கட்சியும் பேச்சுவார்த்தைகளுக்காக ஒன்று சேர்ந்திருப்பதும், பொதுவாக அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்கள், குறிப்பாக இணைப்பு விவகாரத்திலும் கண்டுள்ள பெரிதளவு - இணக்கப்பாடும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்ஈ, இது உண்மையில் வரவேற்கப்படவேண்டியதே ஒவ்வொரு தரப்பிலும் உள்ள சம்பந்தப்பட்ட கட்சிகள், குழுக்கள், அனைத்தும் இதனை உள்ளார்ந்த அக்கறையோடு அணுகி பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் என பெரிதும்நம்பப்படுகிறது. மரபு ரீதியான அல்லது பின்னர் அமைக்கப்பட்டுள்ளவையான ஊடகத்திற்கும் மாற்று ஊடகத்திற்கும் முக்கியமானதொரு பங்கை ஆய்வு வேண்டியிருக்கும். அனைத்திற்கும் மேலாக, இலங்கை மக்கள் அனைவரும் பேச்சுவார்த்தைகளின்ஊடாக மேலும் பூரண ஈடுபாட்டுடனும் மேலும் புத்தி சாதுரியமாகவும், பங்குகொள்ள வேண்டிய வேளையும் வந்துவிட்டது.

இறுதியில் மக்களே, தீர்க்கமான தீர்மானிக்கும் பாகத்தினைத் தாங்க வேண்டிமிருக்கும், அரசியல் சீரமைப்பு யோனைகள் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு விவாதங்கள் தொடரும் போது, பங்கேற்பின் அளவைப் பொறுத்து, போர்நிறுத்த மொன்றுக்கு ஏற்பாடு செய்யமுடியுமென நம்பப்படுகிறது. அது சமாதானத்திற்கான முதற் படியாயிருக்கும்.

தொடரும் பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு பங்களிப்பாகவே இந்த கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இங்கு ஒரு துக்ககரமான உண்மை அவதானிக்கப்பட வேண்டியதாகும். அதாவது மக்கள் ஐக்கிய முன்னணி, ஐ. தே. க. ஆகிய இருதரப்பும் கலந்துகொண்ட கூட்டுப் பேச்சுக்களில் ஐ. நா எஸ். எல். எப். பி இடது சாரச் சகாக்களைக் கொண்டிருந்தும் ஆனால் எந்தவொரு தமிழ் பிரதிநிதியும் இடம்பெறவில்லை என்பதே அது ஊடகத் துறையில் அதுபற்றி விமர்சிப்பது ஏற்றமானதாக இருந்திருக்கும் என எவருமே நினைக்காதிருந்தது அதை விடவும் வருந்தத்தக்கதான ஓர் உண்மையாகும். இனப்பிரச்சினை விவகாரத்தில் தங்களுடைய நிலைப்பாட்டோடு சேர்ந்து செல்வதற்கு எதிர்வாக எந்தவொரு தமிழ் உறுப்பினரையும் கொண்டிருக்கவில்லை என்ற உண்மையை வருந்தத்தக்க விதத்தில் அது வெளிக்காட்டுகிறது. இரண்டு பெரிய கட்சிகளுமே தமிழ்க்கட்சிகளுடன் ஆலோசனைகள் நடத்திமிருக்கின்றன என்பது உண்மையே எனினும், அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெற்ற சமயம் அவையிரண்டிலும் எதுவும், பரிசீலனையிலுள்ள யோசனைகள் குறித்துத் தமிழ்கட்சிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததோ என்பது சரியாகத் தெரியவில்லை பெரிய கட்சிகளின் நிலைப்பாட்டினனை ஆதரிப்பதற்கு ஏன் மிதவாதத் தமிழர்களையே கண்டுபிடிக்க

முடியவில்லையா என்பது கேள்வி . இந்த நிலைப்பாடுகள், தமிழ்மக்களின் நியாயமான அபிலாஷைகளைப்பூர்த்தி செய்யவில்லை என்பதாலா?

அப்படியயென்றால், தெற்கின் தலைவர்கள், வடக்கு கிழக்கை ஏதோ - வீதத்தில் இணைப்பது அல்லது ஒன்று சேர்ப்பததற்கான சூத்திரத்தைப் பரீசீலிக்கத் திரும்பிவரும்போது ஒரு கையால் மட்டும் கொடுத்து, மறுகையால் திருப்பி எடுத்துக் கொள்வது பயனற்றததுஎன்பதை உணர்ந்து கொள்ளவேண்டியிருக்கும் அவர்கள் எப்போது தான் பாடம் படிக்கப்போகின்றார்கள்? எவ்வளவு காலத்துக்குத்தான் இந்த ஏமாற்று வித்தை தொடர்வது? தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு - கிழக்கில், செயற்படுத்தப்படக்கூடிய சமாதானத்தில் தீர்வுக்குமென ஒட்டியுள்ளதும் ஒப்பேற்றக் கூடியதுமான அதிகாரப் பங்கீட்டுவொன்றினை உருவாக்குவது இன்றியமையாது என்பதை அறிந்துகொள்ள விழித்தெழுவதற்கு வேளை வந்துவிட்டது என்பதை அவர்கள் உணரவேண்டும். அது விருப்பப்படியானதொரு மாற்று அல்ல.

எனவே, கருத்துக்கணிப்பென்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதான தீர்வொன்றல்ல தேர்தல் நடைமுறை அனைத்தும் குறிப்பாக இன்றும், அல்லது இன்னும் அல்லது 5 ஆண்டுகளில் எந்த அளவுக்கு வலுவற்ற இயல்புடையதாகவும் வடுப்படுத்தக்கதாக உள்ளது அல்லது இருக்கக்கூடும் என்ற உணர்வோடு நோக்கும் போது, அதனை எது நியாயப்படுத்துகிறது அல்லது நியாயப்படுத்தக்கூடும் என்பதை ஒரு வாக்குக்கணிப்பு தேர்தல் என்பது தீர்மானிக்க முடியாது. நியாயப்படுத்தல் வரலாற்று ரீதியானது. குறைந்தது கடந்த 5 சகாப்தத்தின் வரலாற்றின் விளைவான நிலைமிலிருந்தே அதற்கான நியாயப்படுத்தல் எழுகிறது. மக்களின், இரத்தம் சிந்தல், உழைப்பு, தியாகம், கண்ணீர், வியர்வை என்பவற்றின் மூலமான போராட்டத்தின் விளைவே இந்த நியாயப்படுத்துதல் சுமார் 2 ஆண்டுகளுக்குமுன், யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடந்துமுடிந்தது, சரோஜினி யோகேஸ்வரன் மேயராக தெரிவு செய்யப்பட்டதை (அவரும், அவரைத் தொடாந்து வந்தவரும் பின்னர் கொலை செய்யப்பட்டனர்.) தொடர்ந்து, உயர்ந்த ஸ்தானத்திலுள்ள ஒரு அரச சார்பற்ற நிறுவன, தென்னகத்துப் பத்திரிக்கையொன்றில் தமக்குரிய விசேட பந்தியில் அதுவே , சமீபகாலத்தில் இடம்பெற்ற அதிசுயேச்சையானதும் மிகுந்த நேர்மையானதுமான தேர்தல், எனக்குறிப்பிட்டிருந்தார் அவரைவிட சற்றேகுறைந்த தரத்திலுள்ள ஒருவர் ஆனால் தரமிக்க மனித உரிமைகள் தொடர்புடைய ஒரு விமர்சகர், நிலைமையை அங்கு நேரடியாகவே கண்டு திரும்பிய பின் வெளியிட்ட ஒரு சிறிய, ஆனால் தரமான கணிப்பீட்டில், 1983ம் ஆண்டிற்குப்பின் தேர்தல் இடாப்புக்கள் திருத்தப்படவில்லையென்றும் எனவே 40 வயதிற்குக் குறைவான எவருமே வாக்களிக்கவில்லையென்றும் தெரிவித்திருந்தார். பின்னர். இகழார்ந்த வயம்பா மாகாணசபைத் தேர்தலில் நடந்ததென்ன என்பதும், அது அடுத்து நடந்த தேர்தல் எவ்வாறு குறிப்பிட்டதக்கதாகத் தீர்மானித்து என்பதும் அனைவரும் அறிந்ததே நீதிக்காக வானுயர்ந்த அளவுக்கு மக்கள் குரலின் மேலோங்கிச் செய்த வன்முறையும் ஊழலும் மலிந்திருந்தன தேர்தல் முடிவுக்கு எதிராக நீதிமன்றத்தீர்ப்பொன்றைப் பெறுவதற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது; ஆனால், நுட்பக்காரணங்களால் அது தோல்வி கண்டது. அதேசமயம் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டதால் மக்கள், அமைதி கொண்டனர்; உண்மையில், எதிர்ப்புக்கான எதுவுமே இருக்கவில்லை தேர்தல இறை அதைதுமே மீட்டெடுக்க முடியாததென்றொரு பிரயோசமற்றது என உதறித்தள்ளப்படவேண்டிய ஒன்றே என இது பொருள்படாது தேர்தல் முறை தளரச் சீரமைப்பற்கு மீள்பதற்கும் தொடர்ச்சியான முயற்சி இருப்பதோடு அது மேலும் அபிவிருத்தி செய்யப்படவும் வேண்டும். தீர்வுகளைத் தொண்டைக்குள் திணித்து திணறவைக்காது, தீர்மானங்களைச் சுயமாகவே மேற்கொள்வதற்கு மக்களுக்குள்ள ஜனநாயக உரிமை, கேள்விக்கு அப்பாற்பட்டது. ஆனால், சம்பந்தப்பட்ட பல்வேறு விவகாரங்களை

கருத்திற்கொள்ளும்போது, வடக்கு - கிழக்கின் இணைப்பைக் கருத்துக்கணிப்பின் மூலம் தீர்மானிப்பதற்குள்ள நியாயம், இதுகாறும் பலராலும் கருதப்பட்டதுபோல் இலகுவானதோ அன்றி வெளிப்படையானதோவல்ல

மக்களின் கருத்தை அறிவதற்கும் பிரகடனப்படுத்துவதற்கும் தேர்தல் முறை முக்கியமானதாக இருப்பது போல், இடைவிடாது பரிசீலிக்கப்படவேண்டிய ஏனைய முக்கியமான மாற்று நடைமுறைகளும் உண்டு என்பது நினைவிற் கொள்ளப்படவேண்டியதாகும். இவை பின்னதாக கீழே தரப்படும். இப்போதைக்கு அழுத்த உணர்வுகளையும் மனகிளர்ச்சிகளையும தேர்தலுகான உகந்த சூழலை உருவாக்குவதற்கும் (மக்களின் எண்ணத்திற்குள்ளும் இதயத்திற்குள்ளும் புகுந்து அவர்களின்) கண்டறிவதிலும் தெளிவாக உணர்ந்து கொள்வதிலும் உ. ஓ. ம.; இ. கு. சார்ந்த அனுபவங்களைக் குறிப்பிட்டாக வேண்டும். ஒரு நிலைமை அல்லது பிரச்சினை சார்ந்த உண்மைக்காரணிகளை மக்களுக்கு விளக்கவும், பொய்மைகளை அம்பலப்படுத்தவும், உ. ஓ. ம. இ. கு. நாட்டின் நாலா பக்கங்களுக்கும் சென்ற போது சந்தித்த சம்பவங்களையும், அவர்கள் எவ்வாறு அவை தொடர்பாக துரிதமாகவும் திட்டவட்டமாகவும் தங்களின் உணர்வுகளை வெளிக்காட்டினர் என்பதையும் மேலே விளக்கினோம். சட்டத் தரணியும், கோணேஸ்வரர் ஆலயத்தின் தர்மகர்த்தாவும் உ. ஓ. ம. இ. குவின் தற்போதைய திருக்கோணமலை கிளைத்தலைவருமான திரு. எஸ். கே. செல்வராஜாவின் உதாரணம் இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகும். உ. ஓ. ம. இ. கு 1991 பிற்பகுதியில் முதல்தடவையாக திருக்கோணமலைக்குச் சென்றபோது, திரு. செல்வராஜா, கிழக்கு தமிழர்கள், வடக்கு தமிழர்களோடு, எவ்வித தொடர்பையும் வைத்திருப்பதை மிகவும் எதிர்த்தார். அது அசாத்தியமானது என அவர் எண்ணினார். உரையாடல் தொடர்ந்தபோது, விவகாரங்களின் மற்றொரு புறத்தை அவர் கண்டார். காலஞ்சென்ற சங். மொறகல்ல விமலதம்மதிஸ்ஸ தேரோதான் உ. ஓ. ம. இ. குவின் முதலாவது திருகோணமலை தலைவர் எங்கள் அனைவருக்கும், அவர் ஈடுஇணையற்ற குருஆவார். அவர் எல். ரி. ரி. ஈ. உட்பட இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினராலும், கட்சிகளினாலும், மிகவும் ஆழமாகவும் கண்ணியத்துடனும் மதிக்கப்பட்டவர். அவர் எங்களை அப்பகுதியிலுள்ள சகல பன்சலைகள் (பௌத்தஆலயங்கள்) ஹிந்துக் கோவில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், அனைத்திற்கும், தலைமைதாங்கி இட்டுச்சென்றார். அதேசமயம் கருத்தரங்குகளும் பயிற்சிபட்டறைகளும்இடம் பெற்றிருந்தன. இவை அனைத்தையும், நாங்கள் அன்று எடுத்த நிழற்படங்களில், விலைமதிக்கமுடியத நினைவுகளாகப் பதிவுசெய்து வைத்திருக்கின்றோம். இடது சாரி இயக்கத்திலும் பரந்த முற்போக்குஇயக்கத்திலும் நீண்ட அனுபவம் பெற்றிருந்த சங். விமலதம்மதிஸ்ஸ தேரோவின் வழிகாட்டலில் நடந்த உரையாடல் தொடர்ந்தபோது நாம் ஒருவருக்கு மற்றவர் எந்த அளவுக்கு அவசியமாகின்றோம் என்பதை விளங்கிக்கொள்ளத் தொடங்கினோம். வடக்கு - கிழக்கு தமிழர்கள் தங்களின் கட்சிவேறுபாடுகளைக் கைவிட்டு தங்களின் பரஸ்பரபலத்திற்கும் முன்னேற்றத்திற்குமான ஒள்றுபட்டிருக்கவேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதை திரு.செல்வராஜா உணர்ந்தார். உருப்படியான ஒரு முறையை, கட்சிபேதங்களை களைவதற்கும் அதுவே வழியுமாகும்.

சிறுபான்மையினர் பற்றிய தமிழர்களும் முஸ்லிம்களும் பொதுவான விவகாரங்களில் வேறுபாடுகளை எவ்வாறு சமாளிப்பது என்பது தொடர்பாகத் தாங்களும் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி இதே மாதிரி முஸ்லிம்களும் உணரத் தொடங்கினர். அவர்களைப் பிணைந்திருந்து காரணிகள் அவர்களைப் பிரிந்திருந்தவற்றைவிட அதிகமுக்கியத்துவம் வாய்ந்தவை. அத்தகைய ஒற்றுமை இயல்பானது என்றும் அதனால் பயமுறுத்தல் எதுவும் இல்லை என்றும் சிங்கள மக்கள் நினைத்தனர். இனப்பிரச்சினையைத் தீர்க்க எது உதவும். அரசியல் என்ற உடலில் புரைத்துப் போன ஒரு புண்ணை ஆற்றமுடியுமாயின் அது, சம்பந்தப்பட்ட சகலருக்கும்

உதவும். விமலதம்ம திஸ்ஸ தேரோ, சிறுபான்மையினர் பற்றிய நியாயமான விவகாரத்தில், இம்மியளவு ஐயப்பாடு கூடக் கொண்டிருக்கவில்லை. அன்னார் திருகோணமலைக் கிளைக்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பை வழங்கினார். அவரின் தலைமைத்துவம் சுற்றிலும் பலமைல்கள் தொலைவிலும் அங்கீகாரம் பெற்றுப் பின்பற்றப்பட்டு வந்தது. உ. ஒ. ம/இ.கு; 1992 ஜனவரியில். தேசிய நிலைமை, அரசியலமைப்புச் சீர்த்திருத்தம், அதிகாரப் பங்கீடு என்பவை தொடர்பாக முதல் தடவையாக வெளியிட்ட "சமாதான வேண்டுகோளில்"அதனை ஆதரிக்குமுகமாக இடம்பெற்ற, விசேஷமாகத் தெரிவுசெய்யப்பட்ட205 கையொப்பங்களில் 20, திருகோணமலை மாவட்டத்திலிருந்து, திரு. எம், கே. செல்வராஜாவினது உட்பட) 9 பன்சலைகள், 1 கோவில், 1 பள்ளிவாசல், 3 தேவாலயங்கள், 6 பொதுமக்கள் என்போரிடமிருந்து இயற்றப்பட்டவையாக இடம் பெற்றிருந்தன.

## தீவிரவாத சிங்களக்கருத்துக்கள்

அதிகாரப் பங்கீடு தொடர்பாகத் தென்பகுதியிலிருந்து கிடைத்த முற்போக்கான ஆதரவு, மேலதிக சில விவரங்களுடன் குறிப்பிடப்பட்டன. தீவிரவாதச் சிங்களக் கருத்துக்கள் பற்றிய சில விவரங்கள் இப்போது குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. தீவிரவாத சிங்கள நிலைப்பாடுகளில் பல்வேறு அளவுகளில் கொண்டுள்ள பல அமைப்புகள், 1980களிலும் 1990களிலும் திடீரெனத் தோன்றின. முக்கியமானவற்றில் பின்வருவனவும் இடம்பெற்றிருந்தன.

சிங்கள ஆரக்ஷாக சங்விதானய. ஜனதாமித்துரோ. சிங்கள ஆணைக்குழு தேசப்பிரேமி பிக்குபெரமுன ஜாதிக சிங்கசபாவ வெற்றி ஜயகிரஹானய (சில கிறிஸ்தவ அமைப்புகளின் நெறிமுறை சாரா மதமாற்றத்திற்கு எதிரான ஒரு அமைப்பு) ஜாதிக ஏக்கபத்த சங்விதானய, சிங்கள மஹா சம்மத்த பூமி புத்ரக்கட்சி, பௌத்த அமைப்புகள் சம்மேளனம், பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கம், சிங்கள வீரவிதான, பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய முன்னனி சிங்கள உருமய என்பன.

பொதுக்கூட்டங்கள் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், மற்றும் அரசாங்கச் செயற்பாடுகளினாலோ அன்றி ஏனைய அமைப்புகளின் செயற்பாடுகளினாலோ சிங்கள பௌத்த நலன்கள் பாதிக்கப்படுவதாக அவை கருதும் வேளைகளிலெல்லாம் மன்றாட்டுமனுக்கள் அனுப்புதல் போன்ற பல்வேறு தரப்பட்டவையாக இந்த அமைப்புகளின் நடவடிக்கைகள் பல அமைந்திருந்தன. இவற்றில் சில சிங்கள பௌத்த பொருளாதார, வர்த்தக நலன்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்வதிலும், இத்துறைகளில் சிறுபான்மையினரின் நியாயமீனமான ஆற்றல் மேம்பாடு என அவைகளும் துறைகளில் எதிர்ச் செயற்பாட்டில் இறங்கும் முயற்சியில் ஈடுபடுவது என்பனவும் அடங்கும் வரலாற்றில் குடியேற்ற ஆதிக்கத்தினது குதியின்கீழும், சிறுபான்மையினர் நியாயமீனமான அது உலகங்கள் பெற வாய்ப்பளித்த அவர்களில் பிரித்தாளும் கொள்கையினாலும் சிங்கள பௌத்தர்கள் அனுபவித்த இன்னல்கள் பற்றி உணர்வது அவர்கள் மனங்களில் என்றுமே ஆழமாகப் பதிந்துள்ளது. அத்தகைய துன்பங்களும் நியாயமான செயற்பாடுகளும் இன்றுங்கூடத் தொடர்பாக அவற்றை வலியுறுத்தி வாதாடுகின்றன. அவை சொல்வதிலும் ஓரளவு உண்மை உண்டு ஆனாலும் சிங்கள பௌத்த அரசாங்கமொன்றின் ஆதிக்கத்தின் கீழ், மாற்றமடைந்துள்ள நிலைமைகளை அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை, அத்தோடு இன்றைய சமூகம் பற்றிய அவர்களின் பகுப்பாய்வு மிகவும் பலவீனமானதாகவும், ஒரு தரப்புச் சார்ந்ததாகவும் உள்ளன. அடிப்படையில் இந்த அமைப்புக்கள் இலங்கையில் பலமத, பல்லின, பன்மொழிச்சமூக அமைப்பொன்று உள்ளது என்ற யதார்த்தங்களை ஏற்றுக்கொள்ள தயங்குகின்றன. அவை, சமதர்மக்கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதில்லை சிங்கள பௌத்த காரணி, ஒவ்வொரு பிரிவிலும்

மேலோங்கியிருக்க வேண்டும் என்றும் சிறுபான்மையினர், அதிருப்தி வாழ்வோடு திருப்தியடைந்து கொள்வதுமேல் என்றும் அவை நம்புகின்றன.

அவை அரசாங்க சார்பற்ற அமைப்புகளுக்கு (என் ஜி. ஓக்கள்) எதிராக ஒரு குறிப்பிட்ட பகைமையைக் கொண்டுள்ளன. அவை இவ்வமைப்புக்களை முரண்பாடற்ற போக்கிரி அதாவது வெளிப்பணத்தின் மூலம் படிபெறும் ஊழியர்களாக இல்லாததொரு இனப்பிரச்சினைக்குத் தூபம் இடுபவர்கள் எனக் கருதுகின்றன. உ. ஒ. ம. / இ. கு. தொடர்பாக அனைத்துப் பிரச்சினை பற்றியும் விரிவாகவே வேறாக எழுதியுள்ளது. என். ஜி. ஓக்கள் அனைத்தும் ஒன்று குவித்து கண்ட கண்டபடி கண்டிக்கக்கூடாது. என். ஜி. ஓக்களில் நல்லவை கெட்டவை, ஏனோ தானோ என்ற போக்குடையவையாகப் பலவகை உண்டு அவற்றில் ஊழல் நிலவுவதான குற்றச்சாட்டுத் தொடர்பாக, சமூகத்தினை முழுமையாக எடுத்துக்கொண்டால், அரசாங்கம், சமய அமைப்புக்கள், உயர் தொழிற்றுறைகள், நிதிநிறுவனங்கள் போன்றவற்றில் ஊழல்கள் நிலவுவதை போல என். ஜி. ஓக்கள்களிலும் ஓரளவு ஊழல்கள் காணப்படுவதற்கு இடமுண்டு ஆனால் என். ஜி. ஓக்கள் சிவில் சமூகத்தில் ஒரு முக்கிய கூறாகவும், சமூகத்தின் ஆரோக்கிய செயல்பாட்டிற்கு அத்தியவசியமானதாகவும் விளங்குகின்றன. அத்தோடு என். ஜி. ஓக்களில் பொறுப்புமிக்க குடிமக்களும் பணியாற்றி வருகின்றனர். அவற்றில் அனைத்துவிதமான ஆய்வுகளும், தொலைநோக்கும் இடம்பெற்றிருப்பதும்கண்கூடு. அத்தோடு, இனமுரண்பாடு, சமூகத்தில் ஒரு பெரிய பிரச்சினையாக இருப்பதால் சில என். ஜி. ஓக்கள், மிக உயர்ந்த முன்னுரிமையாக சமாதான நாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. மேலும், சமூகத்தின் பல்வேறு நிலைகளில், வெளிநாட்டுச் செயற்பாடுகள் தொடர்புபட்டிருப்பதால் அவையும் இனப்பிரச்சினையில் அக்கறை கொண்டிருப்பது இயற்கையே எனவே சகல என். ஜி. ஓக்கள்களும் எல். ரி. ரி. சார்புடையவை என்று சொல்வதும் கேலிக்கிடமானதாகும். அவற்றில் பல்வேறு தரப்பட்ட விதத்தில் அமைந்திருப்பதால், அவற்றை இப்போது பொது விதி முறை நோக்கில் கையளிக்க முடியாது எனினும் சமாதான இயக்கத்தில் பெருமளவிலான, பொறுப்புக்களும் உருப்படியான செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை சமீபத்தில் நோர்வேயின் துறை ஊடகத்துடன் (இந்தியாவுடன் ஆலோசனை கலந்ததாக) கூடியதாக மார்ச் ஏப்பிரலில் யு. என். பி கட்சிகளுக்கிடையே சமாதான பேச்சுக்கள் இடம்பெற்றிருந்த போது, மேலே குறிப்பிட்ட சிங்கள பௌத்த அமைப்புக்கள் பல்வேறு விதமான எதிர்ப்புச் செயற்பாடுகளில் கூட்டங்கள் மன்றாட்டு முறையீடுகள், ஊர்வலங்கள், ஆர்பாட்டங்கள் போன்றவற்றில் ஈடுப்பட்டிருந்தன. அம்முயற்சி நாட்டின் ஒரு பகுதியை எல். ரி. ரி க்கு விற்றுவிடும் நோக்கம் கொண்டதென அவை சந்தேகித்தன அவை நோர்வேயின் மத்தியஸ்தத்தை அது உயர் நிலை எல். ரி. ரி. ஈ யினர்க்கு புகலிடம் அளித்தது என காரணங்கள் எதிர்த்தன. உண்மையில் இவ்வினமுரண்பாடு தொடர்பாக நோர்வேயில் என். ஜி. ஓக்கள் செயற்பட்டிருந்தது. அது இனப்பிரச்சனை தொடர்பாக எல். ரி. ரி. ஈ யின் பங்குபற்றலுடன் மகாநாடுகளையும் ஏற்பாடு செய்து நடத்தியிருக்கிறது.

குறிப்பாக, இவ்வமைப்புக்கள், ஓர் ஊர்வலத்தையும் எதிர்ப்புக் கூட்டத்தையும் நடத்தின. அங்கு அவை, ஏழு அம்சங்களை வலியுறுத்தி, அவை பேசித்தீர்க்க முடியாதவை எனவும் பிரகடனப்படுத்தின. முன்னணி அமைப்புக்களில் ஒன்றான ஜாதிக சங்க சபாவின் சார்பில் குரல் கொடுக்கவல்ல ஒருவர், இந்த ஏழு நிபந்தனைகளடங்கிய பிரதிகள், ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் கையளிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தபடி இந்த நிபந்தனைகள் வருமாறு:

1. தனிமுழுமையான நாடு, 2. நாடாளுமன்றத்தின் உச்ச உயர் மேலாண்மை, 3. நீதித்துறையின் சுயாதீனம், 4. தேசியக்கொடி, தேசியகீதம், புத்தசாசனம் என்பனவற்றிற்குத் தற்போதைய

பாதுகாப்புக்களைத் தொடர்ந்து பேணல், 5. இல்லாதொன்றாக அவர்கள் காணும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு வழிமுறையாக அதிகாரப்பங்கீட்டைப் பயன்படுத்தாதிருப்பது 6. நிறைவேற்று அதிகாரங்களை கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது., 7. மாகாணசபை முறையை ஒழித்தல் நிபந்தனைகளுக்கு மல்வத்த, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள், மற்றும் அமரபுர, ராமன்ன நிக்காயக்களின மஹா நாயக்கர்களினதும் ஆதரவு என்றும், பேச்சாளர் உரிமை பாரட்டுகின்றார். இவை வெற்றுகிடையேயான சில சொல்லுப்படியான அம்சங்களாகும். எனினும் விவகாரத்தை முழுமையாக எடுத்துக் கொண்டால், குறைந்த பட்சம் கடந்த இரு தசாப்தங்களில் மேற் கொள்ளப்பட்டு வந்த அரசியல் அமைப்புச் சீர்திருத்த இயக்கம் அனைத்துமே அது முற்று முழுதாகவே நிராகரிப்பது ஆகும். இவ்விதத்தில் இவ்வமைப்புக்கள், தீவிரவாத போக்குடையவை என ஈட்டிக்கொண்ட "புகழை" நிலை நாட்டி வருகின்றன. தங்களின் பிரச்சாரத்தைக் கிராமத்துக்குகிராமம், ஏன் கிழக்கிலும் கூட, கோவில்கள் மூலம் முன்முயற்சிகளை எடுப்பனவாக விரிவுப்படுத்த தாங்கள் தயாராயிருப்பதாகவும் அவை கூறுகின்றன.

எனினும், அத்தகைய பிரச்சாரமொன்றை முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதுணையாக அவற்றிற்கு போதுமான "ஆரதவு" உள்ளது. என்பது மிகுந்த ஐயப்பாட்டிற்கு உரியதே! அவர்களின் மேலோட்டமான, தீவிரப் போக்குடைய நிலைப்பாடு, மக்களிடையே முழுமையாக நம்பகத்தன்மையைக் காட்டியிருக்காது.

## குழப்பும் அறிகுறிகள்

நிலைமையைக் குழப்புவதற்கு ஏதுவாகவுள்ள சில அறிகுறிகள், எதிர்காலத்திற்கான நல்ல அறிகுறிகளாகத் தெரியவில்லை. பொ, ஐ. முன்னணிக்கும், ஐ. தே. கட்சிக்குமிடையே சில வேறுபாடுகள் தோன்றியுள்ளன. அரசியலமைப்புச் சீர்த்திருத்த யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஆனால் எல். ரி. ரி. ஈ அல்ல என்ற பொ. ஐ. மு. ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. அவற்றை, எல். ரி. ரி ஈ. யிடம் சமர்ப்பிப்பது, முன்னேற்ற நிலைமையை மேலும் தாமதமாக்கும். மேலும் எல். ரி. ரி. ஈ. முதலில் பயங்கரவாதத்தை கைவிட்டு, ஜனநாயக வழியில் இறங்கவேண்டும். பிரச்சினையுடன் தொடர்புடைய ஒரு கட்சி என்பதால், சீரமைப்பு யோசனைகள் இப்போது எல். ரி. ரி. ஈக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பது ஐ. தே. கட்சியின் நிலைப்பாடாகும். மற்றது, கருத்துக்கணிப்பை நடத்தும் விதம் தொடர்பாகக் கருத்துவேறுபாடுகள் இருப்பதாகவும் தெரிகிறது. கருத்துக்கணிப்பை, வடக்கு, கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களிலும் நடத்தவேண்டுமென ஐ. தே. க விரும்புகிறது. ஆனால், பொ. ஐ. மு. யோ, கிழக்கிலுள்ள மக்களை, வடக்கோடு இணைவதை விரும்புகிறார்களா என்பதை கணிப்பதற்காக அதனை கிழக்கில் மட்டுமே நடத்த வேண்டுமென விரும்புகின்றது. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக, யு. என். பி. தமிழ் வாக்குகளையும் ஜனாதிபதி சந்திரிக்கா ஆதரவுமிருந்தும் வெளிப்படையாகவே இனவாதக்கட்சியொன்றை ஐக்கிய முன்னணியுடன் சேர்த்துக் கொள்ளும் அளவில் சிங்கள வாக்குகளை வசீகரித்த மாதிரியாக முன்னிருந்த ஒரு குழப்ப நிலைக்கு மீளுவதாக இது அமைந்துள்ளது. சமீபத்தில், நாடாளுமன்றத்தேர்தல்கள் இடம்பெற விருப்பதால், ஐ. முன்னணியும், யு. என். பியும் மீண்டும் தங்களுக்குரிய வெவ்வேறு வழிகளில் ஆயத்தங்கள் செய்கின்றனவா? இது மிகவும் வருந்தத்தக்கதொரு நிலைமையாகும். இவை, பிரதான இனவிவகாரப் பிரச்சினைகளில் ஒரு பொதுவான நோக்கினை நிலைநாட்டும் எனப்பெரிதும் நம்பப்படுகிறது. தேர்தல் பிரச்சாரத்தின்போது மக்கள் அவர்களுக்கு சவால்விடுவதற்குரிய ஒரு விவகாரமாக இது அமைய வேண்டும்.

## பெரும்பான்மையினரின் கவலைகள்

உ.ஒ.ம/இ.கு, சமுதாயத்தின் சகல பிரிவு மக்களினதும் உரிமைகள் கட்டாயமாக பாதுகாக்கப்படவேண்டும். என்பதை எப்பொழுதுமே அங்கீகரித்து வந்துள்ளது. தங்களின் சொந்த உரிமைக்களுக்காக மட்டும்மன்றி சமுதாயத்தின் ஏனைய பிரிவு மக்களின் மனக்குறைகளை செவிமடுத்து, சிறுப்பான்மை, பெருபான்மை ஆகிய இருதரப்பினருமே உற்சாகப்படுத்தப்பட்டு வருகின்றன. சிறுப்பான்மையினரின் மனக்குறைகள் பற்றியும், அத்தகையவற்றை வெற்றிக்கொள்ளுவதற்கு வாய்ப்பாக அரசியல் சீர்த்திருத்தங்கள் செய்யப்படவேண்டிய அவசியம் பற்றியும் மேலே இதுவரை விளக்ககமாகக் கூறப்பட்டுள்ளது. அத்தோடு பெரும்பான்மையினருக்குள்ள அக்கறைபற்றியும் ஒரு நியாயமான அளவில் பரீசீலனை செய்யப்படவும் வேண்டும். சில சிங்கள, பௌத்த அமைப்புகளினால் வலியுறுத்தப்பட்ட கருத்துக்களில் ஓரளவு உண்மை உண்டு என்பதும், ஆனால், ஒரு தரப்பு சார்ந்ததாகப் பொருள் கோரப்பட்டதற்கும், அத்தகைய செயற்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், பௌத்தமதமும், சிங்கள மொழியும், பேரரசின் ஆட்சியின்கீழ் நூற்றாண்டுகாலமாக மிகவும் மோசமான விதத்தில், ஒடுக்கப்பட்டுவந்துள்ளதான உண்மை ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும். மேலும், சுதந்திரமும் அவசியமான நிவாரணத்தைக் கொண்டுவரவுமில்லை. இன்னுங்கூட அடக்குமுறை குறிப்பிடத்தக்கதாக அதிக அளவில் நிலவுகிறது. இதன் வெளிப்படையானதொன்றை இங்கு குறிப்பிடலாம். சிங்களப் பெரும்பான்மை மேலாண்மை அரசாங்க ஆட்சியிலும் கூட 1971, 1981 1990 ஆண்டு காலப்பகுதிகளில் நிகழ்ந்த இருநிகழ்ச்சிகளின் போது, தெற்கிலுள்ள சிங்கள இளைஞர்களின் அனேகர் கொன்றழிக்கப்பட்டனர். தற்போதைய சமுக அமைப்பின்கீழ் பௌத்த மதத்தின் மீதான அடங்கு முறை இன்னும் தொடர்வதற்க்கான மேலும் பல உதாரணங்களை குறிப்பிடலாம். எனவே, அரசியலமைப்பில் பௌத்தமதக்களுக்கு விசேட அங்கீகாரமளிக்கப்படவேண்டுமென்ற பௌத்தர்களின் கூக்குரல் விளங்கிக்கொள்ளக்கூடியதொன்று நீண்டகாலமாக இருந்து வரும் மனக்குறையின் ஆழமான உணர்வின் வெளிப்பாடே அது. மேலும் பௌத்தத்திற்கும் நாட்டிற்கும் மிடையே உள்ள நீண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, விசேட தொடர்பின் யாதார்த்தமான அங்கீகாரத்தையே இது குறித்து நிற்கின்றது. இதுமட்டுமீறிய தன்னாட்டுப்பற்றுடையதான ஒரு நிலையல்ல ஆனால் ஏனைய மதங்களுக்கும், தொடர்பாட்டிலும் நடைமுறைமிலும் தரப்படவேண்டிய அங்கீகாரத்தையும் வலியுறுத்தாமல் இதனை மட்டுமே வலியுறுத்துவதுதான் மட்டுமீறிய தன்னாட்டுப் பற்றாக விளங்குவதாகும். உ.ஒ.ம./ இ.கு. இத்தகைய பற்று எந்த வடிவிலிருந்தும், அதனை எதிர்த்து நிற்பதற்கான அவசியத்தை தெளிவாககாண்பதோடு, சிறுப்பான்மையினரின் உரிமைகள் விஷயத்தில் உறுதியாகவும் உள்ளது. ஆனாலும், சமத்துவக் கோட்பாடு முக்கியமானதெனினும் குறிப்பிடப்பட்ட சமூக யாதார்த்தங்களை மனதில்லிருத்துவதையும் உட்படுத்துகிறது என்பது உணரப்படவேண்டியதாகும். மக்களின் ஒரு பெரும் பிரிவினர் பின்பற்றும் மதத்திற்கு ஒரு நியாயமான காரணங்கருதி ஒரு விசேட அந்தஸ்த்து அளிப்பதுதென்பது நாட்டிலுள்ள கோட்ப்பாட்டின் மீள்வாதமாகாது.

கடைசியில் கிடைக்கும் அரகாங்கத்தின் அரசிலமைப்புபு யோசனைகள் (1997) பற்றிய வெளியீட்டில் வாசகம் 15ன் 1ம், 3ம் பந்திகளில் ஏனைய மதங்களுக்குப் போதுமான பாதுகாப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன. பின்னர், இந்த அரசியலைமைப்பு, புத்தசாசனத்தின் பாதுகாப்புக்கு பாரமரிப்புக்கும் அரசாங்கத்திற்குள்ள கடமைபற்றியும், சகல மதங்களுக்கும் போதுமான பாதுகாப்பளிக்கப்படவிருப்பது பற்றியும் பேசுகிறது. ஏனினும் ஏனை மதங்களைப் பேணி வளர்க்கும் நடைமுறை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. முஸ்லிம் விவகாரங்களுக்கென ஒரு திணைக்களம் இருப்பது போன்று ஹிந்து விவகாரங்களுக்கும் ஒரு தனியான திணைக்களம்

உள்ளது. கிறிஸ்த்தவர்கள் அத்தகைய திணைக்களமொன்றை இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அது ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்ததா அல்லது அவை ஏற்கனவே வெளிநாட்டு வட்டாரங்களினால் நன்கு பாராமரிக்கப்பட்டு வருவதனாலா என்பது தெளிவாக தெரியவில்லை. பணம் தொடர்பான பிரச்சினைக்கு அது வெகு தூரம் அப்பாற்ப்பட்டது. என்பதால், அவர்கள் திணைக்களமொன்றை ஏற்றுக்கொள்வதால் நலமடைவார்கள். ஏனைய மதங்களுக்குள்ளது போன்று, அது அரசாங்கத்துடன் ஆலோசனை கலப்பதற்கும் உரையாடுவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் அரசின் ஆதரவு, தலையீடு என்பன தொடர்ப்பாக பௌத்தர்கள் உட்பட சிலர் வெவ்வேறு அபிப்பிராயங்களை கொண்டுள்ளனர். இது ஓர் உண்மையான அபாயமாக இருக்கக்கூடும் எனவே மக்கள் விழிப்புடனிருக்க வேண்டும்.

சிறுப்பான்மையினரின் தேவையை விளங்கி கொண்டு ஏற்றுக்கொள்வதற்கு போதுமான பௌத்த பெரும்பான்மை இருப்பதுபோல் சிறுப்பான்மையினரும், பௌத்த பெருபான்மையினரின் தேவையை விளங்கிக்கொள்வதற்கு போதுமான உணர்வுள்ளவர்களாக இருந்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை நிலவவேண்டும். நாட்டின் நாலாப்பகுதிகளிலும் உ.ஒ.ம./இ.கு. நடத்திய கலந்துரையாடல்களின் போது சாதாரண சிங்கள தமிழ் மக்கள், இந்த விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் விஷயங்களை விளங்கி அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு தயாராமிருப்பதைக்கண்டுகொண்டது. புத்திஜீவிகள் உயர்ந்தோர் என அழைக்கப்படுவோர் சிலர்தான் அதனை ஏற்றுக்கொள்ளக் கஷ்டப்படுகின்றனர். உண்மையில் இது அனேகமாக அசாத்தியமாகவே உள்ளது; காரணம் அவர்களை வரட்டுக்கோட்பாட்டில் இறுக்கமாகக் கட்டுண்டுகிடப்பவர்கள் என்பதாகும். சில தமிழர்கள் மட்டுமல்ல, சில சிங்கள புத்திஜீவிகள்கூட, சமயசார்பற்றநாடு, சார்புத்தன்மைக்கு அப்பாற்பட்ட அரசியலமைப்புக் கோட்பாடுகள் என்பன சிறந்ததென்ற நம்பிக்கையில் வளர்க்கப்பட்டவர்கள் ஜவஹர்லால் நேருவின் மொடேர்ண் இந்தியா :(நவீன இந்தியா) என்ற நூல். மிகச் சிறந்த ஓர் உதாரணமாக நவீன மேற்கு நாடுகளினால் மேற்கோள் காட்டப்படுகிறது. ஆனால் ஏன் அது இரண்டில்ஒன்றாக அல்லது ஒன்றாக அதாவது மதசார்பற்ற அல்லது ஒரு மதசார்புடைய நாடாக இருக்க வேண்டும் என்பதற்கு நியாயமான காரணம் எதுவும் இல்லை சமய சார்பற்ற இரண்டு தன்மைகளையும் உள்ளிட்ட பெறுமானங்களாகக் கொண்டதால் அவற்றை அரசியலமைப்பில் இடம்பெறச்செய்ய முடியும் அத்தகையதொரு அரசியலமைப்பின் பெறுமானத்தையோ அன்றி செல்லுபடித்தன்மையோ எந்த விதத்திலும் குறைவுபடுத்தாது, அரசாங்கம் சமயத்தைப்பாதுகாத்துப் பேணி வளர்ப்பதை உறுதி செய்ய முடியும் உண்மையில், யதார்த்தமான சமய, சமயசார்பற்ற இரு பெறுமானங்களும் மிகவும் பயங்கரமான அபாயத்திற்குற்பட்டிருக்கும் உலகின், அவை இரண்டுமே அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெறுவது அத்தியவசியமில்லையா? உண்மையில் அவையிரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையவை; தனித்தனியாக அவற்றை கருதமுடியாது அவையிரண்டும் ஒன்றையொன்று போஷிக்க வேண்டியதாகும்.

இலங்கை சமூகத்தின் இன்றியமையாத இயற்தன்மை நூற்றாண்டு காலமாக வழிவந்த சமய, மொழி, கலாசார பண்பாடுகள், என்பன கலப்பேதம் அற்றதாகவும் குறைவுறாமலும் பாதுகாக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டு, இலங்கைக்கு விடுதலையும் சமாதானமும் ஏற்படுத்திதரும் விதத்தில், பெரும்பான்மை பௌத்தர்களை மட்டுமல்ல, இலங்கையர் அனைவரும் ஈடுபாட்டுடன் உழைப்பதை உறுதிப்படுத்தவேண்டும். அது, உண்மையில் இலங்கையின் உண்மையான சகல மதங்களுக்கும் உண்மையான சகல கோட்பாடுகளுக்கும் அல்லது தத்துவஞானங்கள் அனைத்திற்கும் பொருந்துவதாக அமையவேண்டும்.

இந்திய மாதிரியைப்பொறுத்தவரை, உண்மையில் அது மதசார்பற்ற அரசியலமைப்பே, எனினும் சமயம் தொடர்பான அதன் மனப்பாங்கு முற்றிலும் நடுநிலையானது எனச் சொல்வதற்கில்லை

அதனை வரைவதில் முக்கியபாகந்தாங்கியிருந்த ஒருவரான ஜவஹர்லால் நேரு, முற்றிலும் மதசார்பற்றவராக இருந்துள்ளவர் என்று சொல்வதற்கில்லை அது மதத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, ஒருவரின் மத அனுஷ்டானத்திற்குள்ள சுதந்திரத்தை வலியுறுத்துகிறது. எனினும் இந்தியாவில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சமயமுரண்பாடுகள், நடைமுறைகளிலுள்ள் மதச்சார்பற்ற அரசியலமைப்பு இந்தியாவின் இன்றைய தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதை உணர்த்துவதோடு மதத்தின் பங்களிப்பை, மேலும் திட்டவட்டமானதொரு விதத்தில் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அது வலியுறுத்துகிறது. இந்தியாவில் பாரத ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது இலங்கையில் எது நிகழக்கூடும் என்பதற்கு ஒரு எச்சரிக்கையாகவே அமையக்கூடும். எனவே, இலங்கையில், சமய சமயசார்பற்ற கோட்பாடுகள் இரண்டும் ஏனைய பெறுமானங்களோடு சேர்ந்ததாக அரசியல் அமைப்பில் திட்டவட்டமாக இடம்பெற்றிருக்க வேண்டியது இன்றியமையததாகும். காலங்கடந்த கோட்பாடுகளும் மூடநம்பிக்கைகளும் கட்டாயமாக களைந்தெறியப்பட்டு, அதனிடத்தில் இடம்பெறும் போரும் அரசியலமைப்பு, அதிசிறந்த நவீன சமத்துவ சமயவாய்ப்பு, விடுதலை ஆதரவுக்கோட்பாடு, பெறுமானங்கள் என்பனவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டிராமல், நாட்டின் உண்மையான தேசிய, சுதேச சமய, கலாச்சாரப்பாரம்பரியங்களை ஆணித்தரமாக பதிவு செய்வதாகவும் அமையவேண்டும்.

பெரும்பான்மைப் பொது மக்களோடு குறைந்த அளவில் தொடர்புடையவர்கள் அல்லது அவர்களால் அனுபவித்துவருவோருடன் நெருங்கிப்பழகாதவர்கள், சங். மஹாநாயக்க பற்றிய அவர்களின் எஜமான்கள் அவர்கள் மீது கொண்டிருக்கும் மேலாதிகத்தை அதி மிகைப்படுத்தபட்டவையுமாகும் என்றும் கருதப்படலாம் தலைநகரில் சௌகரிய நிலையிலுள்ள சில முற்போக்குவாதிகளும் அல்லது இடதுசாரிகளிலும், திறந்த சந்தைச் சமூகத்திற்காக அபாயகரமாக வருத்தத்தைத் தெரிவிப்போரும் கூட, அதனை ஏற்றுக்கொள்ளக்கூடும் எனினும் மகா தேரர் மனந்திறந்து பேசட்டும் இன்று அவரின் வார்த்தைகள், இலங்கையில் அடக்குமுறைக்கும் மேலாண்மைக்கும் மட்டுமல்ல; உலகமனைத்திற்கும் பொருந்தக் கூடியவை; குறிப்பிடப்பட்ட ஏனைய மதத்திலள்ளவர்களுக்கும் இது பொருந்தும்.

## நம்பிக்கையை வளர்த்தல்

பெரும்பான்மையினர், சிறுபான்மையினரின் தேவைகளை மதித்துத் திட்டவட்டமான விதத்தில் ஏற்றவாறு செயற்பட்டால், அதேமாதிரி சிறுபான்மையினரும் பெரும்பான்மையினரின் தேவைகளை மதித்து உரியமுறையில் செயற்பட்டால், அதில் ஓரளவு தியாகமும் சம்பந்தப்பட்டிருப்பின், அத்தோடு இருதரப்பிலும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வளர்ந்து நிலைமைக்கு ஏற்றவாறு அனுசரித்தும் சமரசப்போக்கோடு நடந்துகொள்ளும் மனப்பாங்கு உருவாகும் போது, பரஸ்பர நம்பிக்கை வளர்ந்து, நிலைமை முற்றிலுமாக மாற்றமடைவதற்கான ஒரு சூழ்நிலை நிச்சயமாக ஏற்பட்டுவிடும். மேலே சொன்னதுபோல, நடக்கமுடியாதது என நம்பப்பட்டது கூட நடந்துவிடும் அல்லது நடந்துவிடக் கூடும். பரஸ்பர நம்பிக்கை வளர்வது அத்தியாவசியம், வேறு வழியேதுமில்லை. எந்த அளவிலான அரசியலமைப்பு ஆக்கமோ அல்லது சட்ட இயற்றங்களோ, அது இல்லாதவரை, எவ்வித பிரயோஜனமுமளிக்காது.

இப்போது இரு பெரும் கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்திருப்பது அல்லது கட்சி இணைவுகள். முன்னேற்றப்பாதையில் ஒரு பாரிய செயற்பாடாகும். பல்வேறு மக்களும், அதிகாரக் கும்பல்களும் பல்வேறு கோணங்களிலிருந்து, சில திருப்தியற்றதான அம்சங்களைக் காண்பார்கள். ஆனாலும், அது சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்ததானதொரு ஆரம்பமாகும். இரண்டு பெரிய கட்சிகளின் இணைவின் காரணமாக ஓரளவு குறுகிய நோக்கங்களைக்

கொண்டதாக அது வெளிவந்திருக்கலாம்; ஆனால் அடிப்படையில், தங்களின் இக்கட்டான நிலைமை காரணமாக அது மக்களிடமிருந்து வெளிவந்த கட்டாயக்கோரிக்கையாகும். கட்சித் தலைவர்கள் தேர்தலின்போது, இனியும் "இல்லை" யென்று சொல்லி அவர்களை எதிர்கொள்ளமுடியாது. எனவே, அவர்கள் ஏதோ விதத்தில் தங்களுடைய உள்ளக்கிடக்கையை ஐக்கியப்பாட்டு மாதிரியில், ஆனாலும் அரை மனதுடன் வெளிக்காட்டவேண்டிய ஒரு நிலைக்கு அவர்கள் தாக்கப்பட்டிருந்தார்கள். மேலும், சர்வதேச சமூகத்தின் சில பிரிவுகளிடமிருந்த நியாயமானதாக அழுத்தங்களும் இருந்துள்ளன. இந்த யுத்தம் அவர்களுக்கு ஒரு சுமையாகவும் அமைந்திருந்தது. அச்சுமை, சண்டையிலிருபுறத்திலிருந்தும் தாக்கத்தை ஏற்படுத்திவருகிறது, ஆனாலும், உண்மையில், இரு தரப்பினர்க்கும் அவர்களின் தலைவர்களுக்கும் கூடப் பாராட்டுத் தெரிவிக்கப்படவேண்டும். சிறப்பான செயற்பாடு!

அறிவித்தபடி, அரசாங்கம், ஆகஸ்ட் முற்பகுதியில் அந்த யோசனைகளை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரும் என மிகவும் நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு, முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல சம்பந்தப்பட்ட சகல கட்சிகளும் குழுக்களும், அதிலும் குறிப்பாக சகல தரப்பினரையும் சேர்ந்த மிதவாதிகள் இந்த அரசாங்க / எதிர்க்கட்சி யோசனைகளை, உருப்படியானதொரு ஆரம்பமென வரவேண்டும். தவிர்க்க முடியாதபடி, சகல தரப்புகளையும் சேர்ந்த ஒரு சில தீவிரவாதிகள், தெரு நாய்கள் சந்திரனை நோக்கிக் குரைப்பதுபோல, ஒரு பெருங்கூக்குரலை எழுப்பமுயலும் அது அவ்வளவு தூரம் எடுபடாது பாலைவன வணிகர் கூட்டம், பயணத்துறை தொடரும். ஆக்கபூர்வமான விமர்சனங்கள் சகல புறத்திலிருந்தும் பிரவகிக்கட்டும். விவகாரங்களை அளவுக்கு அதிகமாகத் துரிதப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த யோசனைகளை ஆதரித்து தமிழ்க்கட்சிகள் எதுவும் வாக்களிக்காவிட்டாலும், அரசாங்கம், யு. என். பி மற்றும் ஆதரவுடன் அவற்றை முன்னெடுத்துச் சென்று நிறைவேற்றக்கூடும். ஆனாலும் அது மட்டு மீறியதான ஏற்றத்துக்குரிய செயற்பாடாகும். ஒரு தரப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத விதத்தில், ஒரு சமாதான தீர்வை நிறைவேற்றுவதால் என்ன பயன்? மேலும் அது நிறைவேற்றப்படுவதற்கு என்ன வாய்ப்பிருக்கப்போகிறது?

உண்மையில், தமிழ்க்கட்சிகள் அனைத்தும், யோசனைகளை ஏற்றுக்கொண்டாலும், எல். ரி. ரி. ஈ. ஏற்றுக்கொள்ளாவிடில், அதன்பிறகும் அவற்றைச் செயற்படுத்த முடியாது போய்விடும். "யாழ்ப்பாணத்தைப்பற்றியபின்"அங்கு நடந்ததென்ன? 1998ல் அங்கு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத்தேர்தல்களை தொடர்ந்து அமைக்கப்பட்ட சிவில் நிர்வாகமும் அதன் பின் விளைவுகளும் போதுமான எச்சரிக்கைகளாக அமையும். யாழ்ப்பாண மேயர் சரோஜினி யோகேஸ்வரன் கொலை செய்யப்பட்டார். அதன் பிறகு, 1998 செப்றெம்பர் 11ந் திகதி யாழ்ப்பாணத்தில், நல்லூர் கந்தசுவாமிக் கோயிலோடு சேர்ந்தாற்போலுள்ள விழா மண்டபத்தில், இடம்பெற்ற குண்டுவெடிப்பொன்றில் யாழ்ப்பான நகரத்துப் பாதுகாப்புப் படைகளின், மேல் நிலை அதிகாரிகள், அனேகமாக அத்தனை பேருமே, அழிந்தொழிக்கப்பட்டனர். திருமதி, யோகேஸ்வரனிடத்தில் அமர்ந்த பி. சிவபாலனும் மற்றும் பிரிகேடியர் சுசந்த மென்டிஸ், யாழ்ப்பாண பட்டிணத்தளபதி கப்ற்றன் ராமநாயக, யாழ்ப்பாண எஸ். எஸ். பி. சந்திரா பெரேரா, ஏ. எஸ். பி களான சந்திரமோகன், சரத் பெர்னாந்து, யாழ்ப்பாண ஓ. ஐ. சி. பிரதம இன்ஸ்பெக்ற்றர் மோகஹன்தாஸ் உட்பட குறைந்தது 12 பேரும் கொல்லப்பட்டனர்.

உண்மையில் இவை, மிகவும் வெறுக்கத்தக்க செயற்பாடுகளாகும், ஆனால், அவற்றையிட்டு அலட்டிக்கொள்வதும், ஆத்திரமடைவதும் அவற்றிற்கெல்லாம் புலிகள்மீது பழிபோடுவதும், பின்னர் அடுத்தபேரழிவு நிகழும்வரை, அதனை மறந்திருப்பதும், பலனெதையும் தரா.

யதார்த்தங்களை எதிர்கொண்டு, சமாதானத்தை எட்டுவதற்கான ஒருவழிமுறை காணப்பட வேண்டும்.

ஆகவே, சமாதான முயற்சிகள் தொடர்பாக, வேலுப்பிள்ளை பிரபாகரன், எல். ரி. ரி. ஈ. சார்ந்த யதார்த்தங்கள் யாவை? அது உண்மையில் "ஈழம் அல்லது எதுவுமில்லை" விவகாரமா? அப்படியென்றால்," யுத்தம், யுத்தம் மட்டுமே" என்பதே விடையாகும். ஒரு சிலர் அதனையே விரும்பக் கூடும். அது நாட்டிற்கு அளப்பரிய இழப்புக்களை உண்டு பண்ணுவதோடு, சொல்ல முடியாத அளவுக்கு உயிரிழப்புக்களையும், பாரிய துன்பங்களையும் தோற்றுவிப்பதுங் கூட, அவர்கள் எளிமைகளையே விரும்ர்கின்றனர் ஆனால், யாதார்த்மோ மிகமிகச் சிக்கல் வாய்ந்தது.

ஒருசிலர், பொருள் விளக்கமாதிரிக்குப் பொருந்தாத சில வெளிப்படையான உண்மைகளை கருத்திற்கொள்வதில்லை அல்லது மறந்துவிட விரும்புகிறார்கள். ஏறத்தாள 10ஆண்டுகலுக்கு முன் பிரபாகரன் பிபிஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தங்களின் அபிலாஷங்களை எய்வதற்கு வாய்ப்பாக போதுமான அதிகாரபகிர்வு வழங்கப்படின் தமிழர்கள் இலங்கைக்குள் தொடர்ந்து இருக்கத் தயாராகவுள்ளதாய்ப் பிரகடனம் படுத்தியிருந்தார். இது ஊடகத்துறையில் தெளிவாக இடம்பெற்றிருற்தது. பின்னர் 1993, ஜனவரி வெளியீடொனதில், டெய்லி நியுஸ், பொரிய தடித்த எழுத்திலான தலையங்கத்தில் எல். ரி. ரி. ஈ, ஈழத்தைக் கைவிடவிரும்புகிறது ஆனால் போதுமான மாற்றினை வலியுறுத்தவில்லை எனத் தெரிவித்திருந்தது. அது, பிரபாகரனுக்கும் சென்னத் பென்னாந்து அவர்களுக்குமிடையே நிகழ்ந்த ஓர் உரையாடல் தொடர்பானது அச்செய்தி ஈழ்க் கோரிக்கையை அவர்கள் கைவிடுவார்களா என்று ஆயர் சென்னத்தின் கேள்விக்குப் பதிலளிக்கையில், போதுமான மாற்றொன்று வழங்கப்படின் இந்தக் கோரிக்கையை தாங்கள் கைவிடுவதாக பிரபாகரன் பதிலளித்தார். பின்னர் ஆயர் சென்னத், தெற்கிலுள்ள பலருக்கும் சமஷ்டி ஏற்றுக்கொள்ள முடியாதது, என அவரிடம் தெரிவித்தார். போதுமான அதிகாரப் பகிர்வு இருப்பின் தங்களுக்கு ஒரு சமஷ்டி தேவைப்படாது என பதிலளித்தார். கலாநிதி அன்ற்றன் பாலசிங்கமும் இதே தொனியில் பேசியிருக்கிறார்.

எனினும், சில மக்கள், எல். ரி. ரி. ஈ. பற்றி கலப்பற்றதான பயங்கரவாதச் சாயலை மனத்திரையில் ஆழப்பதிந்துள்ளதால், அவர்கள் நியாயமாகப் பேசுவர் என்பதை அவர்களால் ஜீரணிக்க முடியாதுள்ளது. அத்தகைய பேச்சு குருட்டுத்தனமானது அல்லது பலவீனமான சந்தர்ப்பங்களின்போது நேரமெடுப்பதற்காகும் என அவர்கள் எண்ணுகின்றனர். ஆனாலும் அவர்கள் எவ்வாறு அதனை உறுதியாகக் கூறமுடியும்? தற்போது முன்வைக்கப்பட்ட பரிசீலனையில்லுள்ள யோசனைகள், சமர்ப்பிக்கப்படும்வரை, தெற்கிலுள்ள இருபெரும் கட்சிகளும் ஏற்றுக்கொண்டதான அடிப்படையில் எதுவிதமான சமாதான யோசனைகளும் தெரிவிக்கப்படாத நிலையில், முன்னர் மேலே சுட்டிக்க்காட்டப்பட்டதுபோல, எல். ரி. ரி. ஈ. நியாயயீனமான விதத்தில் நடந்து கொள்கிறது என்றும், விட்டுக்கொடுக்காத நிலைப்பாடுடையவர்கள் என்றும் சகல சமாதான யோசனைகளையும் நிராகரிப்பவர்கள் என்றும் அடிக்கடி கண்டனத்துகுள்ளாகி வந்திருக்கின்றனர். மேலும் அனேக கைவிட்டநிலைகளால் அவர்களை நம்புவதற்கும் ஆதாரமெதுவுமிருக்கவில்லை.

எல். ரி. ரி. ஈ, நியாயமானதொரு சமாதானமுன் மொழிவை ஏற்பதற்கு இடங்கொடாதிருப்பதாக கருதப்படினுங்கூட, அத்தகையதொரு வாய்ப்பை வழங்குவதற்கு, காரணம் என்ன, இன்னுமென தாமதம் என்பது விளங்கவில்லை, எல். ரி. ரி. ஈ, இங்கும் வெளிநாட்டிலும் முழு சமூகத்திலிருந்தும் தூரவிருப்பதாகக் கருதப்படக்கூடாது, தமிழ் மக்கள் மிகப் பெரும்பான்மையானோர் மீள முடியாத அளவுக்கு, ஈழக்கோட்பாட்டில் இரண்டறக் கலந்துள்ளனர் எனச் சில சிங்கள மக்கள் நினைக்கின்றனர், அல்லது எண்ண முற்படுகின்றனர், அது உண்மைக்குப் புறம்பான கருத்தாகும்.

யதார்த்தத்தில் அதற்கு நேர்மாறான கருத்தே அநேகமாக உண்மையாக இருக்கக்கூடும். சிங்கள மக்களிடையே கடும் போக்குடைய தீவிரவாத சக்திகள் இருப்பதுபோல தமிழ்மக்களிடையேயும் கடும்போக்குடைய தீவிரவாத சக்திகள் இருப்பது உண்மையே, ஆனால் தமிழ்மக்களிடையே மிக மிக அதிகமானோர், இலங்கை நாட்டுக்குள் ஒரு நியாயமான தீர்வு ஏற்படுவதை ஏற்பதற்கு தயாராக உள்ளனர். சமாதானத்திற்காக நியாயமானதொரு யோசனை முன்வைக்கப்பட்டால், உள்நாடு, வெளிநாடு ஆகிய இரண்டிலுமுள்ள எல். ரி. ரி. ஈ ஆதரவாளர்கள் திட்டவட்டமான விதத்தில் அதற்குச் சார்பாக செயற்படுமாறு அதன் மீது அளப்பரிய பலுவைச் சுமத்துவர். தனித்துநின்று செயற்படக்கூடிய தகமைக்கு, எல். ரி. ரி. ஈ., சர்வதேச தமிழ்ச் சமூகத்திலே பெரிதும் தங்கியுள்ளது. தனியாக நின்று அதனை சாதிப்பதற்கு ஏன் அது விழைய வேண்டும்? ஈழத்தை வென்றெடுப்பதற்குள்ள வாய்ப்பை மிக அரிது எனினும் தமிழ் உள்நாட்டு, வெளிநாட்டு சமூகங்களிரண்டினதும் அவமதிப்புக்கு மத்தியிலும் அதனைப்பற்றியிருப்பதற்கான பேராவல் பின்னணியில் அது உள்நாட்டு, வெளிநாட்டு யதார்த்தங்களை அந்த அளவுக்கு அறியாதிருந்துள்ளதா? அத்தோடு, உண்மையில் போராட்டத்தின் பழுவும் தியாகமும் உயிர்ப்பலிகளைச் சந்தித்துக்கொண்டேயிருக்கின்றன. இந்நிலையில், நீதியின் அடிப்படையில் உண்மையான சமாதானத்தை ஒரு நியாயமான உத்தரவாதத்துடன் எய்த முடியுமாயின், அவர்கள் இடைக்கால அமைதியொன்றை வரவேற்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

இப்போது தெற்கிலுள்ள இரண்டு பெரிய கட்சிகளும் சரித்திரமுக்கியவத்துவம் வாய்ந்த இந்தப்புதிய ஆரம்பத்தில் ஒன்று சேர்ந்துள்ளதால் அவை ஒன்றாகவேயிருந்து எல். ரி. ரி. ஈ உட்படத் தமிழக்கட்சிகளுடனும் குழுக்களுடனும், பேச்சுக்களில் ஈடுபடும் என நம்பப்படுகிறது. இறுதியாக வந்துள்ள செய்திகளின்படி, 1997ம் ஆண்டின் அரசியலமைப்பு முன்மொழிவுகளை நினைப்பற்றதாக்கியமைக்காக ஒன்றையொன்று குறை கூறிக்கொள்வதாக தெரிகிறது. பொது பொறுப்புக்களை ஏற்று, தமிழ்க்கட்சிகளுடனும் குழுக்களுடனும் இணக்கப்பாட்டை எய்துவதற்கு வாய்ப்பாக, யதார்த்தமான சில சீரமைப்புக்களைச் செய்வதை அவை பரிசீலிக்கும் என நம்பப்படுகிறது. காலம் பிந்திய இக்கட்டத்திலாவது அவற்றிடமிருந்து, சில முதிர்ச்சியான பொறுப்புடன் கூடிய நடத்தையை நாம் எதிர்ப்பார்க்க முடியாதா? இதுதான், இலங்கைமக்கள் தங்களின் பங்கினை அளிப்பதற்கான உரிய வேளை தேர்தல் ஒன்று அண்மித்து வருகிறது. நாடாளுமன்றத்தில் பதவிக்காலம் ஆகஸ்டில் முடிவடைகிறது. தேர்தல்கள் ஒக்றோபர் அளவில் தொடரும். சுதந்திரத்திற்குப் பின்னரான பல தேர்தல்களில், இலங்கையின் நிகழ்வுக்காயின் செல்வழியைக் குறிப்பிடத்தக்கதாகப் பாதிக்குமளவுக்கு மக்கள் தங்களுடைய எண்ணத்தைத் தெட்டத் தெளிவாகத் தெரிவித்துள்ளனர். மீண்டும் ஒருமுறை, மக்கள் தங்களின் குரலை உணர்த்துவதற்கு, ஒரு சந்தர்ப்பத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

## மக்கள் இயக்கம்

எனினும் மேலே குறிப்பிட்டபடி தேர்தல் முறையின் முக்கியத்துவத்தைப்போல, அது மட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கையில் ஏனைய வழிகளிலும், வசதிகளோடும், மக்களின் எண்ணங்களும் மனோதிடமும் இடைவிடாதபடி நாடப்படவேண்டும்.

சகல சமயங்களையும், இனங்களையும், கட்சிகளையும், குழுக்களையும் சேர்ந்த மக்கள், சகலருக்கும் நீதிகிடைப்பதான அடிப்படையில், பெரும் எடுப்பிலான சமாதான இயக்கமொன்றைக் கட்டி வளர்ப்பதான பிரச்சாரத்தில் இணையவேண்டும். பொதுக்கூட்டங்கள், உண்ணாவிரதங்கள், வீட்டுக்கு வீடான சமாதான யாத்திரைகள், பொது ஊர்வலங்கள், அணிவகுப்புக்கள், சத்தியாகிரகங்கள் என்பனவும். பூஜைகள், ஆராதனைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் போன்றவை

ஆலயங்கள், கோயில்கள், கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், கூட்டமண்டபங்கள், வெளி அரங்கம் என்பவற்றிலும் நடைபெறவேண்டும். குருமாரும், பொதுமக்கள், தலைவர்களும் அடிக்கடி அத்தகைய செய்பாடுகளின் அவசியத்தை அதிகரித்த அளவில் நோக்குவது குறிப்பிடத்தக்கதாகும். முன்முயற்சிகள் மேற்கொண்டு முன்னேற்றுவது பொறுத்து, ஏனையோர் அவர்களை பின் தொடர்வர்.

கடந்த பல ஆண்டுகளின்போது, பல்வேறு சமாதான செயற்பாடுகளிலும், ஆர்ப்பாட்டங்கள் காலச்சார, இசை நிகழ்ச்சிகள், தெருகூத்துக்கள், போன்றவற்றிலும் குறிப்பிடதக்க வளர்ச்சிச காணப்பட்டுள்ளது. சமாதானத்திற்க்கான பல்வேறு அமைப்புக்களின் பொதுசெயற்பாடுகளிலும் வளர்ச்சி காணப்பட்டுள்ளது. பின்வரும் சுலோகங்களை அத்தகைய செயற்பாடு பிரதிப்பலிப்பு என்பவற்றின் உட் கருத்தை வெளிப்படுகின்றன.

> "அடிமட்ட வளங்களுடன் சேர்ந்தாய், சமாதானத்தை அடிமட்டத்திற்கு எடுத்து சென்று மக்களின் குரலைத் தெளிவதாக உருவாக்குவோம்."
>
> "நாம் சமாதானத்திற்க்காக ஒரு சுயாதீன, ஐக்கிய சக்தியைக் கட்டியெழுப்பி, அரசியல் சமய அதிகார மையங்களின் ஆதரவைத் திரட்டுவோம்

எனினும், அது மேலும் மேலும் தெளிவுபெற்றதாக, உணரப்பட்டதாக வளர்ச்சிப்பெற வேண்டும். சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட பிரச்சினைகளை மக்கள் விளங்கிக் கொண்டு அவை தொடர்பாக குரலெழுப்ப வேண்டும். சம்பந்தப்பட்ட விவகாரங்களைச் சாதாரணமக்கள் நன்கு விளங்கிக்கொள்ளக் கூடியவர்கள். சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை அறிவதற்கு முயன்று, மக்களோடு அவை பற்றி விவாதிப்பது அவர்களைச் செயலில் ஈடுபட வைப்பதற்கு வழிகாட்டுவதும் அவர்களின் தலைவர்களைப் பொறுத்தது. சிறப்பான இந்த ஆவணம், அவ்வாறு சிந்திப்பதற்கும் செயற்படுவதற்குமான ஒரு கைந்நூலாகவிருக்கவேண்டுமென்ற நோக்கமுடையதாகும்.

ஜேர்மனியின் மக்கள் நாடக ஏட்டாசிரியர் பேர்ற்றோல்ட் பிறெஷ்ட், கொரிய மக்கள் கவிஞர், கிம் ச்சி ஹா போன்ற கனவியலாளர்கள், மக்கள்தான் என்றுமே வரலாறு படைப்பவர்கள் என்பதை இன்று மக்களுக்குப் போதித்துள்ளனர். பொதுமக்கள்தான் உண்மையான கடமைப்பாடுடைய, அனைத்துல மனித வரலாற்றின் பெறுபேற்றாளர்கள் (கிம் ச்சி ஹா), இலங்கையில் தெருக்கூத்தின் மூல குருவான நமது சொந்தக்காரர் காமினி ஹத்தோகொட்டுவேகம், அவரின் சீடர்களான நிஹால் சுரஞ்சி, குருனாகலையைச் சேர்ந்த முது கமகே இளங்கமகே, மஞ்சுளா, ஹொரனையைச் சேர்ந்த ஹப்பு ஆராய்ச்சி ஆகியோரும், வெலிக்கந்த, மனம்பிட்டிய சுவாதீன சன்ஸ்குருதிக சமுஹிக்காய (சுயாதீனக் கூட்டுக் கலாச்சார அமைப்பு)க் குழுக்களும், மற்றும் பலரும், தெருக்கூத்தின் அதிசிறந்த பங்களிப்பாளர்களாகவிருந்து, இலங்கையின் எண்ணற்ற தொலைதூரக் கிராமங்களுக்கு மக்கள் சக்தியின் மகத்தான செய்தியை எடுத்தியம்பி உள்ளனர்.

மேலே விவரிக்கப்பட்ட இச்செயற்பாடுகள் அனைத்தும், சமாதானப்பாதையிலுள்ள முட்டுக்கட்டையை அகற்றுவதற்காக உயர் முயற்சியாக இப்போது முனைப்பாக கூட்டிணைக்கப்பட வேண்டும். அத்தோடு அது, அதிகமதிகமாக இனவேறுபாட்டு எல்லைகளை ஊடறுத்து, அனைவோரினதும் உள்ளங்களின் ஆழத்தைத் தொடவேண்டும். உ.ஒ.ம.?இ.கு, வெவ்வேறு பகுதிகள் பலவற்றிவ் நடத்திய பரிமாற்ற நிகழ்ச்சிகளின் போது வெகுவாக உள்ளத்தைத் தொட்ட சம்பவங்களை நேரிற் கண்டுள்ளது, இங்கு புராதன மதங்கள் அனைத்தும், ஒன்றிணைந்து, இன்றைய நவீன முற்போக்கு அரசியல் இயக்கங்களுடன் சேர்ந்ததாக அவ்விலட்சியத்தோடு பணியாற்ற வேண்டும்.

இளைஞர்கள், பெண்கள், பிள்ளைகள், மதகுருமார் அனைவோரும் ஒரு விசேட கடமைப்பொறுப்பினை நிறைவேற்ற வேண்டியுள்ளனர், அயர்லாந்தில் யேசுபிரான் உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனையைத் தொடர்ந்து தோன்றிய கிளர்ச்சி இங்கு நினைவுகூரத்தக்கது. அன்று அவ்வாராதனையைத் தொடர்ந்து மணிகள் ஒலித்தன. மக்கள் தேவாலயங்களிலிருந்து சுதந்திர போராட்டத்தில் சேர்ந்துகொள்வதற்கான அவசர அவசரமாக வெளியேறினர். இலங்கையிலும் கூட பேரரசு எதிரிகள் படையெடுத்த போது ஆலயமணிகள் ஒலித்தன. மக்கள் தாய் நாட்டைக் காப்பதற்கான போரில் ஈடுபட தங்களின் ஆயுதங்களைத் திரட்டுவதற்காகக் கிராமத்துக் கொல்லர் கடைக்கு ஓடோடிச் சென்றனர். இலங்கைக்கு இன்று தேவைப்படுவதும் அதே விடுதலை உணர்வேயூ அது, போரிடவல்ல; சமாதானத்திற்காக, மக்களை ஒன்று திரட்டுவதற்காக சகல தரப்பினரையும் சேர்ந்த சமய சார்பற்ற சமய சார்புடைய அதிகார மையங்களுக்கும் மிகவும் உறுதியான விதத்தில், சமாதானத்துக்கு அவசியமான முன் முயற்சிகளையும், விட்டுக்கொடுப்புக்களையும், தியாகங்களையும் சமரஸங்களையும் செய்துவைப்பதில் அழுத்தங்கள் கொடுக்கப்படவேண்டும். செய்திகள், குறையிரப்பு மனுக்கள், வற்புறுத்தல்கள் என்ற வகையில், பொது ஆர்ப்பாட்டங்கள் சத்தியாக்கிரகங்கள் ஆகியவற்றின் உறுதுணையோடு அவை, வாத எதிர்ப்புக்கள் கொண்டு தாக்கப்படவேண்டும்.

வரலாற்று, சமூகப் பின்னணியை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகவிருக்கும். சிங்கள, தமிழ் மக்களிடையே அன்றும் இன்றும், பல்வேறு நிலைகளில், முக்கியமான பிணைப்புக்கள் தொடர்கின்றன. பௌத்த - ஹிந்து சமய, கலாச்சாரங்களுக்கிடையேயான பாஸ்பரபயன் - விளைவு, வரலாற்றில் மிக நீண்டகாலம் பின் சென்றதாகத் தொட்டு நிற்கின்றது. அதில் உருப்படியான இணைவுகள் இருந்துவந்துள்ள அதேசமயம், வெவ்வேறான தனித்துவங்களும் பாதுகாக்கப்பட்டுவந்துள்ளன.

பல்வேறு நிலைகளில், ஆரோக்கியமான விதத்தில், ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலை காணப்பட்டு வந்திருக்கிறது. மூன்று நவின உதாரணங்களைத் தரமுடியும், அதி சமீபகாலம்வரை, தென்பகுதியின் உட்புறத்தே இந்துருவை அண்டிய இடங்களில் உள்ள பாய் புனைவோர், தங்களின் பொருட்களின் பெரும்பகுதியை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்தனர். நீர்கொழும்பு மீனவர்கள், தங்களின் மீன்பிடித்தொழிலுக்காகக் கிழக்கிற்கு சென்றனர். வடக்கின் மிளகாய், வெங்காயச் செய்கையாளர்கள் தங்களின் சந்தைக்காகத் தெற்கை நம்பியிருந்தனர். இவை ஒரு சில உதாரணங்களை கடந்தகால முரண்டுபாடுகளை விட மேலும் வலுவான அளவில், பரஸ்பர நம்பிக்கை நல்லெண்ணமும், ஒருவரில் மற்றவர் தங்கியிருந்த நீண்ட அனுபவங்களும் மலிந்துள்ள வரலாற்றைக்காண முடிகிறது. இவை அனைத்தும், சமீபத்தைய போட்டிகளாலும் முரண்பாடுகளினாலு் அமிழ்ந்துபோயுள்ளன. ஆனாலும் அவை, மக்களின் பொதுவாழ்வில் ஆழமாகப் பதிந்துள்ளன. கற்பனைவளமுள்ள தலைவர்களால் இந்த முக்கிய வளங்களை சமாதான நோக்கத்திற்கா ஒன்றுதிரட்ட முடியும். சிங்களவர்கள், முஸ்லிம்கள்கூட பல பகுதிகளில் சமாதானமாக ஒன்றுபட்டு வாழ்ந்துள்ளனர். வர்த்தக நலன்கள் மோதிக்கொண்டபோதுதான் பிரச்சனைகள் தோன்றியுள்ளன.

## சர்வதேச சமூகங்களின் ஒற்றுமை

இலங்கையில் பொதுவாக, நிலைமைகளை தீர்மானிப்பதான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பலவெளிக்காரணிகள் உண்டு. எனவே போருக்கான காரணங்களும், முன்னதன் தொடர்ச்சியும் அவற்றில் தங்கியுள்ளன. திறந்த சந்தை, பல நாட்டவர் தொடர்பு, ஆயுத உற்பத்தித்துறைக் கூட்டமைவு என்பனவற்றின் தொடர்போடு, ஆதிக்கம் செலுத்தும் ஓர் உலகப்பொருளாதார

முறைமையும் உள்ளது. மேலும், உத்தியோகப்பூர்வ, உத்தியோகப்பற்றதான இரண்டையும், உள்ளடக்கியதான பல்வேறு உதவி முறைமைகளும் செயல்பட்டுவருகின்றன.

இனப்பிரச்சினையின் இருபுறத்திலும் நல்லதாகவும், கெட்டதாகவும் உள்ள பல்வேறு காரணிகளின் தாக்கம் மிகவும் சிக்கல் வாய்ந்தது. ஆனாலும் நிலைமையில் பெரிதளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக பல்வேறு சர்வதேச சக்திகளுக்கு தகைமையுண்டு; நிகழ்வுகளின் போக்கில் அவை பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்ற உண்மையை சந்தேகிக்க முடியாது. எனவே, இலங்கையில் எந்தவொரு சமாதான முயற்சிகளிலும், பங்களிப்புச் செய்வதற்கு சர்வதேச சமூகத்துக்கு, ஒரு முக்கிய பாகந்தாங்க வேண்டிய கடமைப்பபாடுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச நிலையில் அடிக்கடி குறிப்பிடப்படும் ஓர் அம்சம், பயங்கரவாதம் பற்றியதாகும். இந்தப் பயங்கரவாத அம்சம் முன்னர் இங்கு குறிப்பிடப்பட்டது போல, உள்ளூர் மட்டத்திலும் அடிக்கடி சம்பந்தப்படுத்தப்படுகிறது. அதனால், இவ்விவகாரம் சரியான தொலை அண்மைத் தோற்ற நோக்கில் பரீசீலிக்கப்பட வேண்டியத அவசியமாகும். ஒரு தரப்பு, மற்றத்தரப்பில்தான் பயங்கரவாதத் தோற்றத்தைக் காண்பதாகப்படுகிறது. ஆனால், ஒரு தரப்பு மற்றத்தரப்பிலுள்ள பயங்கரவாதத்தையும் விளங்கிக்கொள்வது இருதரப்பிற்கும் அவசியமாகும். அடிப்படைப்பயங்கரம் எங்குள்ளது என்பதை அனைவரும் அறிந்துகொள்வது அதைவிட அவசியமாகும்.

எனவே, சர்வதேச மட்டத்தில் கூட, விஷயங்களை சரியான கண்ணோட்டத்தில் நோக்க முயல்வது இன்றியமையாதது. பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உண்மையில் அதன் வேர் வ கிளைகளைக் தெரிவதற்கு வ ஏதுவாகத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தங்களும் இயற்றப்பட்டுள்ளன. ஓரளவுக்கு, மேலும், கீழ்மட்டங்களிலிருந்து அடிக்கடி விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ஒரு மட்டுப்படுத்தப்பட்டதான பதிலாகவே இது நிகந்துள்ளது ஆனாலும் உண்மையில், மிக உயர்ந்த மட்டத்திலுள்ளவர்களே, அவர்களின் சொந்த வீட்டு வாசற்படிகளில் பயமுறுத்தப்பட்டும் தாக்கப்பட்டும் இவை வரும்வரை அந்த உயர்மட்டங்களிலிருந்து விடை வரவில்லை அனைத்தின் மூலம் கருதப்பட்டது என்னவெனில், மூன்றாவது உலகின் ஒருதலைப்பட்ட வகுப்பினரின் மிகக்குறைந்த கீழ்மட்டத்திலிருந்தே பயங்கரவாதம் உருவானது என்பதாகும்யூ ஆனால் இது உண்மையா? ஹீரோஷிமா, நாகசாகி விவகாரம் எப்படி? (அணுகுண்டும் ஹைதரசன் குண்டும்) வரலாற்றில் என்றுமில்லாத மிக மிக அச்சுறுத்துவதான இந்தப் பயங்கரவாதச் செயற்பாடுகள், மூன்றாம் உலகைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்தா வந்தன? அச்சமயம் ஜப்பான் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டு அது போர் ஓய்வுக்குத் தயாரான ஒரு நிலையிலிருந்தது என்பதை நினைவுகூர்ந்தால், அந்தப் பயங்கரவாதத்தின் முழுமையான எல்லை எந்தளவுக்கு இருந்திருக்கும் என்பதைக் கணித்து உணரக் கூடியதாகவிருக்கும். ஆனாலும், மேற்கு நாடுகள் சோவியத் யூனியன் முதலாவதாக அங்கு சென்றுவிடுவதைத் தடுப்பதற்காகவே அந்தத் தீர்மானத்தை எடுத்தன என்றாலும் இது, வரலாற்று நூல்களில் இன்னும் இடம்பெறவில்லை. நாயினக் கோட்பாடு எப்படி? அது எப்படி உருவானது? பின்னைய கேள்விக்கு அநேகமாக போதுமான அளவில் விடையளிக்கப்பாடாதிருக்கலாம். அல்லது வினவப்படாலுமிருந்திருக்கலாம். இவையெல்லாம் கலப்பற்ற பயங்கரவாதம் மற்றொரு உதாரணம் குறைந்த அளவிலும் கலப்பற்றதான, ஆனால் இன்றைய சமூகக்கட்ட அமைப்பில் கண்குக்குப்புலப்படாததான பயங்கரவாதம் இங்கு குறிப்பிடப்படுவது பொருத்தமாகவிருக்கும். கலாநிதி மேர்வின் டி.டி.சில்வா 2000 ஜன 22,23,ருந்திகளில் டெய்லி நியூஸில் எழுதிய ஒரு கட்டுரையில், பின்வரு குறிப்பிடுகிறார்.

இன்று உவகின் மிகப்பெரிய செல்வந்த நாடாக விளங்கும் அமெரிக்கா, தான் 170பில்லியனயர்களையும் 250,000 டெக்கா மில்லியனயர்களையும் 9,000,000 மில்லியனர்களையும் கொண்டிருப்பதாகவும், தனது மூன்று மிகமிகச் சிறந்த செல்வந்தர்களின் கூட்டுமொத்தச் செல்வம், உலகின் 48 மிக ஏழ்மையான நாடுகளின் மொத்த வருமானத்தை விஞ்சியுள்ளது. என்றும் பெருமையடித்துக்கொள்கிறது. உலகின் வழிக்காட்டும். ஒளியாகத் தன்னைக்காட்டிக்கொள்ளும் அமெரிக்கா, ஏகபோக சுயநலக்கோட்ப்பாட்டைக் காத்துப்பொந்திது வைத்து தனது நிலைய அதிகார, அனுகூல ரீதியில் திட்டமிட்டியற்தொன்றாகச், சுரண்டப்பட்ட லட்சகனக்கான மக்களின் ஏக்கதவிப்பிற்கும் ஓலத்திற்கும் எதிராக பயன்படுத்தவிருக்கிறது. இம் மக்கள் தங்களைப்பிணைந்திருக்கும் உள்நாட்டு, சர்வேதேச முறைமையினை அடிப்படையில் மீட்மைப்தற்காக ஏக்கத்தில் சிக்கிதம் தவிக்கின்றனர்.

இந்த நிலைமை சகிக்கமுடியாததொன்று அமெரிக்காவும் நாடுகளும், அவற்றிற்கு மறைமுக ஆதரவு தந்து சர்வேதேச அமைப்புக்களான ஐ.நா.ஐ.எம்.எப், உலக வங்கி, ஜி.ஏரிரி, அதன் வாரிசானடபிறப்ப ரிஓ என்பனவும், கூடுதல் மனிதாபிமானதாகும். நீதியானதும் உறுதியானதுமான ஓர் உலகை மீண்டும் உருவாக்குவதற்கு விரும்பாத நிலை தொடர்ந்து கொண்டேயிருக்கும.

ஏழைகளின் ஓலம், செவிடனின் காதில் ஊதிய சங்கொரியாகத் தொடரமுடியாது!

பயங்கரவாதத்தை அதிவலுமிக்கதாகத் தூண்டுவோர், பயங்கரவாதத்தை அழித்தொழிக்கவென ஒன்று சேர்வதான் காட்சி, உண்மையில் அந்தளவுக்குத் துன்னபில்லபவிட்டாலும் சிரிப்புக்கிடமானது அதனை விடவும் மேலும் கூடுதலான பயன்னற்றதுமான பயங்கரவாதத்தை துண்டவோர், ஏணியைக் கீழிறக்கி, மேலே உள்ளவர்களிடம் பயங்கரவாதத்தை அழித்தொழிக்குமாறு மன்றாடுவதான அபார காட்சியாகும். எனினம் இது நடக்கமுடியாது என்ற உணர்வு உதயமாகிக் கொண்டிருக்கிறது. எனவே உச்சத்தில்லுள்ளவர்கள், அங்கிருந்து கீழிறங்கிவர ஆரம்பித்து கீழேயுள்ள்வர்களோடு அதேமாநாட்டு மேசையில் அமரத் தொடங்கியுள்ளார்கள் இது அயர்லாந்திலும்(அயரில்) மத்திய கிழக்கிலும் நிகழ்கிறது. உடனடியான பூரண வெற்றியை உத்தரவாதப்படுத்த முடியாது எனினும், அது உண்மையில் ஓர் ஆரோக்கியமான குறிப்பிடதக்கதான விடயமாகும்.

உலகிலுள்ள முற்போக்குச்சக்திகள், இந்த யாதார்த்தங்களையும், போக்குகளையும் மனத்திலிருத்தக் கொள்ளவேண்டும் இலங்கையிலுள்ள முற்போக்கு சக்திகளுக்கு, இலங்கையில் நீதிற்கும் சாமாதானத்திற்குமான அவற்றின் போராட்டத்திற்கு, உலகினது முற்போக்கு சக்திகளின் கூட்டொருமைப்பாடு நிலை அவசியமாகும். ஆனால், அது, ஒரு பொது தொலை நோக்கு ஆற்றல், பகுப்பாய்வு, செயற்பாட்டிற்ளய திட்டவட்டமான பிரச்சனைகள் என்பன உணரப்பட்டதாக, அறிவுபூர்வமானதும், சம்பந்தம் தெரிவிக்கப்பட்டதான கூட்டெருமைப்பாட்டின் அடிப்படையில் இருக்கவேண்டும். எனினும், இப்போதுதான் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத பகுப்பாய்வு, அத்தோடு முன்னர் குறிப்பிட்டதும். பயங்கரவாத பகுப்பாய்வும், அத்தோடு முன்னர் குறிப்பிட்டதும் ஒரு முனைக்கோடி நிலைப்படாகவோ அல்லது தத்துவ ஞானமாகவோ பொருள்படாது. ஹீரோஷிமா, நாகசாக்கி பற்றிய யதார்த்தங்களை விளங்கிக்கொள்வது, வரலாற்றில் ஒரு வின்யற்றன் சேர்ச்சிலோ அல்லது ஒரு பிறாங்களின் டி. றாய்வெல்ற்றோ தாங்கிய தீர்க்கமான பாகத்தின் நயத்தலைத்தடைசெய்யாது. அதேமாதிரி நாளகசாகிக் கொள்கை ஜேர்மனியில் தேன்றிய எனினும், ஜேர்மனி, பேத்தோவன்? பாஹ்போன்றொரையும் தந்துள்ளது என்பதை மறந்துவிடமுடியாது.

அமெரிக்கா கோடீஸ்வரர்களை மட்டுமல்ல, மார்ட்டின் லூதர் கிங்கையும், மணித உரிமைகள் இயக்கத்தையும் வியற்னாம் யுத்தத்திற்கெதிரான இயக்கத்தையுங் கூடத் தந்துள்ளது. ஐக்கிய ராஜ்யததிலும் ஐரோப்பாவிலும் இடம்பெற்ற அணுஆயுதப் போராட்டத்திற்கெதிரான இயக்கம், குறிப்பிடத்தக்க மற்றொரு நிகழ்வாகும். அனைத்திற்கும் மேலாக உலகெங்கிலும் நிலை பெற்றுவரும் முற்போக்கு இயக்கம் தேசிய மற்றும் நாடுகளின் எல்லைகளை ஊடறுத்ததாகப் பரவி தகவல் அறிவார்ந்த அடிப்படையில் அபிவிருத்தியடைந்து, மக்களுக்கு மக்கள் ரீதியில் தொடர்பை ஏற்படுத்தி, திட்டவட்டமான பிரச்சினைகளில், ஈடுபாட்டுடன் கூடிய செயற்பாடுகளைத் தோற்றுவித்திருக்கின்றன. இவை அனைத்திலும் வெளிப்பாடுகள் நவம்பர் மாதம் அமெரிக்கா, சியற்றலில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் (டபிள்யு ரி ஓ) கூட்ட்தில சங்கமமகரியுள்ளன. வீதிகளிலும், மகாநாட்டு மண்டபத்திற்குள்ளும் மக்களின் சக்தி வெடித்துள்ளது. அந்த முற்போக்கு இயக்கம், மகாநாட்டு ஆயுதங்களைத் தாமதிக்கச் செய்து, டபிள்யு ரி ஓ வின் தலைமைத்துவம், அதன் பல்வேறு தீர்மானங்களை மகாநாட்டில் நிறைவேற்றுவதை, ஆணித்தரமான விதத்தில் தடுத்துவிட்டது. டபிள்யு ரி ஓவும், உலக வங்கி சர்வதேச ரீதியும் போன்ற ஏனைய சர்வதேச நிறுவனங்களும், உலகின் ஓரங்கட்டப்பட்ட மக்களின் தேவைகளை உரிய முறையில் சரிப்படுத்தி ஆவண செய்ய வேண்டுமென்பதை முற்போக்குச் சக்திகள் தெளிவுபடுத்திவிட்டன. உண்மையில் அணு மீளமைக்கப்படவேண்டியவை. எனவே, இவ்வியக்கம், அதுமுதல், தங்குதடையின்றி முன்னேறிவருகிறது.

இப்போது இலங்கையிலுள்ள அதிகாரப்பரவலாக்கத்திற்கான முற்போக்கு இயக்கம், சர்வதேச நிறுவனங்களும், உலகின் ஓரங்கட்டப்பட்ட மக்களின் தேவைகளை உரியமுறையில் சரிப்படுத்தி ஆவண செய்ய வேண்டுமென்பதை முற்போக்குச் சக்திகள் தெளிவுபடுத்திவிட்டன. உண்மையில் அவை மீளமைக்கப்படவேண்டியவை. எனவே, இவ்வியக்கம், அதுமுதல், தங்குதடையின்றி முன்னேறிவருகிறது.

இப்போது இலங்கையிலுள்ள அதிகாரப்பரவலாக்கத்திற்கான மற்போக்கு இயக்கம், சர்வதேச சமூகத்தின் கூட்டொருமைப்பங்களிப்பினை அவசரமாக நாடி நிற்கிறது. இவ்வியக்கத்தின் பின்னணி சம்பந்தமாகவும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய, பிரச்சினைகள் தொடர்பாகவும், இந்த ஆவணம், உரிய தகவலை வழங்க உதவும் என நம்பப்படுகிறது அதிகாரப்பரவலாக்கலுக்கான இயக்கம் தீர்க்கமானதொரு கட்டத்தை அடைந்துள்ளது என்பது தெளிவாகும். எனவே, சம்பந்தப்பட்ட விவகாரங்களைப் படித்தறிவதிலும் அவற்றின் அவற்றின் தீர்விலும் அக்கறை கொண்டு தத்தமது சொந்த அரசாங்கமாக்க வேண்டும். இலங்கையில், அரசாங்கம், எதிர்க்க்ட்சி, எல். ரி. ரி. ஈ. மற்றும் சமயசார்பற்ற, சமய சார்புடைய அதிகாரமையங்களோடும் தொடர்புகொண்டு, அதற்கு ஆதரவு திரட்டுவதில் நாட்டங்கொண்ட குழுக்களை, உலகெங்கிலும் பரந்துகிடக்கும் நாடுகளிடையே இலங்கை தேடிவருகிறது.

உயர் இடங்களில் நிலவும் பயங்கரவாதம் பற்றிக் கூறப்பட்டபோதும் வ அது உண்மையில் சொல்லப்படவேண்டியதுமாகும் என்பதால் சொன்னவை விலக்கிக் கொள்ளப்பட முடியாதவை அரசாங்கத்துக்கு அரசாங்கம், அரசாங்கத்திடமிருந்து மக்கள் கூட்டொருமைக்கு என்ற வகையில் ஒத்துழைப்பும் (நன்கொடை உட்பட) அனேக உதவிகளும் வழங்கப்பட்டேயிருக்கின்றன. இதற்காக இலங்கை மிகவும் கடமைப்பட்டுள்ளது. இதனைவிட ஒரு சமாதானத்தீர்வுக்கான மத்தியஸ்த, உறுதுணை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலே குறிப்பிடப்பட்டதற்கியைய சமீபத்தில், இந்தியா, ஐய்கியராஜ்யம் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் அனேகமாக ஆலோசனை கலக்கப்பட்டதாக நோர்வே, அரசாங்கம், அரசாங்கத்திற்கும் யு. என் பிக்குமிடையே சமாதானப் பேச்சுக்களைநடைப்பெறுவதற்கு துணைந்து ஊக்குவிப்பதான முயற்சியில்

ஈடுப்பட்டிருந்தது. சமாதான முயற்ச்சிக்குத் துணையிருந்து ஊக்குவிப்பிதற்கு அல்லது மத்தியாஸ்தம் செய்து வைப்பதற்கெனப் பெயர் குறிப்பிடவோர் வரிசையில், அனேகமாக நெல்சன் மண்டேலா, ஆயரற்றுற்று, ஐப்பான், மற்றும் வட அயலார்ந்து; ஐ.நா. பேச்சுக்களில் மத்திய கிழக்கு; இஸ்யேல் சமாதான பேச்சுக்களில் மத்தியஸ்தராக துணைந்து ஊக்குவித்தவர்களின் ஏனைய ஒருவர் இடம்பெறலாம்.

போர் நிலைமையும் கூட மோசமடைந்து வருகிறது. நாட்டுக்கும் மக்களுக்கும் அதன் பாதிப்பு, அதிகரித்த அளவில் நம்பிக்கை இழந்த நிலையைத் தோற்றுவித்து வருகிறது. நேரடியாக சம்பந்தப்பட்டோரும், நேரடியாக பாதிக்கப்பட்டோருமான மக்கள் அனுபவித்து வரும் துன்பதுயரங்கள், விவரிக்க முடியாத அளவுக்கு அத்தனை மோசமானதாக உள்ளது. பைத்தியகாரத்தனம் கோலோச்சுகிறது, இலங்கையின் இனமோதலிலிருந்து விடுபடும்வழி ஒரு கூட்டான வேண்டுகொளிலிருந்து) சுருக்கமாகச் சொல்வதென்றால் நிலைமையின் பொறுப்புணர்ச்சி வாய்ந்த தன்மையும் அதற்கான அவசரமும், போற்றத்தக்கதொரு பதிலுக்காக, ஓலமிட்ட வண்ணம் காத்திருக்கின்றன.

## விசேட அக்கறைகள்

முடிவுரையாக, சில விசேட அக்கறைகள் தொடர்பான விஷயங்கள் சுருக்கமாகத் தரப்படுகின்றன. அவை சுருக்கமாகத் தரப்படுவதற்கான காரணம், அவை முக்கியத்துவம் குறைந்தவை என்பதனால்ல; ஆனால் இவ்வாவணம் விரும்பத்தக்க அளவினதை விட ஏற்கனவே நீண்டுவிட்டது என்பதனாலாகும். மேலும், உ. ஓ. ம/இ. கு இந்தக் கருப்பொருள்கள் சிலபற்றி, வேறாகவும் எழுதியுள்ளது; அத்தோடு இக்கருப்பொருள்கள் பற்றிய வேறு ஆக்கங்களும் உள்ளன. இவற்றையிட்டு, முழுமையாக தொடர்பு கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படவில்லை! அவற்றின் முக்கியவத்துவத்தை வலியுறுத்துவதற்காகவே அவை இங்கு குறிப்பிடப்படுகின்றன.

### 1. உண்மை ஆணையம்

தென் ஆபிரிக்காவிடமிருந்து ஒரு பாடம் கற்றுக்கொள்ள முடியும். முன்னால் விரோதிகளும் எதிரிகளும், இப்போது அதே அரசாங்கத்தில் பணியாற்ற வேண்டியிருந்தது. எனவே நெல்சன் மண்டேலாவும் எப். டபிள்யு. டி. கிளேக்கும், நேருக்கு நேரான முரண்பாடுகளுக்கு உட்படாத விதத்தில் ஒரு வழியைக் காண வேண்டியிருந்தது. விடை, உண்மை ஆணையத்தின் உதயமாகும். ஒருமித்த கவனம், குற்றவாளியர் என்பதைக்கண்டுபிடித்து அவனுக்கே அல்லது அவளுக்கோ தண்டனை வழங்குவதல்ல அதன் இலட்சியம் திரையை அகற்றி மாறாக, உண்மையைக் கண்டறிவதும், உண்மை என்ன, உண்மையில் என்ன நடந்தது ஏன் அது நடந்தது என்பனவற்றைத் தெரிந்துகொள்வதற்குமானது அது உதாரணத்திற்கு, *1983ல்* நடந்ததென்ன? யார் பொறுப்பு? என்பன போன்றவை அதாவது, இனப்போருக்கு யார் காரணம் என்ற பிரச்சினையில் கவனத்தைக் கவர்வதாகும். அவ்வேளை இங்கு அரசாங்கம் சொன்னதுபோல, இடது சாரிகளும் ஜே. வி. பியுமா பொறுப்பு? அல்லது அது அரச பயங்கரவாதத்தை நின்று இயக்குவோரின் செயற்பாடான அரச பயங்கரவாதமா? சரியான பதில் தரப்படுவதோடு, அதற்கான பொறுப்பும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டதும் மன்னிப்பு என்ற ஒன்று அவசியமாகும். மன்னிப்பு சமாதானத்தின் கதவைத்திறக்க உதவுகிறது. உலகின் பல நாடுகளில், மன்னிப்பு பெரியதொரு விடுதலைச் சக்தியாக விளங்குகிறது. வெகு தொலைவிலில்லாத ஒரு நாளில், தெற்கிலுள்ள மக்கள் (தலைவர்களின் சார்பில்) போருக்கான

பொறுப்பை ஏற்று, வடக்கின் மக்களிடம் வெளிப்படையாகவே மன்னிப்புக் கேட்கலாம் என நம்பலாம்; பின்னர், வடக்கிலுள்ள மக்கள் (தலைவர்களின் எல். ரி. ரி. ஈ யின் சார்பில்) அவர்களின் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கான பொறுப்பை ஏற்று மன்னிப்புக் கோரலாம். அது சமாதானக் கதவைத் திறக்க உதவும் பரஸ்பர நம்பிக்கை உருவாகி, அது பின்னர் அதிசயங்களை விளைவிக்கும் ஆனால் அவை உடனடியான அதிசயங்களாக இருக்கமாட்டாது. உண்மையான சமாதானத்திற்கான பாதை மிக நீண்டது என்பது நினைவிற்கொள்ளப்பட வேண்டியதாகும்!

## 2. சுயேட்சையான ஆணையங்கள்

பி. ஏயும், யு என்பியும் சுயேட்சையான மூன்று ஆணையங்களை உருவாக்க இணங்கியுள்ளன.

(அ) தேர்தல் ஆணையம்

சுயேட்சையான நீதியான ஒரு தேர்தலை நடத்துவதற்கு விகிதாசாரப்பிரதிநிதித்துவம் போன்ற விஷயங்களையிட்டுத் தீர்மானிப்பதற்கு நுழைந்துள்ள சில கேடுகளைக் களைவதற்கான செயல்முறைக்கென அதன் திருத்தியமைக்கப்பட்ட மாதிரியொன்று வரையப்படவேண்டும். தேர்தலில் நிற்பதற்கு மிக அதிக அளவிலான பணம் தேவைப்படுவதால், சாதாரண மனிதன் கருத்தேர்தலில் நிற்பதற்கான வாய்ப்பு மிகமிக அரிது. எனவே தேர்தல் சட்டங்கள் முற்றுமுழுதாகச் சீரமைக்கபபடவேண்டும்.

(ஆ) பொலிஸ் ஆணையம்

(இ) அரசாங்க சேவை ஆணையம்

## 3. நீதிச் சேவைகள் ஆணையம்

சுதந்திரமான நீதிச்சேவைகள் ஆணையம் ஒன்றும் மிகவும் தேவைப்படுவதாகத் தெரிகிறது. "அரசியல் மயப்படுத்தல்" தொடர்ந்தும் எதிர்க்கப்படவேண்டும் தனியார் மயப்படுத்தலையும் திறந்த சந்தையின் தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கு ஏதுவாகவும், நீதிச் சேவைகளை, உலக வங்கியின் மா-பெரும் நிதி உதவியோடு, மாற்றியமைப்பதற்கு அல்லது கையாள்வதற்குமான ஒரு திட்டம், இரகசியமாக உருவாக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது இதுவும் தடுக்கப்பட வேண்டும். பொதுமக்களின் தேவைகளை முதன்மைபெற வேண்டும்.

## 4. பெருந்தோட்டச் சமூகம்

இலங்கை மக்களின் எந்தவொரு பிரிவையும் போன்றே, பெருந்தோட்டச் சமூகமும் முக்கியமானதொன்று. பெருந்தோட்டத் தொழிலாளர்கள், துன்பங்கள் போராட்டங்கள் என நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளனர். அவற்றின் மூலம் அவர்கள் தங்களுடைய இந்து மதத்தையும் கலாசாரத்தையும் பாதுகாத்து, மகத்தான சிறப்பியல்புகளை வளர்த்துக்கொண்டுள்ளனர். பெருந்தோட்டத் தொழிலாளி, மிகக் கூடுதலான அளவில் சுரண்டப்பட்டிருப்பினுங்கூட, பல்லாண்டு காலமாகத் தொடர்ச்சியாய்த் தேயிலை உற்பத்தித் துறை மூலம், சமீபத்தில் தைத்த ஆடைத் தொழிற்துறை, ஈடான வளர்ச்சிபெற்ற காலம வரை, மிகக் கூடுதலான வெளிநாட்டு நாணயமாற்றைப் பெற்றுத்தந்துள்ளனர் என்பதை என்றும் மறக்கமுடியாது.

நீண்ட வரலாற்றுப் போராட்டத்தின் போது, பெருந்தோட்டத் தொழிலாளர் தமக்கென ஈட்டிய அனுகூலங்களை, அவர்கள் உள்ளாக்கப்பட்ட பெருத்த சுரண்டல்களுடன் ஒப்பிடப்படும்போது, மிகவும் சொற்பமேயூ ஆனால், பெருந்தோட்டத் தொழிலாளர்களை என்றுமே அவ்வாறு கீழ்நிலையில் வைத்திருக்க முடியும் என்பது நினைத்துப்பார்க்க

கூட முடியாததொன்று இலங்கையின் அரசியல், முழுமையில், அவர்களுக்கு உரிய இடம் வழங்கப்படவேண்டும். இந்த நாட்டத்தில், இலய்கையிலுள்ள ஏனைய சமூகங்கள் தங்களின் உறுதிப்பாட்டினை அவர்கள்பால் நீட்டிக்க வேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு எட்டப்படும் ஒரு நியாயமான தீர்வில், பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகங்கள் தங்களின் உறுதிப்பாட்டினை அவர்கள்பால் நீட்டிக்கவேண்டும். இலங்கையின் இனப்பிரச்சனைக்கு எட்டப்படும் ஒரு நியாயமான தீர்வில் பெருந்தோட்டத்தொழிலாளர்கள் சமூகத்தின் உரிமைகள் விவகாரமும், இடம் பெற்றிருக்கவேண்டும்.

அவர்களுக்கென்று, ஒருவலயச்சபை (அதிகாரப்பகிர்வின் ஓர் உப அலகு) அமைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

5. அகதிகளை அவர்கள் சொந்த இல்லங்களில் மீளமர்த்துவது, ஒரு சமாதானத்தீர்வின் ஓர் இன்றிமையாத கூறாக இருக்கவேண்டும். அதேமாதிரியே, நஷ்டஈடு வழங்கலும் அமைய வேண்டும். 1990ம ஆண்டு வடக்கிலுள்ள தங்களின் வீடுகளிலிருந்து சுமார் ஒருவார காலத்துக்குள்ளாக வெளியேறும்படி வற்புறுத்தப்பட்ட) 75.000 முஸ்லிம்கள் தொடர்பான துன்பியல் நிகழ்வு, விசேட கவனத்துக்குரிய ஒரு விஷயமாகும்.

## 6. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை

ஒன்றில் நாடாளமன்ற அதிகார முறைமைக்குத் திரும்ப வேண்டும். அல்லது திருத்தங்களுடன் கூடியதான ஒரு மாற்று முறை இருக்கவேண்டும். தற்போதுள்ள மாதிரியில் அதனைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு இடமில்ல போர் காரணமாக முழுநாட்டினதும் மனோநிலை கூர் உணர்வற்ற துன்பநிலையைப் பறைசாற்றிக்கொண்டிருப்பதால், அதனைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கான அவசியம் நியாயப்படுத்தப்படுகிறது.

## 7. உடன்பாட்டுநிரல்

உடன்பாடு காணப்பட்ட நிரல் என்பது அதிகாரப்பரவலுக்குட்பட்ட ஒரு அரசியலமைப்பில் இடம்பெறும் ஒரு வழமையான அம்சமாகும் தவிர்க்க முடியாதபடி, ஒதுக்கப்பட்ட நிரலிலே அன்றி பிராந்திய நிரலிலோ சேர்க்கப்படமுடியாத சில விஷயங்களும் இருக்கவே செய்யும். இலங்கையைப் பொறுத்தவரை அத்தகைய ஒரு விஷயம் காணிநிலம் சம்பந்தப்பட்டது. இவ் விவகாரம் தொடர்பாக மத்தியஅரசாங்கம், உள்ளூராட்சி ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்தே இதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். இவ்விஷயம் தொடர்பாக, எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, இணக்கப்பாடு எய்தப்பட்ட நிரலை மீண்டும் கொண்டுவருவதே வழி. 1987ல் இவ்விவகாரம் அந்த நிரலில் இடம்பெற்றிருந்தது. பிரச்சினைகள் தோன்றியதால் கூடத் தொடரப்பட்டது. உற்சாகமிக்கவர்களான அரசியலமைப்புச் சட்டத்தரணிகள், இணக்கப்பாடு கண்ட அந்த நிரலை ஒதுக்கிவிடுவதன் மூலம், பிரச்சினைகத்குத் தீர்வுகண்டு வியடலாம் எனக்கருதி, 1995ம் ஆண்டு, காணி நிலம் சம்பந்தப்பட்ட விஷயத்தை மாகாண நிரலில் இடம்பெறச்செய்தனர், அது மத்திய அரசாங்கத்துக்கு உகந்ததாகவிருக்கவில்லை என்பதால், அது அதனை 1997ல், ஒதுக்கப்பட்டதான நிரலில் சேர்த்துக்கொண்டது தமிழ்க்கட்சிகளக்கு அது, ஏற்றுக்கொளத்தக்கதாகவிருக்கவில்லை, எனவே அந்த தமுட்டுக்கட்டையிலிருந்து விடபடுவதற்கான வழி, மீண்டும் முன்னர் இணக்கப்பாடு கண்ட அந்த நிரலை மீண்டும் சமர்ப்பிப்பதாக விருந்தது நம்பிக்கையீனம் காரணமான ஒரு நிலைமையில், அது செயற்படமுடியாது; ஆனால் ஒரு நியாயமான சமாதானத் தீர்வு வரையப்பட்டால், பரஸ்பர

நம்பிக்கை ஏற்பட்டு. அது செயற்படவழிதோன்றும். திருகோணமலைத்துறைமுகம் சர்ச்சைக்குரிய மற்றொரு விவகாரம். அது, அரசாங்கம் உள்ளூராட்சி ஆகிய இரண்டினதும் கூட்டுக்கவனத்தை ஈர்க்க வேண்டிய தொன்றாகும்.

## 8. பிராந்திய சபைக்கலைப்பு

பிராந்திய சபை ஒன்றினைக் கலைப்பதற்கான நிபந்தனைகள் விஷயத்தில், இணக்கப்பாடு இருக்க வேண்டும். பிராந்திய சபையொன்று கலைக்கப்படுவதாயின், அதுபற்றி மீஉயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்யும் உரிமை இருக்க வேண்டும்.

## 9. படைக்கலைப்பும் தேசியப்புனர்நிர்மாணமும்

சேவையிலிருந்து விலக்கப்படும்போது, சகல பாதுகாப்புப்படை வீரர்களுக்கும் ஊர்காவல் படைவீரர்களுக்கும் வேலைதரப்படுவதற்கான உத்தரவாதமளிக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கான திட்டமொன்று ஒரு சமாதானத்தீர்வின் இன்றியமையாத ஒரு பதிலாக இடம்பெற்றிருக்க வேண்டும்.

அத்தகையதொரு திட்டம், உணவு, பாதுகாப்பு, மற்றும் பொதுவான கிராமிய, பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு தேசியத்திட்டத்தின் ஒரு கூறாக இருக்கவேண்டும். அத்தகைய தேசியத்திட்டமொன்று வரையப்படும்போது, தேசிய காணி மற்றும் விவசாய சீரமைப்புக்கான இயக்கம் (மொன்லார்) போன்ற அமைப்புகள் இயக்கங்கள் என்பனவற்றின் ஆலோசனையும் ஒத்துழைப்பும் பெறப்படவேண்டும்.

வர்த்தகத்தைத் தாராளமயப்படுத்தல், உலகமயப்படுத்தல் போன்ற துறைகளில், இலங்கையிலும் உலகிலும் அதிசமீபத்தில் ஏற்பட்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில், இலங்கையின் விசேடத் தேவைகள், நிலைமைகள், முன்னுரிமைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, பொருளாதார அபிவிருத்தித் தற்போதுள்ள நுட்பமுறையில் மீண்டும் கவனம் செலுத்தி, ஒரு நுட்பத்திட்டத்தைத் தயாரிப்பதற்குள்ள தேவையை, உணர்ந்து, அத்தகைய அமைப்புகளும் இயக்கங்களும் அவற்றில் தங்களை முனைப்பாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளன என்பது இங்குக்குறிப்பிடத்தக்கது.

## 10. உழவர்கள்

இலங்கையின் முதுபெரும் உழவர்கள் அமைப்பான அகில இலங்கை உழவர்கள் மா மன்றம் (1943), இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 90 வட்டமாக உள்ள உழவர்கள், நீண்டகாலமாகவே புறக்கணிக்கப்பட்ட ஒரு பிரிவினராக இருந்துவந்துள்ளதைக்கருத்திற் கொண்டு, பொருத்தமானதொரு எண்ணிக்கையில், சிங்கள, தமிழ், பிரதிநிதிகளைக்கொண்ட சபையொன்றினை நியமிப்பதற்கு, அரசியலமைப்புச் சட்டத்தில் வகைசெய்யப்படவேண்டுமென, யோசனை கூறியுள்ளது. மிகச் சிறந்ததான இந்தயோசனை, நெடுங்காலமாக இருந்துவரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக அவசரமாக அங்கீகரிக்கப்படவேண்டும்.

## 11. சுற்றாடல்

நவீன கைத்தொழில் சமூகத்தின் செயற்பாட்டு மாதிரியின் விளைவாகச் சூழலுக்கு ஏற்பட்டுள்ள மட்டுமீறிய மாசடைவு, சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான தேவையை அதிகரித்த அளவில்

உணர்த்திவருகிறது. இதற்கு எதிர்ப்புக்காட்டுவதாக, பாராட்டப்படவேண்டியதாய் மக்கள் இயக்கங்கள் பல தோன்றியுள்ளன. இரணவில, கந்தலம, நுரைச்சோலை எப்பாவல போன்றவை அன்றாடம் வீடுகளில் உச்சரிக்கப்படும் சொற்களாக விளங்குகின்றன. பல நாட்டவர் பொருளாதார முறைமை உலகவங்கி, ஐ எம். எப் டபிள்யு ரீ ஓ போன்றவற்றை உள்ளடக்கிய நாடளாவிய ரீதியில் எதிர்ப்புக்கள் தோன்றியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சூழல் தொடர்பான பிரச்சினைகளை ஒழுங்குமுறையாகக் கையாள்வதற்கு சுதந்திரமானதொரு சூழல் ஆணையம் நிறுவப்படுவது அவசியமாகும்.

## 12. சுகாதாரச் சீரமைப்பு

தற்போது மிகவும் திருப்தியற்றதாக உள்ள சுகாதார சேவையை சாதாரண மக்களின் தேவைகளை நிறைவான வீதத்தில் பூர்த்தி செய்யக்கூடியதாக நாட்டின் சுகாதார சேவைமுறைமை, திருத்தியமைக்கப்படவேண்டும்

## 13. கல்விச் சீரமைப்பு

கல்விச் சீர்த்திருத்தத்திற்கென அரசாங்கம் யோசனைகளை முன்வைத்துள்ளது. ஆனாலும் அவை, பூரண திருப்தியாயிருப்பதற்குப் போதுமானவையாயில்லை. தனியார் மயப்படுத்தலுக்கு உகந்ததாகவல்லாது, பொதுமக்களின் தேவைகளைப்ப'ர்த்தி செய்வதற்கு வாய்ப்பாக, ஒரு கல்வி முறை உருவாக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திற்கு அழுத்தங்கொடுக்கும் விதத்தில், ஒரு தொடரான கலந்துரையாடல் முறை, புகுத்தப்பட வேண்டும்.

## 14. பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள், பிள்ளைகள்

பெருமளவில் ஓரங்கட்டப்பட்டுள்ள பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள், பிள்ளைகள் என்போர் இலங்கையின் முழுமை அரசியலில் சமத்துவமாக நடத்தப்படுவதற்கு வாய்ப்பாக அவர்களை ஒன்றிணைப்பதற்கு மேலும் உருப்படியான வழிமுறைகள் தொடர்ச்சியாக நாடப்படவேண்டும். இதற்கு இன்றியமையாததொரு தேவை, உத்தியோகப'ர்வ, உத்தியோகப'ர்வமற்ற இரண்டிலும் மிக உயர்ந்த நிலைகள் நாடாளுமன்றம், பிராந்திய சபைகள் முதல், கிராம அமைப்புகள், ஆலயங்கள், கோவில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயக் குழுக்கள், குருமார் சார்ந்த சகல அடிமட்டங்கள் வரையிலும் நியமனங்களில் கோட்டா நிறைக் கோட்பாடு பின்பற்றப்பட வேண்டியிருக்கும். பின்வருவது பெண்களுக்கான ஒரு தேசிய நிரல் என்ற தலைப்பில் லண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாரியோ கோமஸ், 1998 ஒக்றோபர் 19 திகதியில் லங்கா கார்டியனில் எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோலாகும்.

கோட்டங்கள், ஒதுக்கீடுகள், உறுதிப்படுத்தும் செயற்பாடு என்பனவற்றிற்கான அடிப்படைக்கோட்பாடு எளிதானது வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்ட அல்லது தற்போது அனுகூலமற்ற நிலையிலும் குழுக்கள் உள்ளன. எனவே அனுகூலமுடைய குழுக்களுக்கு இணையாகப் போட்டிபோடுவதற்கு அவர்களுக்கு ஒரு கோட்டா அல்லது ஒதுக்கீட்டு முறைமை தேவையாக உள்ளது. சமநிலையியுள்ளோரை சமமாக நடத்துவதற்கும் சமநிலையில்லாததோரை சமயீனமாக நடத்துவதற்கும், சமத்துவம் அவசியமாகும். இந்திய உயர் நீதிமன்ற நீதிபதியொருவர் ஒரு சமயம் தெரிவித்ததாவது

சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டுள்ளோர் - பெண்கள், பிள்ளைகள், மாணவர்கள், இளைஞர்கள், ஆகியோர் - நேரடியாகவும், மறைமுகமாகவும் பல வழிகளில் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இது சம்பந்தமாக அதிலும் குறிப்பாக பெண்களுக்கெதிரான வன்முறைப்பற்றி சமீபத்தில் அதிகமதிகமாக எழுதப்பட்டுவந்திருக்கின்றன; எனவே, இது பற்றி இங்கு குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் பல்கலைகழகங்களில், பகிடி வதை என்றமாதிரியில் இடம்பெற்று வரும் வன்செயல் பற்றிக் கொஞ்சம் குறிப்பிடபடவேண்டியுள்ளது. இது, துரிதமாக பாடசாலைகளுக்கும் பரவுகிறது. சமீபத்தில் இரண்டு தொலைக்காட்சி நிலையங்களில் இருந்து இது தொடர்பாக இரண்டு நேரடி ஒளிப்பரப்புக்கள் இடம்பெற்றிருந்தன. அவை, அனேகமாக ஒரே தன்மையினவாகவே அமைந்திருந்தன. மோசமான விதத்தில் பகிடிவதை இடம்பெற்றிருந்தது. தொடர்பாக ஆசியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே உரையாடல் மாதிரியில், உண்மையில் நடந்ததென்ன, அதற்கு யார் பொறுப்பு போன்றவை அலசப்பட்டன. ஒவ்வொன்றிலும் வெளிப்படையாக ஆசியர்களே வென்றனர். அவர்களில் விவேகமும் மனோவலிமையுடைய ஒரு ஆசிரியை, மிகுந்த துணிவுடனும் ஆணித்தரமாகவும் விவேகமாகவும் அவ்வன்செயலை, உண்மையில் மாணவர்களின் பயங்கரவாதத்தை தெளிவாக விளக்கினார் மேலும் சில ஆசியர்களும் பங்கெடுத்துக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் பக்குவமானதாகவும்,பவ்வியமாகவும் ஆதரவு தந்தனர். ஒப்பீட்டு நோக்கில், மாணவர்கள் முரட்டுத்தனமான தன்மையையும் நாகரிகமற்ற போக்கையும் காட்டிக் கொண்டனர். அவர்கள் நலல்தோர் சொற்போர் நடத்தினும், அவர்கள் வெளிப்படையாகவே தோல்விகண்டனர். ஆனாலும், ஒரு நிகழ்ச்சியின் முடிவுக்கட்டத்தில், பரிசீலனையிலுள்ள பகிடிவதை நிகழ்வதற்கு முன்னதாக, இரண்டு ஆண்டு காலத்தில் வன்முறையோ, பகிடிவதையோ இடம் பெறவில்லையென்பதை, ஆசிரியர் குழாம் ஏற்றுக்கொண்டது. மாணவர்களில் ஒருவர் ஆத்திரமடைந்தவராக உரத்த குரலில் சொன்னார் "ஏதாவது ஒரு சம்பவம் நிகழ்ந்த போதுதான் நீங்கள் வருவீர்கள், குற்றங்காண வருவீர்கள். சாட்சிகளைத் தேடுவீர்கள், சாட்சியங்களைத் திரட்டுவீர்கள், தீர்ப்பளிக்கத் தயாராக ஆனால் மற்றைய வேளைகளில் நீங்கள் எங்கே? கிட்டவுங் கூட வரமாட்டீர்கள். நாங்கள் அனுபவிக்கும் துன்பங்கள் எப்படிப்பட்டவை? எங்களின் நிலைமைகள், குறைகள், பிரச்சினைகள், எங்களின் ஏமாற்றங்கள், இவையெல்லாம் உங்களுக்குத் தெரியாது." எத்தனைவிதமான கருத்துமோதல்கள் இப்போது உண்மையான குரு சிஷ்ய உறவில்லை படிப்புமில்லை, படிப்பித்தலுமில்லை. விட்டுக் கொடுப்புகளுமில்லை. இதேமாதிரியே, தலைவர்களுக்கும் மக்களுக்குமிடையே உறவுகளில் பெரிய விரிசல்!

எனவே, மாணவர் பலமும், பெண்கள் பலமும் ஒழுங்கமைக்கப்பட்டு, அங்கீகரிக்கப்படவேண்டும். நாடாளுமன்றத்தில், அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கவேண்டும். அப்படியென்றால் தான், பிள்ளைகளும் சமூகத்தில் உரிய இடத்தைக் கொண்டிருக்க முடியும். தற்சமயம், நாடாளமன்றத்தில் பெண்களின் பிரதிநித்துவம் வெறும் 5% மே. இந்திய நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு, 30% பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டிருக்கிறது. இலங்கையோ, இது விஷயத்தில் மிகவும் பின்தங்கிய ஒரு நிலையிலேயே உள்ளது!

பல்கலைக்கழக மட்டத்தில், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே உள்ள இடைவெளிபற்றிக் குறிப்பிடப்பட்டபோதிலும் ஒரு விஷயத்தை இங்கு சொல்லித்தானாக வேண்டும். நிலைமை எவ்வாறிருப்பினும், முற்போக்குச் சிந்தனையுள்ள பெரும் எண்ணிக்கையான பல்கலைக்கழக உறுப்பினர்கள், மக்கள் இயக்கத்துடன், சேர்ந்து, மனித உரிமைகள் விஷயத்தில் பாராட்டப்பட்த்தக்க பங்களிப்பினையும் செய்துள்ளனர். சமாதான இயக்கத்திலும் அவர்களுக்கு அதிக அளவில் பங்களிப்பும் செய்வதற்கான வாய்ப்புள்ளது. எனினும், மேலே குறிப்பிட்டப்படி, கல்விமுறையில் உள்ள மட்டுப்பாடுகளை அவர்களுக்கு

சமநிலையில்லாதோருக்கிடையே சமத்தவத்தை ஏற்படுதுவதற்கு, சமத்துவமின்னையை ஒழிப்பதற்கும், திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

## 15. ஊடகம்.

சுதந்திரமா ஒரு ஊடக ஆணையமும் அது இலகுவில் எய்த முடியாதது எனினும், அத்தியாவசியமாகும். சமாதான வாக்கமும், அரசியலமைப்புச் சீர்திருத்தமும் இலங்கையின் முழுமையான வாழ்க்கை முறைமையிலிருந்து வேறாகப்பரிசீலிக்க முடியாதவை என்பதையும் உணர்த்துவதற்காக மேற்குறிப்பிட்ட விஷேட அக்கறைகள், மிகச் சுருக்கமாக அட்டவணையிடப்பட்டிருக்கின்றன.

## 16. நியாயமான கண்காணிப்பு

ஆலோசனைச் சமாதானக்குழு ஒன்றின் தேவைப்பற்றியும் சமாதான தீர்வொன்றின் நிறைவேற்றத்தை நியாயமாகக்கண்காணிப்பதன் அவசியம் பற்றியும் மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சமாதான இணைக்கப்பாடுகள் எய்தப்பட்டப் பின்னர், பல கைவிட்ட நிலமைகள் இடம்பெற்றிருந்தால், நியாயமான கண்காணிப்பிற்க்கான ஒரு குழுவின் தேவையும், ஓர் இடையருத கண்காணிப்பு முறைமையும் இருக்கவேண்டியது அவசியம் என்பது உணரப்பட்டிருக்கிறது. அத்தகைதொரு கண்காணிப்புமுறை, வழமையான நாடாளுமன்ற முறைமைகளை இணைந்து நிறைவாக்கும். சுயோச்சையான க்ண்னியத்துகுரியோரையும் பல்லேறு நலன்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியோரரையும் உள்ளடக்கியதாக அது நாடாளமன்றத்தில் நியமிக்கப்பட்டு அது நாடாளமன்றத்துக்கே பதில் சொல்லக் கூடியவாறு விளங்கவேண்டும்.

**குறிப்பு** மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு நலன்களையும் பிரநிதித்துவப்படுத்துவதாகப் போதுமான எண்ணிக்கையில், அது அமையுமானால், இரண்டாவது சபையொனறுக்கான தேவை அகன்றுவிடும்!

**வண மககல்கடவெல புண்ணியசாரதேரோ**
இணைப்போசகர்

**M. K. செல்வராசா**
இணைப்போசகர்

**N. M. M. I. ஹுசேன்**
இணைப்போசகர்

**திருமதி டல்சி டி சில்வா**
கூட்டிணைப்பாளர்

**சேவக யொகான் தேவானந்த**
கூட்டிணைப்பாளர்

**நிமல் முனசிங்க**
இணைச்செயலாளர்

**நீதிக்கும் சமாதானத்திற்குமான**
**உலக ஒத்துழைப்பு மன்றம்**
**இலங்கைக்குழு**

17/2, திலகா கார்டின்ஸ்
நுகேகொட - 10250
இலங்கை

தொலைபேசி : 94-(0)1-852370. பாக்ஸ் : 94-(0)74-300103.

மின்அஞ்சல் : ahimsasl@sltnet.lk
இணையத்தளம் : www.wsf-sl.org

## விடுபட்ட பகுதி

தயவு செய்து 11ம் பக்கத்தில் உள்ள **அதிகாரப்பகிர்வு அது என்ன?** தலைப்பிற்கும் **இணைப்பா அல்லது பிரிப்பா** தலைப்பிற்கும் இடையில் பின்வரும் பகுதியை வாசிக்க


### செயல்படுத்தும் திறன்

அதிகாரப்பரவல் என்பது கேட்பதற்கு நன்றாகத் தோன்றும், அதை நடைமுறைப்படுத்த முடியுமா? இது வரையும் அது தோல்வியடையவில்லையா? எவ்வளவு பணம் விரயம் பண்ணப்பட்டது. அதேபோல சுதந்திரம் தோல்வி கண்டது, விடுதலை ஏழைகளுக்கு அல்ல செல்வந்தரே பெற்றுக் கொண்டனர் என்று கூறப்படுகின்றது - மேலும் சிலர் வெள்ளை எசமான்கள் நன்றாகச் செயலாற்றினர் அவர்கள் தொடர்ந்து இருந்திருப்பின் நிலைமை நன்றாக இருந்திருக்கும் எனக் கூறுகின்றனர். சுதநதிரமும் எதிர்பார்த்த பெறுபேறுகளைத் தருவிக்காதது போல, அதிகாரப் பரவலும் தோல்வியைக் கண்டுள்ளது எனக் கூறுவதில் ஐயமில்லை. ஆனால் இவை இரண்டும் முன்னேற்றமான இயக்கங்கள் என்பது உண்மை. வரலாற்றை ஒருபோதும் திருப்ப முடியாது. சுதந்திரமும், அதிகாரப்பரவலும் நற்பயனளிப்பதற்கு மக்கள் அயராது உழைக்க வேண்டும் - இவை இரண்டும் மக்களின் முன்னேற்ற சக்தியின் தேவையான கருவிகள் மாகாண மட்டத்தில் அதிகாரப்பரவல் ஒரு சில வெற்றிகளை கண்டுள்ளது - உதாரணமாக 1987ல் நடைபெற்ற முதலாம் மாகாண மன்றத் தேர்தலில், இடது சாரி இயக்க குழுக்கள், ஜனதா விமுக்தி பெரமுன ஆகிய பின்தங்கிய மக்களை பிரதிநிதித்துவம் செய்த கட்சிகள், மாகாண சபை மட்டத்தில் ஓரளவு பிரதிநிதிகளை வெற்றியடையச் செய்தன. இது ஒரு ஆரோக்கியமான முன்னேற்றம் மாகாண மட்டத்தில் அதிகாரத்தைப் பரவும் போதும் மக்கள் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்வர். இவற்றில் பலவீனங்களும் உண்டு. இவைகள் திருத்தப்பட வேண்டும் - இவை மக்கள் தெரிவிக்கும் குறைபாடுகளை அவர்களின் உரிமைகளை மதித்து நல்ல முறையில் திருத்தி அமைத்தால் அதிக பலனுள்ளதாயிருக்கும்.

ශ්‍රී ලංකාවේ යෝජිත පළාත් 5

இலங்கையில் ஆலோசிக்கப்பட்ட மாகாணங்கள் 5

**Proposed Five Provinces in Sri Lanka**




**Note : Used for illustrating talks on Sharing of Power.**

## உலக ஒத்துழைப்பு மன்ற இலங்கைக் கிளையின் வெளீடுகள்

1. **நீதிக்கும் சமாதானத்துக்குமான இலங்கை பற்றிய உலக ஒத்துழைப்பு மன்றம் இலங்கையிலும் தாய்லாந்திலும் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்ச்சித்திட்ட அறிக்கை, 1990 மே மாதம்.**

2. **சமாதான வேண்டுகோள் ஜனவரி 1992**
இலங்கையின் யுத்தப் பிரச்சினைகளும் சமாதான விடயங்களும் பொதுவான சமாதான யோசனைகளும் அளாவிய சிறுகுறிப்பு.

3. **யுத்தத்துக்கு முற்றுப்புள்ளிவைத்து சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கும் கூட்டு இயக்கமொன்றை ஆரம்பிப்பதற்கான வேண்டுக்கோள் 1992 ஒக்டோபர்** பொது நிலைவரம்பற்றியதும் சமாதானத்துக்குமான விசேட யோசனைகள் பற்றியதுமான சுருக்க உரை.

4. **சமாதானத்தொண்டர்களின் கைந்நூல், 1993 நவம்பர்**
உலக ஒத்துழைப்பு மன்ற இலங்கைக் கிளையின் சமாதான யோசனைகள் பற்றிய விளக்கவுரையும் அவற்றினால் எழும் வினாக்களுக்கான விடைகளும்.

5. **சமாதான யோசனைகள், 1994 மார்ச்சு.**
உலக ஒத்தழைப்பு மன்ற இலங்கைக் கிளையின் சமாதான யோசனைகள் அதிகாரக் கையளிப்பு தத்துவங்களின் ஒதுக்கல் காணி நிர்ணயம்? ஆகியன பற்றிய இணைப்புகளும் கையொப்பப்பட்டியலும்.

6. **உயர்ந்த எட்டு அம்ச மார்க்கம். சமாதானத்துக்கான இன்றிமையாத எட்டு விடயங்கள் 1994 நவம்பர்**
இரண்டு தேர்தல்களையும், அண்மையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு/ படுகொலையினையடுத்து தற்போதைய பின்னணியில் சமாதான யோசனைகளுக்குச் செய்யப்பட்ட புதிய விளக்கம்.

7. **அதிகாரப் பகிர்தல் எமது காலங்களின் அறை கூவல் - அதிகாரப்பரவலாக்கல் குறித்த ஒரு பகுப்பு.** வரலாற்று பின்னணி தற்போதைய சூழ்நிலையும் எதிர்காலப் பலனும் - 10வது ஆண்டு வெளியீடு - 2000 உ.ஒ.ம/இ.கு

## உலக ஒத்தழைப்பு மன்றம் / இலங்கை குழுவால் 1995 மே மாதம் நோன்மதிநாள் வெளியிடப்பெற்ற அறிக்கை பற்றிக் கல்வியாளர் பின்வருமாறு புகழ்ந்துள்ளார்.

"பிசு பிசுத்தும் போகும் புஸ்வாணம், ஒத்த பிரசாரப் போலிக்குப் பதிலாக நீண்ட, நேரிய நம்பிக்கையினை அடித்தளமாகக் கொண்ட பிரம்மாண்டமான சமாதானக் கோவிலைக் கட்டி எழுப்பும் பொருட்டு நீங்கள் மேற்கொண்டுள்ள இடையறா முயற்சியினைப் பெரிதும் பாராட்டுகின்றேன். இது எமது நாட்டு மக்கள் அனைவரினதும் உயிருக்கும் சுதந்திரத்துக்கும் உத்தரவாதமளிக்கும் நோக்கில் எம் மத்தியில் வாழும் சிறியதோர் குழாத்தினரேனும் தனித்தனியாகவும் கூட்டாகவும் இதயசுத்தியுடன் பணிபுரிவதன் அவசியத்தை அறிவுறுத்தும் பொருட்டு சுமார் இருபத்து ஐந்து வருடங்களாக மேற் கொள்ளப்பட்ட முயற்சியாகும்.

உங்கள் இவ்வாண்டு வெசாக்தின செய்தியினை நன்கு வாசித்தேன். அனைவரினதும் மானத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் சமாதானத்தையும் நியாயத்தையும் நிலைநாட்டவும், மிக நீண்டகாலம் எமது நாட்டு சமுதாய கட்டமைப்பினை மாசுபடுத்திய வன்முறை, பயங்கரவாதம், அடக்குமுறை என்பனவற்றையும் பல்வேறு பொருளாதார சுரண்டல்களையும் ஒழிக்கவும் துணைபுரிய முக்கிய திறமுறைகளைக் கொண்ட வாய்ப்பாடு ஒன்று அச்செய்தியில் அடங்கும். மோதலுக்குச் சமாதானத் தீர்வொன்றை முன்வைக்கும் எந்த அரசியல் பிரகடனத்துக்கும் இவ்வாவணத்தில் உள்ள அரிய கருத்துக்கள் இன்றிமையாதனவையாகும்.

**காலநிதி எச்.ஏ.ஐ.குணதிலக்க, முன்னாள் நூலகப் பொறுப்பாளர், பேராதனைப் பல்கலைக்கழகம். 5 தொகுதிகளைக் கொண்ட மாபெரும் இலங்கை நூற்பெயர் அகராதியினை தயாரித்த உலகப் புகழ்ப்பெற்ற ஆசிரியர்.**

உங்கள் விஞ்ஞாபனம் சர்வேதேச அங்கீகாரத்தைப் பெறும் என எதிர்பார்க்கின்றேன். உலகமெங்கிலும் உள்ள தகராறுகள், சண்டைகள் மற்றும் ஏனைய பல இக்கட்டான நிலைகளுக்குத் தீர்வுகளைக் கொணரக்கூடிய சின்னமாக அது அமையும் எனவும் நினைக்கின்றேன்.

**ஜோன் பற்றில், பா. உ., பொதுமக்கள் மன்றம், இலண்டன் உலக ஒத்துழைப்பு மன்ற ஐக்கிய இராச்சியக் குழு.**

உயரிய எட்டு அம்ச மார்க்கம் - சமாதனத்துக்கு இன்றியமையாத எட்டு விடயங்கள் என்னும் ஆவணத்தில் உங்கள் கருத்துக்கள் போற்றத்தக்கனவாகும். அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை நான் மனமார வரவேற்கின்றேன். இவ்வரிய பணியுடன் என்னை இணைத்துக் கொள்வதில் பெருமை அடைகின்றேன்.

**(பேராசியர் கார்லோ பொன்சேகா, பீடாதிபதி, மருத்துவப்பீடம், களனி பல்கலைக்கழகம்)**

சகல இன, மத மக்களனைவரையும் ஒன்றிணைக்கும் சக்தியுள்ள ஆன்மீக இயக்கம் நம்பிக்கையற்ற தன்மைக்கு முகங் கொடுக்கும் மக்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டி - வறிய மக்கள் தங்கள் தோழமையில் நம்பிக்கையுடன் உழைக்க முன்வரும் நண்பன்

இந்த இயக்கம் எல்லைப்புற இடங்களில் மலையக தோட்டப்பிரதேசத்தில் தெற்கிலுள்ள கிராமங்களில் சமத்துவமாக இயங்குகிறது. இலங்கை எங்குமுள்ள பலதரப்பட்ட மக்கள் குழுக்களாக சமாதானம் உருவாகுவதற்கு தைரியத்துடனும் செயல்முறை அன்பிலும் தமது அயலவருடன் 'கடினமாக உழைக்கின்றனர்.

இலங்கைக்கு சமீபத்தில் வருகை தந்து எமது இயக்க நடவடிக்கைகளை அவதானித்த ரிப்பன் லீட்ஸ் மறை மாவட்ட இளைப்பாறிய கட்டளைக் குரவர் டோனி கோம்பர் கூறியது.